190380

சிந்தாமணி

May 1927

C

JL
Y15,m2. N24
27.3.10
190380

[illegible]

மே, 1927.

JL
Y15ம2,N24
N27.3.10
190380

# CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] May 1927. [No. 10.


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः


JL
Y15m2, N24
1N27·3·10
190380

## சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.


COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.



(*All Rights reserved by the Authoress*)


### सुबोधराम चरिते

॥ किष्किन्धाकाण्डमारम्भः ॥

मारुतिसेवितचरणं पुरुहूततनूभवस्य दर्पहरम् ।
वरुणालयगम्भीरं करुणानिलयं रघूद्वहं नौमि ॥

---

विकसत्पङ्कजश्रेणिपरागसुरभिशिवः ।
पम्पासरस्तटे मन्दं ववौ मलयमारुतः ॥ १ ॥

पंपासरस्तटे *பம்பா நதிக்கரையில்* विकसत्पङ्कजश्रेणिपरागसुरभिशिवः *மலர்ந்துள்ள தாமரைகளின் நறு மணங்கொண்டு வீசுகின்றதான* मलयमारुतः *மலய பருவதத்தினின்றும் வீசுங்காற்றானது* मन्दं *மெதுவாக* ववौ *வீசிற்று* ॥ १ ॥

तस्मिन्वसन्तसमये सीताविरहकर्शितः ।
मलयानिलसंस्पर्शाद्दूयते स्म रघूद्वहः ॥ २ ॥

तस्मिन् *அந்த* वसन्तसमये *வசந்த ருதுவில்* सीताविरहकर्शितः *சீதையின் பிரிவால் வருந்துபவரான* रघूद्वहः *ஸ்ரீராமர்* मलयानिलसंस्पर्शात् *மலய மாருதத்தால்* दूयते स्म *வருந்தலானார்* ॥ २ ॥

प्रेषितस्सूर्यपुत्रेण सुग्रीवेणानिलात्मजः ।
भिक्षुवेषं समाश्रित्य बभाषे रामलक्ष्मणौ ॥ ३ ॥

सूर्यपुत्रेण *சூரிய குமாரனாகிய* सुग्रीवेण *சுக்ரீவனால்* प्रेषितः *அனுப்பப்பட்டவரான* आनिलात्मजः *வாயு புத்திரரான அனுமார்* भिक्षुवेषं *சந்நியாசி வேடத்தை* समाश्रित्य *எடுத்துக் கொண்டு* रामलक्ष्मणौ *ஸ்ரீராம லக்ஷ்மணர்களை (கண்டு)* बभाषे *பேசினார்* ॥ ३ ॥

(*To be continued*)




# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—வைகாசி. [இதழ் 10.


## பெண் கல்வியும் தேச முன்னேற்றமும்.

(பத்திராதிபர்)

இந்தியாவில் கற்றவர் மற்றவர் அனைவரும் உச்சரித்துக் கொண்டிருக்கும் திருமந்திரம் தேச முன்னேற்ற மென்பதேயாகும். ஒரு தேசம் உள்ளபடி முன்னேறவேண்டுமானால் அதன் குடி மக்கள் நல்லொழுக்கம் நற்புத்தி இவைகள் கொண்டு வாழ்தலவசியம். ஜனங்களிடையே ஒற்றுமையிருத்தலவசியம். தேச மக்கள் வீரம் செறிந்தவர்களாக விளங்கல் அவசியம். தேச முன்னேற்றத்திற்குப் பொருளாதாரநிலை பலம் பெற்றிருக்கவேண்டுவது பற்றி தேச ஜனங்கள் பொருளீட்டல்செய்து வாழ வேண்டும். இவர்களிடையே பிறர்க்குபகாரம் செய்யும் நற்குணமமைந்திருத்தல்வேண்டும். தேசத்தினர் தன் மதிப்புடன் நடக்கும் தன்மையினராகப் பொலியவேண்டும். ஒரு தேசத்திடையே—அத்தேசத்தில் வாழும் மக்களிடையே—மேற்கண்டமுறைகள் அமையப்பெறுவிடின் அத்தேசம் ஒரு நாளும் முன்னேற்ற மடைந்து வாழமாட்டாதென்பது வெளிப்படை. தேச மக்களிடையே நல்லொழுக்கத்திற்குக் கல்வியும், ஒற்றுமை நிலவுவதற்கு நல்லறிவும், வீரர்களாயிருக்க தேக பலமும், பொருளீட்டல் செய்ய மனோற்சாகமும், பிறர்க்குபகரிக்கப் பரோபகாரசிந்தையும், தன் மதிப்புடன் நடக்கச் சுய மரியாதையில் நோக்கமும் பொருந்தினாலன்றி மேற் கூறிய உத்தம குணங்களுடன் அவர்கள் முன்னேற்றமடைதல் முடியாத காரியம். ஒரு தேசம் முன்னேற்றமடைவதற்கு அந்நாட்டிலுள்ள பெண்மணிகளே மூல காரணமாவார்கள். பெண்ணுலகமென்றால் அது ஆடவர்களால் ஒரு சாதாரணப் பொருளாகவும் இன்ப மளிக்கும் இயந்திரமாக

வும் கருதப்படும் வரை தேசம் முன்னேற்றமடைதல் பகற் கனவன்றே. நாகரிக வாழ்க்கையில் பெண்கள் அடிமை வாழ்க்கையில் வீழ்த்தப்பட்டுத் திறமையற்றுப் பேசும் பதுமைகளாக இருக்கிறார்களன்றி முற்காலத்தில் அவர்கள் புத்தி பலமும் தேக பலமும் சுயத்தீர்மானமும் கல்வியறிவும் தீர்க்காலோசனையும் தேசாபிமானமும் கொண்டு சிறப்புடன் வாழ்ந்தார்கள் என்பதை நினைக்குங்கால் நமது முன்னோர்களின் சீரிய ஒழுக்கத்திற்கும் அரிய முயற்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அத்தாய்மார்களின் கல்வியறிவு மூல காரணமாயிருந்து வந்ததென்பதை நன்கறியலாம். ஜீவோற்பத்தி காலத்தில் தாயின் மூலமாக ஏற்படவேண்டிய நல்லறிவை மனிதன் அடையப்பெறாது போயின் அச்சன்மம் உபயோகமுள்ளதாகாது. தேசமென்றும், தேச ஊழியமென்றும், தேச முன்னேற்றமென்றும், தேச விடுதலை என்றும், தேசத்தின் சுதந்திரமென்றும் பெருங் கூச்சலிட்டுத் திரிவதால் மட்டும் தேசம் முன்னேற்றமடையமுடியுமா? தாயிடத்தில் நற்புத்தி, நல்லொழுக்கம், ஒற்றுமை, தேக பலம், முயற்சி, பரோபகாரம், சுய மரியாதை முதலியன அமைந்திருக்குமாயின் இவ்வுயர் குணங்களைப் பின்பற்றி அத்தாயின் வயிற்றிற் பிறந்த மக்களும் மேன்மையுடன் வாழ்ந்து தம்தேசத்திற்குப் பெரும்புகழை விளைவித்து அயல் நாட்டினரும் தங்களைப் பின்பற்றக் கூடிய தொழில் முறைகளிலும் ஆராய்ச்சியிலும் தேசத்தொண்டிலும் சிறந்து விளங்குவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மனித வாழ்க்கையும் தேச முன்னேற்றமும் பெண் கல்வியை யடிப்படையாகக் கொண்டுள்ளதென்பதை நம்மவர் அறிந்து கொள்ளுங்காலமே நாட்டிற்கு நற்காலமாகுமென்பதைக் குறிப்பிடுகிறோம். தற்சமயம் நம்மிடையே உலாவிவரும் கல்வி பெரும்பாலும் [illegible] உத்தியோகக் கல்வியானது பற்றியே நம் நா[illegible]டில் விவசாயமும் கைத்தொழிலும் பெண் கல்வியும் அழிய ஏதுவாயிற்று. இவ்வுண்மையை இனியும் அறியாதவர்களாகத் தற்காலக் கல்விக் குறைபையாதரித்தலே நாகரிக வாழ்க்கைக் குற்றதாக, இதைக் கற்பதாலேயே பெண்கள் சமத்துவம் பெறுவதாகச் சிலர் நினைத்து அது வழியே ஊக்கமெடுத்துழைப்பாராயின் இதைக் காட்டிலும் பெண் சமூகத்திற்கு வேறு துரதிர்ஷ்டமுமுளதோ? நாடக மேடையில் அரை நாழிகை பெண் பாத்திரமாக நடிப்பதற்கு அவ்வேடம் தரித்தல் அவசியமாயும் கஷ்ட சாத்தியமாயுமிருக்கும்போது பெண்களின் க்ஷேமத்தை—பெண்களினுயர் வாழ்க்கையை—பெண்மக்கட்குரிய படிப்பை—பெண்கள் முன்னேற்றத்தை ஆடவர்கள் ஆடவர்களிடையே—ஆடவர் சுபாவத்தில் சிந்தித்துத் தீர்மானித்தல் எங்ஙனம் பொருந்தும்? இக்குறை நீங்கவேண்டுமாயின் கடினமும் முழுப்பயன் அளிக்காததுமாயுள்ள தற்காலக் கல்வியில் (வேறு வழியின்றி) தேர்ச்சி பெற்றுள்ள பெண்மணிகள் தங்கள் சுய அநுபவம் கொண்டு பெண்கல்வியைப் பெண்மக்கட்குரிய வழியில் அமைக்க முன் வரவேண்டும். பெண் கல்வியைப் பரவச்செய்து பெண்பால் தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ளவும், தன் வாழ்நாளின் எதிர் கால நிலையை நன்கறிந்து கொள்ளவும், குடும்ப நிர்வாகத்தை மிகச் சுலபமாக ஏற்கவும் தன் வீட்டிற்குத் தானே தாதிப் பெண்ணாயிருக்கவும் தன் குழந்தைகளுக்கு ஆசானாக அமையவும், ஏழ்மையில் தாழ்மையின்றிக் கண்ணியமாய் ஜீவிக்கவும், தனது முன்னேற்றத்திற்கான வழியைக்கொண்டு நடக்கவும் முற்காலத்தில் பெண்களுக்கிருந்த பெருமதிப்பையும் உயர்வையும் உன்னதஸ்தானத்தையும் பெற்ற பெண்கள் தெய்வமெனப் போற்[illegible] பெரும்புகழை உலக[illegible]க்கும் [illegible] கூடிய ஆற்றலைப்

190380



படைக்கச்செய்தல் தேசாபிமானிகளின் முதற் கடமையாம். தைரியமும் தேக பலமும் சுயத்தீர்மானமும் உற்சாகமும் நிர்வாக சக்தியும் கல்விப் பயிற்சியும் ஆடம்பர மற்ற வாழ்க்கையும் ஜீவகாருண்யமும் பரோபகாரமான சிந்தையும் கடவுள் பக்தியும் தாய் நாட்டிலன்பும் தாய் மொழியில் பற்றும் சிக்கன வாழ்வும் தாய்மாராகிய பெண்மக்களிடையே அமைந்திருந்தாலன்றி அவர்கள் வயிற்றிற் பிறக்கும் மக்களிடையே இக்குணங்களைக் காணமுடியாதென்பது வைத்திய விற்பன்னர்களின் அபிப்பிராயமாகவுமிருக்கின்றது. பெண்களிடையே அவர்களை மேம்படுத்தக் கூடிய கல்வியைப் பரவச்செய்தாலன்றி தேசத்தில் சமத்துவமும் சகோதரத்துவமும் நிலை பெறா. கட்சிப்பிரதி கட்சிகள் ஓயா, ஊக்கமும் உற்சாகமும் வளரா, வேற்றுமை நீங்கா, ஒற்றுமை பெருகா என்ற உண்மையை ஆடவர் அறிந்தால் அக்காரியத்தில் ஈடுபட்டால், அக்கல்வியை பரவச்செய்தால் மறு கணத்தில் தேசம் கண் விழிக்கும், உண்மை உணரும், ஏழ்மையை நோக்கும், சோம்பலை யொழிக்கும், சீர்கெட்ட நிலையை நீக்கும், பிறர் மதிக்கும் நிலையை அடையமுற்படும். இதுவே தேச முன்னேற்றமாகுமன்றிப் பெண் கல்வியை யனாதரவு செய்துவிட்டு தேச முன்னேற்றமென்று பறைபரைதல் வீண் என்பதை வற்புறுத்தி இவ்வியாசத்தை முடிக்கின்றோம்.

நன்குணர்ந்த ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாரும்

> காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
> காரியம் யாவிலுங்கைகொடுத்து
> மாதறங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச்செய்து வாழ்வமடி

என்று பாடியுள்ளார்.

## என் காதல் வினை.

ஓர் தேசீயத்துறைப் பாட்டு.

(“கோமதியப்பன்” இயற்றியது.)

குறிப்பு தேசீயத்தில் தீவிர ஆர்வங் கொண்டுள்ள ஓர் குரிசில், ஓர் கோதை; இருவரும் ஒருவர்பாலொருவர் உருக்கமாகக் காதல்செய்து ஒழுக்கமாக மணந்து உவகைமயமாக வாழ்கின்றனர். ஆனால் பெண்மணியின் பிதாவிற்கோ இது பிடிக்கவில்லை. அவர் ஒரு விநோத மதியினர். தேசீயம் என்றால் அவர் கண் கறிக்கும், காது கசக்கும். தன் மகள் வரித்துக்கொண்ட மணவாளனது சாந்தம் சத்தியம் தியாகம் அஞ்சாமை முதலிய சற்குணங்கள் ஒன்றும் அத்தந்தையின் விசித்திர மனதிற்கு ஒவ்வவில்லை. அவை யாவும் அகந்தையே உருவான வீண் டம்ப குணங்கள் என்பார். ஆதலால் தன் புத்திரியின் “பொல்லாப் பேதமையையும்” அவளை மயக்கி வசப்படுத்தித் தன் பிரிய கொள்கைகளின்படி யெல்லாம் ஆட்டுவிக்கும் அவள் அன்பனது “அடாத செய்கையையும்” ஆவேசத்துடன் அதி கடோர மொழிகளில் கடிந்துகொண்டிருக்கின்றார். அத்தந்தை மனப்பாங்கிற்கேற்ப அவர் மனைவியும் நடந்து தன் செல்வியை முற்றும் பகைத்து விட்டாள். அச்செல்விக்கு ஆணையன்றி ஆதரவு வேறில்லாத் தன்மையை முன்னிட்டு அவளைப் புறக்கணித்துப் பல பல புகல்கின்றனர் புன்மதி பூண்ட பூவையர் பலர்.

தன் காதல் வினையின் பயனாகிய இத்தியாதி நிலைமைகளை விவரித்து நமது பாட்டுத் தலைவி உருகுகின்றதாக அடியில் வரும் பாட்டு அமைந்திருக்கின்றது :—

1. நாட்டுக்கே நலம்புரியும் நல்விரதம் நண்ணும்
நாயகனை நானயந்து நறுமாலை நல்கிப்
பாட்டுக்குப் பண்ணிருந்த வாறவர்நல் வாழ்வில்
பரவசமாய்க் கலந்தின்பப் பரவைபடிந் துள்ளேன்
காட்டுக்கூப் பாடிட்டுக் கடிந்தனரென் தந்தை
கண்ணான அன்னையெனைப் புண்ணாக நீத்தாள்
கோட்டுப்பூக் கோதையர்கள் கூடிநகைக்கின்றார்
குறும்பரிவர் கூர்த்தமதி கொள்ளுவதென்நாளோ.

2. தேசத்தாய் திருத்தொண்டே திடவிரத மாய்க்கொள்
தீரனொன்றன் திரிகாலக் கேள்வனெனத் தேர்ந்து
மாசற்ற மலர்க்குமணம் மன்னியவா றந்த
மணவாள ரொடுவாழ்வில் மையல்மிளிர்ந் துள்ளேன்
நீசச்சொல் நெறுநெறென நெரித்தனரென் தந்தை
நேசத்தாய் நெஞ்சில்நேர் பாசத்தை நீத்தாள்
வாசத்தார் வஞ்சியர்மின் வசைவழங்கு கின்றார்
வம்பரிவர் வண்மதிதான் வாய்வதுமென் நாளோ.

3. சமூகமெலாம் சழக்கின்றிச் சமவுரிமை சார்தல்
சந்ததமும் சிந்தையுறச் சலிப்பின்றி முயல்வார்
அமுதமதில் அரியசுவை அமர்ந்திருந்த வாறவ்
வாளருடன் அகத்துறையில் ஆர்வமலர்ந் துள்ளேன்
இமுதிமெனத் தீயமொழி செழித்தனரென் தந்தை
தேனுக்கொள் அன்னையெனைத் தீயாய்த்தள் ளிட்டாள்
குமுதமுகக் கோதையர்கை கொட்டிநகைக் கின்றார்
குணக்கரிலர் குழகமதி கூடுவதென் நாளோ.

4. நெற்கண்ட திருநாடு நெடியபழ நீர்மை
நிரம்புதலே நெஞ்சிலுற நித்தமுயன் றிடுவார்
கற்கண்டில் இனிமையென அவர்வாழ்விற் கலந்து
கரையற்ற காதலெனுங் கடல்மூழ்கி யுள்ளேன்
கற்கண்ட நெஞ்சினராய்க் கடுகடுத்தார் தந்தை
கனிந்தமுகத் தாயென்பால் கரிந்தமுகங் கொண்டாள்
விற்கண்ட விழியினர்கள் விகற்பமுரைக் கின்றார்
வீணரிவர் விரிந்தமதி வெய்வதுமென் நாளோ.



5. புவிமுழுதும் புகழ்பொங்கும் புனிதமயக் காந்தி
பொன்னுரையே புகலென்ன போற்றிநடக் கின்றார்
கவிதையினிற் கனிந்தசுவை கவிந்திருந்த வாறு
காதல்கலந் தவர்தொண்டில் களிமூழ்கி யுள்ளேன்
செவிகசப்பச் சிற்றமொழி சிதறினரென் தந்தை
சீதமுகத் தாயென்பால் சிடுத்தமுகங் கொண்டாள்
பவிசொழிந்த பாழுரைகள் பகர்கின்றார் பெண்கள்
பதர்களிவர் பாந்தமதி பற்றுவதென் நாளோ.

6. சோபத்திற் சுழல்நாட்டின் சோர்வகற்றுந் தொண்டே
சுகிர்தங்கொள் இகத்துண்மைச் சுகமென்னக் கொண்டார்
தீபத்திற் றேசிருந்த வாறவர்தம் வாழ்வில்
தெய்வதக்கா வனவின்பத் திகழ்ச்சிசெறிந் துள்ளேன்
கோபத்திற் கொடியமொழி கொழித்தனரென் தந்தை
குவளைமுகத் தாயென்பால் குவிந்தமுகங் கொண்டாள்
தூபத்திற் புகையெனவே தூறுகின்றார் பெண்கள்
தூர்த்தரிவர் தூயமதி துன்றுவதென் நாளோ.

7. திண்ணியதே றுறுதியொடு தெய்வமதை நம்பி
திவலையுமோர் தியக்கமிலாத் தெளிந்தவுளங் கொண்டார்
கண்ணினுளே மணியிருந்து கதிர்பெருகு மாறென்
கருத்திலவர் காதலெனுங் கலையுருகி யுள்ளேன்
புண்ணியனும் புன்மொழிகள் பொழிந்தனரென் தந்தை
பொன்னென்ற தாயென்னைப் புழுவென்றுந் திட்டாள்
பெண்ணினத்தார் பிழையுரை பேசியிகழ் கின்றார்
பேயரிவர் பெருமதிதான் பெறுவதுமென் நாளோ.

8. பந்தனங்கொள் பாரதத்தாய் பங்கமெலாம் நீக்கிப்
பாரில்விடு தலைபெறவே பதிந்தசிந்தை யினரோர்
செந்தமிழிற் செழுமையெனச் சிறப்புறவச் சீமான்
சீரியசே வையிற்செறிந்து சிந்தைமகிழ்ந் துள்ளேன்
தொந்தரையார் தோருரைகள் தொடுக்கின்றார் தந்தை
தூங்குமுகத் தாயென்பால் தொங்குமுகங் கொண்டாள்
நிந்தனையாய் நீலியென்று நீட்டுகின்றார் பெண்கள்
நிதாதரிவர் நேர்மதிதான் நிலவுவதென் நாளோ.

9. தங்குநிறை தாய்நாடு தயக்கமெலாந் தவிர்ந்து
தனித்தபெருந் தலைமையுறத் தவமியற்றுந் தாதர்
குங்குமத்திற் கோலநிறம் கூடியவா றந்தக்
கோமானோ டியர்வாழ்வேற் குலவிமகிழ்ந் துள்ளேன்

வங்கையுற வன்மொழிகள் வழுத்தினரென் தந்தை
வன்னமுகத் தாயென்பால் வாங்கல்முகங் கொண்டாள்
மங்கையர் மதப்புமிகு மாற்றமுரைக் கின்றார்
மந்தரிவர் மாண்மதிதான் மன்னுவதெந் நாளோ.

10. பஞ்சரத்துப் பறவையெனப் பாக்கவிழித்துழலும்
பாரதத்தாய் படரொழியப் பரிந்தபணி யாளர்
மஞ்சளிலே மங்களமே மருவியவா றந்த
மஞ்சரொடு மனையறத்தில் மகிமையொளிர்ந் துள்ளேன்
வெஞ்சினமாய் வேகவுரை விடுத்தனரென் தந்தை
விளக்கமுகத் தாயென்பால் விறைப்புமுகங் கொண்டாள்
மிஞ்சியபெண் ணென்றுபழி மிழற்றுகின்றார் பெண்கள்
மிடுக்கரிவர் மேன்மதிதான் மேவுவதெந் நாளோ.

## பொருட் குறிப்புகள்.

பாட்டு 1. பண், இசை, இராகம். இன்பப் பரவை, இன்பக் கடல். கோட்டுப்பூக் கோதையர்கள், செடிக்கிளைகளிற் பூக்கின்ற மல்லிகை ரோஜா முதலிய உயர்ந்த வாசனை மலர்கள் அணிந்துள்ள பெண்கள்.

பாட்டு 2. என்றுள் திரிகாலக்கேள்வன், இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலம் ஆகிய முக்காலங்களிலும் எனது நாயகன். மையல், காதற் பெருக்கு. வண்மதி, வளம் நிறைந்த மதி.

பாட்டு 3. அமர்தமதில், அமிர்தத்தில். அகந்துறை, அகப்பொருட் சுவை யுணர்வு. குணக்கர், கோணலான கொள்கையினர். குழகமதி, அழகிய மதி.

பாட்டு 4. நெடியபழ நீர்மை, பழைய உயர்ந்த தகைமை. கற்கண்ட நெஞ்சினராய், கல்லைப்போல் கடிய நெஞ்சினராய். விற்கண்ட விழியினர்கள், வில்லை நிகர்த்த விழியுடைய பெண்கள். வேய்வது, அணிவது, பொருந்துவது.

பாட்டு 5. சீதமுகத்தாய், குளிர்ந்த முகங்கொண்டிருந்த தாய். பவிசொழிந்த, பதவியற்ற பெருமையற்ற.

பாட்டு 6. சுகிர்தங்கொள், புண்ணியம் நிறைந்த. தேசு, ஒளி. தெய்வதக்காவனவின்பும், தெய்வலோகப் பூங்காவன வாழ்வின் இன்பமயம். குவளை, தாமரை. தூர்த்தர், அற்பர். தூயமதி, பரிசுத்தமதி. துன்றுவது, சார்வது.

பாட்டு 7 கதிர், ஒளி. புழுவென்றுந்திட்டாள், புழுவென்று தள்ளிட்டாள், (உந்திட்டாள், தள்ளிட்டாள்)

பாட்டு 8. தோழரைகள், குற்றம் நிறைந்த சொற்கள். துங்க, அழகிய. நிகாதர், கபடர்கள். நிலவுவது, பொருந்துவது.

பாட்டு 9. தனித்த, ஒப்பற்ற. தாதர், தொண்டர். கோலநிறம், சௌந்தரிய நிறம். கோமானோடு, நாதனோடு. வங்கை, தீய, பழிமிகுந்த, எண்ணம். மாண்மதி, மாட்சிமை நிறைந்த மதி

பாட்டு 10. பஞ்சரத்துப் பறவை, கூட்டிலகப்பட்டுள்ள பட்சி. படரொழிய, துன்பம் குற்றம் குறை முதலிய தீங்குகள் யாவும் தொலைய. மஞ்சரோடு, தலைவரோடு. மனையறத்தில், இல்லறத்தில். மிழற்றுகின்றார், கொடித்துப் பேசுகிறார்கள்.

# லாவண்ணியம்.

## ஓர் இனிய சிறு கதை.

லாவண்ணியம் அவளுடைய பெயருக்குத் தக்கவாறு மிகவும் அழகும் வனப்பும் வாய்ந்தவள். தற்சமயம் இவள் வயது பதினாறு இருக்கும். இவள் உமாபதி அய்யரின் இரண்டாவது சமுசாரத்தின் மகள். உமாபதி அய்யருடைய முதல் மனைவிக்கு ஒரு மகள் உண்டு. அவள் சென்னையில் தனது கணவனுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறாள். உமாபதி அய்யர் தஞ்சை ஜில்லாவில் பாபநாசம் என்னும் ஊரில் ஓர் பாடசாலை உபாத்தியாயராயிருந்தார். தற்சமயம் அவர் மாதம் நாற்பது ரூபாய் பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

உமாபதி அய்யர் லாவண்ணியத்திற்குச் சிறு பருவம் முதற்கொண்டே தான் சுயமாகக் கல்வி கற்பித்துக் கொண்டிருந்ததல்லாமல் அவளை விவாகமில்லாமல் வைத்து உயர்தரக் கல்வி கற்பிக்க எண்ணங் கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்க அவருடைய இரண்டாவது மனைவி மூன்று நாள் பலமான காய்ச்சலடித்து அதில் காலனுக்கிரையானாள். பிறகு வயது வந்த மகளைத் தனிமையாய் வைத்துக்கொண்டிருக்க இயலாமல் சென்னைக்கு வந்து முதல் மனைவி மகளாகிய கமலத்தின் வீட்டில் வசித்துக்கொண்டு தமது வீட்டிற்கருகிலிருக்கும் ஓர் பெண்கள் ஹைஸ்கூலில் நான்காவது பாரத்தில் லாவண்ணியத்தைச் சேர்த்தார்.

சிற்சில விடங்களில் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த சகோதரிகளே ஒருவர் மேலொருவர் பொறாமைகொண்டு சண்டை சச்சரவு செய்கின்றனர். அப்படியிருக்க இவர்களோ மாற்றாந் தாய் மக்கள்! கமலத்திற்கு லாவண்ணியத்தின் ரூப குணங்களையும், புத்தி வன்மையையும் பார்க்கப் பார்க்க உள்ளுக்குள் பொறாமை மேலிடலாயிற்று. அவள் அனுங்காமலும் குலுங்காமலும் பாடசாலைக்குப் போய் வருவது, தான் வீட்டில் வேலை செய்துகொண்டிருப்பதாவென்று அவளுக்குத் தோன்றும். அதனால் ஒரு நாள் லாவண்ணியம் காலை நேரத்தில் படிக்க உட்கார்ந்ததும் கமலம் அவளைக் கூப்பிட்டு நச்சுநச்சென்று வேலை செய்யச் சொன்னாள். அதற்கு லாவண்ணியம்—'அக்கா, எனக்கு இவ்வாரம் பரீட்சையிருக்கிறது; தயவுசெய்து என்னை இன்று மன்னித்து விடு; பரீட்சையில் தோல்வியடைந்தால் மிக்க அவமானம்' என்று சொல்லிவிட்டு அவள் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்று விட்டாள். அன்று அவள் பேரில் கோபங்கொண்டு கமலம் சமையல்செய்யத் தாமதம் செய்தனள். லாவண்ணியம் ஸ்நானம் செய்து போஜனத்திற்கு வந்தபோது சாதம் கூட ஆகவில்லை. அவள் அப்படியே பேசாமல் பட்டினியாய்ப் பாடசாலைக்குப் போய்விட்டாள். சனிஞாயிறில் லாவண்ணியந்தான் சமைப்பாள். சிற்சில சமயங்களில் காலையிலும் சிற்சில சமயங்களில் மாலையிலும் லாவண்ணியம் சமைப்பாள். அவள் தன் மானத்தைக் காக்கும் பொருட்டு எவ்வளவு பாடுபட்டும் வீண்தான்.

அவள் வீட்டிற்குச் சற்று தூரத்தில் அவளுடைய அன்னையின் சிநேகிதை கிருஷ்ணம்மாளென்றொரு சீமாட்டி இருந்தனள். அவளுடைய மகள் ராஜமும் லாவண்ணியத்தின் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தனள். ராஜத்தின் மூலமாய் லாவண்ணியம் இன்னாளென்றறிந்து கிருஷ்ணம்மாள் அவளை அடிக்கடி வந்து பார்ப்பதும், லாவண்ணியமும் ராஜமும் சேர்ந்து பாடசாலைக்குப் போவதும், ஒருவர்

வீட்டிற்கொருவர் அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தமையால் இவர்களுள் சிநேகம் நாளுக்கு நாள் திடப்பட்டுக்கொண்டு வந்தது.

ராஜத்தின் தமயன் சிவகுமாரன்; இவனுக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பதுவயதிருக்கும். பி. ஏ. ஆனர்ஸுக்குப்படித்துக்கொண்டிருந்தான். ராஜம், லாவண்ணியம் இவர்களுக்குப் பாடத்தில் ஏதாவது சந்தேகம் வந்தால் அவனிடம் கேட்டு நிவர்த்திசெய்து கொள்(வது வழக்கம்)வார்கள். லாவண்ணியம் எழுதும் சில வியாசங்களைக் கண்டு அவன் ஆச்சரியமுற்று, இத்தகைய வியாசங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பலாம் என்று இரண்டொரு தடவை சூழ்ச்சி செய்தானேயன்றி லாவண்ணியத்தின் கவனம் அங்கு செல்லவில்லை. சிவகுமாரன் லாவண்ணியத்தைத் தன் உடன் பிறந்த சகோதரியைப்போலவே பாவித்துக்கொண்டிருந்தமையால் அவன் மனதில் யாதொரு விதமான அன்னிய கற்பனை வரவில்லை. லாவண்ணியமும் அவனிடத்தில் அவ்வாறே நடந்துகொண்டிருந்தனள்.

இவ்வாறிருக்க, உமாபதி அய்யர் விஷ சுரத்தால் பீடிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதம் படுக்கையிற் கிடந்து கடைசியாய் இவ்வுலகத்தை விட்டகன்றார். இவர் நோயாயிருக்கும் பொழுது, சிவகுமாரன், ராஜம், கிருஷ்ணம்மாள் இவர்கள் நமது லாவண்ணியத்திற்குப் புரிந்த உதவி இவ்வளவென்று சொல்லி முடியாது. இதையெல்லாம் கண்டு கமலத்திற்கு லாவண்ணியத்தின் பேரிலிருந்த அசூயை நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. இது நிற்க.

கிருஷ்ணம்மாளைப் பற்றி அறிய நமது நண்பர்கள் ஆவலாயிருப்பார்களாதலால், அவளுடைய வரலாற்றை இங்கு சுருக்கிச்சொல்வது அதிகப் பிரசங்கமாகாதென்று நம்புகிறேன்.

கிருஷ்ணம்மாளுடைய கணவர் பஞ்சநாதய்யர் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்து, அவருடைய நாற்பத்தைந்தாவது வயதில், திடீரென்று மரணமடைந்தார். அவர் ஏராளமான சொத்துத் தேடி வைத்திருந்ததல்லாமல் கிருஷ்ணம்மாளுக்கும் ஏராளமான சீதனம் கிடைத்திருந்தது. அவள் நன்றாகக் கற்றறிந்த மாது; கற்பிற் சிறந்தவள்; பரோபகார சிந்தையுடன் கூடிய திடமான தெய்வ பக்தியுடையவள்.

இம்மாது லாவண்ணியத்தின் நிலைமையைக் கண்டு மனமுருகி அவளுக்குப் படிக்கப் பொருளுதவி செய்வதாக மொழி கொடுத்தனள்.

கமலத்தின் புருஷன் லாவண்ணியத்தைக் கண்டு மனமிரங்கி அவளைப் பட்சமாய் நடத்தலானான். அதைக் கண்டு கமலம் அகங்காரங்கொண்டு அவளை வீட்டைவிட்டுப் போகும்படி தொந்தரவு கொடுக்கலானாள். உமாபதி அய்யரால் அதிகப் பொருள் சேர்த்து வைக்க இயலவில்லை. வரும் பென்ஷன் நாற்பது ரூபாய் சென்னையைப் போன்ற நகரத்தில் அவ்விருவருடைய செலவிற்கு எம்மட்டும் போதும்? அப்படியிருந்தும் அவர் கைச் செலவிற்காகக் கைப் பெட்டியில் வைத்திருந்த அற்ப சொற்பத்தைக் கமலம் அபகரித்துக்கொண்டு விட்டனள்.

## II

தற்சமயத்தில் கிருஷ்ணம்மாள் ஊரிலிருக்கவில்லை; ஏதோ காரியமாய் அயலூருக்குச்சென்றிருந்தனள்; ராஜமும் அவளுடன் சென்றிருந்தனள். சிவகுமாரன் பி. ஏ. ஆனர்ஸ் ராஜதானியில் முதன்மையாகத் தேர்ந்து ஐ. ஸி. எஸ். க்குப் படிக்கும் பொருட்டு சீமைக்குப் புரப்பட்டுப்போய் சில தினங்களாயிருந்தன. ஆதலால் வேறு வழி காணாமல் பெண்களுக்காக ஏற்பட்ட ஹாஸ்டலில்போயிருக்க உத்



தேசங்கொண்டு, ஹாஸ்டல் மேட்ரனைப்போய்ப் பார்த்து அவ்விடத்திய ரேட் முதலியவற்றை அறிந்து வரும் பொருட்டு அங்கு சென்றாள். அந்த ஹாஸ்டல் குமரப்ப செட்டித் தெருவில் மூன்றந்தஸ்துள்ள ஓர் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் வாயிலில் "இந்திய மாதர் வசதிக் கிருகம்." என்று பெரும் தங்கமுலாம் எழுத்துக்களுடன் கூடிய ஓர் போர்டு தொங்கிக்கொண்டிருந்தது. வாயிற் காப்போன் திண்ணையில் உட்கார்ந்து தூங்கி விழுந்துகொண்டிருந்தான். லாவண்ணியம் அவனருகிற் சென்று 'பியூன்' என்றாள். அவன் திடுக்கிட்டெழுந்து நின்று கண்களைக் கசக்கிக்கொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டும் "யாரம்மா நீங்க? என்னவேணும்?" என்றான். லாவண்ணியம் 'மேட்ரன் அம்மாள் அவர்களைப் பார்க்கவேண்டும், அவர் வீட்டிலிருக்கின்றனரா?' எனறதற்கு "கொஞ்சம்இருங்க, போய் பாத்துட்டுவரேன், அந்தம்மா தூங்கிட்டு இருக்கற நேரம்; போய் எளுப்பினால் கோவுச்சிக்குவாங்க" எனறு சொல்லி உட்சென்று இரண்டு நிமிஷங்களில் வெளியில் வந்து "உங்களை சூப்ரெண்டம்மா உள்ளே வரச்சொல்ராங்க" என்றான். லாவண்ணியம் உட்சென்றாள்; மேட்ரன அவர்கள் நடுமுற்றத்தில் ஓர் சாய்வு நாற்காலியிலுட்கார்ந்து வரவு செலவு கணக்குகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். அவருக்கு வயது சுமார் முப்பது முப்பந்தைந்திருக்கும். ஆனால் அவர் வெளியில் சொல்லிக் கொள்ளுகிற வயது இருபத்தைந்தேயாம். அவர் தேகம மெலிந்தொடுங்கியிருக்கும், முகம் குழிவிய நெற்றி, நீண்ட நாசி, வட்டமான கண்கள், நெருங்கிய புருவம் இவைகளுடன் கூடியது. நகைபபு அல்லது புஞ்சிரிபபு என்பது அவரைக் கண்டால் பயந்து ஓடும். தான் பரோபகாரத்திற்கெனறே ஜனமமெடுத்திருப்பதுபோல் சொல்லிக் கொள்வதையும் வெகு பக்குவமாய் நடிப்பதைக் கண்டு அங்கு வருபவர்களெல்லோரும் மயங்குவார்கள். ஆனால் அவ்வம்மையாரின் உள்ளம் எத்தகையதென்பது போகப் போக விளங்கும். நிற்க.

லாவண்ணியத்தைக் கண்டதும் "நீ எங்கு வந்தனை? என்ன வேண்டும்?" என்று ஒன்றின்பின்னொன்றாக அதிகார தோரணையுடன் கேட்ட கேள்விகளைக் கேட்டு லாவண்ணியம் சற்று பயந்தாள். பிறகு சற்று தைரியத்துடன் தன் வரலாற்றில் முக்கியமான சிலவற்றைச் சொல்லி, அந்த ஹாஸ்டல் ரூல்ஸ் என்னவென்று கேட்டதற்கு மேட்ரன் அவர்கள் "இந்த ஹாஸ்டலில் சேரவேண்டுமானால் (1) முதலில் சேருவதற்கு எண்ட்ரென்சு பீசு ஐந்து ரூபாய் கட்டவேண்டும்; (2) வீட்டு வாடகை ஐந்து ரூபாய்; (3) ஒரு ட்ரங்கு, ஒரு படுக்கைக்கு மேல சாமான் இருந்தால் சாமான் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் வாடகை உயர்த்தப்படும்; (4) சமையற்காரி, பத்துதேய்க்கிறவள், தோட்டி இவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்க ஐந்து ரூபாய், (5) இரண்டு நேரம சாபபாடு, இரண்டு நேரம காபபிச் செலவு பதினைந்து ரூபாய் ஆக மொத்தச் செலவு மாதம் இருபத்தைந்து ரூபாய்; கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்து ஸ்னானம், துணி தோய்ப்பது முதலியன செய்து கொள்ளவேண்டும். குழாய் ஜலம் வேண்டுமானால் மாதம் அரை ரூபாய், வென்னீர் வேண்டுமானால் ஒரு ரூபாய். ஹாஸ்டல் ரூல்களைப் பற்றி இன்னும விரிவாகத் தெரியவேண்டுமானால் அதோ நோட்டீஸ் போர்டில் பார்த்துத் தெரிந்துக்கொள்ளலாம். வந்து சேரவேண்டுமானால் முதல் தேதியன்று அட்வான்ஸ் பணத்துடன வந்து சேரலாம, வந்து சேர்ந்துவிட்டால் ஒரு வருஷத்திற்குள் விட்டுப் போகக்கூடாது. அப்படிபபோனால் அவ்வொரு வருஷத்து வீட்டு வாடகையும், எஸ்டாபிளிஷ்

மெண்ட் சார்ஜும் கட்டிவிட்டு வெளியில் கால் வைக்கவேண்டும்.”

மேட்ரன் அம்மையாரின் உபந்யாசத்தை லாவண்ணியம் கவனமாய்க்கேட்டு சற்று நேரம் யோசித்துப் பிறகு தனக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுக்கத் திறமை இல்லை என்றும் பதினைந்து ரூபாயானால் எப்படியாவது கொடுப்பதாகச் சொல்லி கெஞ்சிக்கொண்டதன் பேரில், அவள் பேரில் கருணையுடன் ஒப்புக்கொண்டது போல் நடித்து முதல் தேதிக்கே வந்து சேர்ந்து விடும்படி உத்தரவளிக்கப்பட்டது.

எல்லாஞ் சரிதான்; இப்பொழுது மாதம் பதினைந்து ரூபாய்க்கு எங்குபோவது? கிருஷ்ணம்மாளால் கொடுக்கப்படுவது ஏழு ரூபாய். அவளுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பது ஐந்து ரூபாய். இப்பன்னிரண்டு ரூபாயில் அவள் என்ன செய்வாள் பாபம். அன்று அவள் வீட்டிற்கு வந்து ஏதோ இரண்டு கவளம் சோற்றைத் தின்று படுக்கையில் படுத்தாள். வெகு நேரம் வரையில் நித்திரை பிடிக்கவில்லை. மறு நாள் முதல் தேதியானபடியால் ஹாஸ்டலுக்குப் போகவேண்டும். கையில் பணமோ கிடையாது. தன்னிடத்தில் எவ்வளவு தான் இருக்கிறதென்று பார்க்கலாமென்று, மெல்ல சத்தம் பண்ணாமல் பெட்டியைத் திறந்தாள். அதிலிருக்கும் புஸ்தகங்களையும், சாமான்களை எல்லாம் எடுத்து ஒழுங்கு படுத்திவிட்டு பணப்பையை எடுத்துப் பார்த்தாள். அதில் சரியாகப் பதினைந்து ரூபாய் தானிருந்தது. அதைப் பத்திரமாக எடுத்து மடியிற் சொருகிக் கொண்டாள். சாமான்களை எல்லாம் ஒழுங்கு படுத்தியான பிறகு ஒரு புடவை மடிப்பை எடுத்து வைக்கும்பொழுது, அதன் மடிப்பவிழ்ந்து அதிலிருந்து அவளுடைய மேல் விலாசம் எழுதிய ஓர் காகிதக்கட்டு கீழே விழுந்தது. அதை எடுத்துப் பார்த்ததும் தன் தந்தையின் கையெழுத்தைக் கண்டு அவளுக்கு அடங்காத துக்கம் மேலிட்டது. ஐந்து நிமிஷங்கள் வரை மனமாற அழுதுவிட்டு ஒரு முறை சுற்றிலும் பார்த்துவிட்டு ஒருவருமில்லை என்று தெரிந்தபிறகு மெல்ல அக்காகித உறையைத் திறந்து அதிலிருக்கும் கடிதங்களை வெளியெடுத்தாள். அதில் ஒரு பெரிய கடிதமிருந்தது. அதைப் படித்துப் பார்க்க அது மரண சாஸனமாயிருந்தது. அதில் அவர் வெகு காலமாகக் கொஞ்சங் கொஞ்சமாய் சேகரித்து வைத்த ஐந்தாயிரம் ரூபாய் இன்ன பாங்கியிலிருக்கிறதென்றும், அது அவளுடைய இருபத்தோராவது (இருபத்தொன்றாவது) வயதில் வட்டியுடன் அவளுக்குச் சேரவேண்டுமென்றும் எழுதப்பட்டு, சாட்சிகளுடைய கையெழுத்துடன் அவர் கையொப்ப மிடப்பட்டிருந்தது. அதைக் கண்டு அவளுக்குத் தன் தந்தையின் பேரில் இருந்த திடமான பக்தியும் அன்பும் உள்ளத்தில் பொங்கி நெஞ்சடைக்கலாயிற்று. அதை பத்திரமாக மடித்து வைத்துவிட்டு இனியொரு சிறிய காகித உறையைத் திறந்தாள். அதில் ஒரு சிறிய புகைப்படமும், ஐநூறு ரூபாய் நோட்டுகளும், அவர் கைப்பட எழுதிய ஓர் கடிதமுமிருந்தது. அக்கடிதத்தைப் படிக்கப் படிக்க அவள் கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருகிக்கொண்டிருந்தது. பிறகு புகைப்படத்தை எடுத்து சற்று நேரம் இமைகொட்டாமல் அதைப் பார்த்த வண்ணமாயிருந்தாள். பிறகு அப்படத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்; சிரசில் வைத்துக்கொண்டாள்; திருப்தியில்லை. மறுபடியும் அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தாள்; ஒருவருமில்லை. தன் மாத்திரம் தனிமையாகவிருக்கிறோம் என்று தெரிந்துகொண்டு அப்படத்திற்கு ஒரு முத்தமிட்டாள். பிறகு மனதை ஒருவாறு அடக்கிக் கொண்டு எல்லாவற்றையும் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு மறுபடியும் படுக்கையில் வந்து



படுத்தாள். தற்சமயம் அவளுக்கு நடுக்கடலில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பவர்களுக்கு ஓர் படகின் உதவி கிடைத்ததுபோல் தோன்றலாயிற்று. எதிர் காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டே நித்திரையிலாழ்ந்தாள்.

## III

உமாபதி அய்யர் கடிதத்தில் என்ன எழுதியிருந்தார், புகைப்படம் யாருடையது என்றறிய நமது வாசகர்கள் அதிக ஆவலுடனிருப்பார்களல்லவா? ஆதலால் அதிக நேரம் அவர்களைக் காக்க வைக்காமல் அக்கடிதத்தையே இங்கு கொடுத்து விடுகிறேன்.

சென்னை,
தேதி 25-6-24

எனதருமைக் குழந்தை லாவண்ணியத்திற்கு சகல மங்களமு முண்டாவதாக.

என் தேக வலிவு குறைந்து விட்டது. இனி நான் அதிக நாள் உயிர்த்திரேன். ஆதலால் நான் உனக்குச் சொல்லவேண்டிய சில சங்கதிகளை இக்கடித மூலமாய்த் தெரிவிக்கிறேன். அதன்படி நீ நடந்துகொள்வாயாகில் உனக்கு நன்மையுண்டாகும்.

நானிருக்கும்பொழுதே நல்ல வரனைத் தேடி உனக்கு விவாகம்செய்து கொடுக்கவேண்டுமென்கிற எண்ணம் எனக்குச் சிறிது நாட்களாக உதித்திருக்கிறது. அதற்குக் காரணம் என் வியாதி ஒன்று; இரண்டாவது உயர்தரக் கல்வி கற்றுச் சௌகரியமாயிருக்கும் வரையில் நான் ஜீவித்திரேன். அன்றி உயர்தரக் கல்வி கற்றவர்களெல்லோருமே சற்குண சம்பன்னர்களாயிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கல்விச் செருக்கு, தளுக்குமினுக்கு, பொருளாசை, சுய நலத்தின்கண்ணே கண்ணுங்கருத்து; அடக்கம் அச்சம் நாணம் என்கிற பெயரே கிடையாது. இக்காலத்து இந்நாகரிகங்களைக் கண்டு உன்னைப் பற்றி எனக்கு மிக்கக் கவலை மேலிட்டிருக்கிறது. ஆதலால் உனக்குத் தகுதியான கணவன் சிவகுமாரன் தான். ஜாதகமும் வெகு நன்றாய்ப் பொருந்தியிருக்கின்றது. நீ எப்படியாவது அவனை மணம் புரிந்து கற்புடன் இல்லறத்தை நடத்து. ஐம்புலன்களை அடக்கி ஆயுள் பரியந்தம் பிரம்மசரியத்துடன் இருப்பது மிகவும் கஷ்டதரமான விஷயம். ஆதலால் நீ உயர்தரக் கல்வி கற்ற போதிலும் விவாகம் செய்துகொள்வது தான் உத்தமம். நான் பின்னுமொரு முறை வற்புறுத்திச் சொல்வதென்னவென்றால் உலகத்தில் கற்புடன் வாழவேண்டும். கற்புதான் நமது பெண்களுக்கு பூஷணம். ஆகலால் உயிருக்கே சேதம் வந்தபோதிலும் கற்பென்னும் அரிய பூஷணத்தை இழக்கலாகாது.

உன் தமக்கை கமலத்துக்கு விவாகம் செய்து கொடுத்து நகை நட்டுகளும் கொடுத்திருக்கிறேன். உனக்கு அதெல்லாம் ஒன்றும் செய்யவில்லையென்று சென்னை பாங்கியில் ஐயாயிரம் ரூபாய் வைத்து, அது உனக்கு இருபத்தொன்றாவது வயதில் வட்டியுடன் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அதன்றி ஐநூறு ரூபாய் இத்துடன் வைத்திருக்கிறேன். பத்திரமாக வைத்துக்கொண்டு போதாததற்கு உன் தமிழ் நடை வெகு அழகாயிருக்கிறபடியால் பத்திரிகைகளுக்கு விஷயங்களை எழுதியனுப்பி அதன் மூலமாய்ப் பொருளை சம்பாதித்து எப்படியாவது நல்ல மார்க்கத்திலிருந்து இகபர சுகத்தைத் தேடிக்கொள்வாயாக.

அனேக ஆசீர்வாதம்.

இப்படிக்கு
உன் அன்புடைய தந்தை
உமாபதி அய்யன்.

மறு தினம் காலையில் லாவண்ணியம் தன் சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு தமக்கையினிடம் போய் நமஸ்காரம் செய்து "அக்கா, நான்போய் வருகிறேன். பெண்களுக்காக ஏற்பட்டுள்ள ஹாஸ்டலிலிருந்து இவ்வொரு வருஷத்தை எப்படியாவது தள்ளிவிட்டு, முன்னுக்குப் படிப்பதோ இல்லையோ என்பதைப்பிறகு யோசித்துக்கொள்ளுகிறேன்; கடந்த இரண்டு வருஷங்களாக என்னை நீ வீட்டில் வைத்துக்கொண்டு அன்புடன் ஆதரித்ததற்காக நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். நான் செய்த தப்புகளை யெல்லாம் தயவுடன் மன்னித்து விடு" என்றாள்.

கமலத்திற்கு ஒன்றும் பேச நாவெழவில்லை. ஆனால் தன்னுடைய ஹிம்ஸையைப் பொறுக்க முடியாமல் அவள் வீட்டைவிட்டு வெளிச்செல்லுகிறாள் என்பது மட்டும் அவள் மனதில் உறுத்தாமற் போகவில்லை. இருந்தபோதிலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் "என்னவோ, உன்னை சௌகரியமாக வைத்துக்கொள்ள என்னால முடியாமற் போயிற்று. அதைப் பற்றி எனக்கு வருத்தமாகத் தானிருக்கிறது. வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிரு ; குணமாயிரு ; உடம்பைப் பார்ததுக்கொள்" என்று சொன்னான். கமலத்தின் புருஷன் தன் மனைவியின் குணத்தை நன்குணர்வானானபடியால் வருத்தத்துடன் ஒன்றும் பேசாமலிருந்து விட்டான்.

லாவண்ணியம் இருவருக்கும் நமஸ்கரித்துவிட்டு சாமானகளை யெல்லாம் வண்டிக்காரனை எடுத்து வண்டியில் வைக்கச்சொல்லி தானும் ஏறிக்கொண்டு சென்று விட்டாள். லாவண்ணியம் போய் இரண்டு தினங்களுக்கெல்லாம் கமலத்தின் கணவனிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதமும் ஐந்து ரூபாயும் வந்தது. அக்கடிதத்தில் அவர் லாவண்ணியத்திற்கு வேறொரு விதமான உதவியும் செய்ய இயலாதவராயிருப்பதாகவும், அப்படி ஏதாவது சமயம் நேர்ந்தால் தம்மாலான உதவி செய்வதாயும், தற்சமயம் தம் மனைவிக்குத் தெரியாமல் மாதம் ஐந்து ரூபாய் கொடுத்துதவுவதாகவும் பட்சமுடன் எழுதியிருந்தார். அதைக் கண்டு லாவண்ணியத்திற்குத் தன் தமக்கையைப் பற்றி வருத்தமும், அவள் புருஷனுடைய நல்ல குணத்தைக் கண்டு சமாதானமுமுண்டாயிற்று.

லாவண்ணியம் மிகவும் புத்திசாலி. கிருஷ்ணம்மாளிடமிருந்து வரும் பத்து ரூபாய், கமலத்தின் புருஷனிடமிருந்து வரும் ஐந்து ரூபாய், தனக்குக்கிடைக்கும் ஸ்காலர்ஷிப் ஐந்து ரூபாய் இவ்விருபது ரூபாயில் வெகு சாமர்த்தியத்துடன் தன் செலவைச் செய்து கொள்வாள். அன்றி ஒழிவு நேரத்தில் சில பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதியனுப்பி அதன் மூலமாய் மாதம் பத்து அல்லது பதினைந்து ரூபாய் சம்பாதித்துத் துணிமணிகள் வாங்கிக் கொள்வான்.

லாவண்ணியம் ஹாஸ்டலுக்குப்போய் சில தினங்களுக்குப் பிறகு அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. பெண்களுக்கு வரும் கடிதங்களை யெல்லாம் மேட்ரன் அம்மையவர்கள் உடைத்துப் பார்த்துப் பிறகு அவர்களுக்குக் கொடுப்பது ஹாஸ்டல் முக்கிய ரூல்களிலொன்று. வழக்கப்படி மேட்ரன் அவர்கள் அக்கடிதத்தை உடைத்துப் பார்த்தனர். அது ஒரு அயோக்கியமான மனிதனால் எழுதப்பட்ட காதல் வெளியிடும் கடிதம். அதைக் கண்டு மேட்ரன் அவர்களுக்கு லாவண்ணியத்தின் பேரில் சந்தேகமுண்டாய் அவளைக் கூப்பிட்டுக் கேட்டதற்கு அவள் தனக்கொன்றும் தெரியாது, யாராகிலும் பொறாமைக்காக எழுதி யிருக்கக்கூடும் என்று எவ்வளவு சொல்லியும் அவருக்கு நம்பிக்கையுண்டாகவில்லை. ஆயிற்று ; அன்று முதல் லாவண்ணியத்தின் பேரில் கடுங்காவல் ஏற்பட்டது.



அக்கடிதம் எழுதின மனிதன் யாரெனில் கமலத்தின் உறவினனும் அன்பர்களில் (காதலர்களில்) ஒருவனும். இவன் லாவண்ணியத்தைப்பன்முறைகளில் பார்த்திருக்கிறான். ஆதலால் அவளை எவ்விதத்திலாவது மணம் புரிய வேண்டும் அல்லது அவளை அநுபவிக்கவேண்டுமென்கிற பேராசை அவனுக்கிருந்தமையால், அவன் அவ்வுத்தியோகத்திற்குத் தலைப்பட்டான். அவன் பெயர் பாபு. அவனுக்கிப்பொழுது நாற்பது வயதிருக்கும். சுமார் ஐந்தாவது பாரம் வரையில் படித்திருப்பான். அதற்குள் கெட்ட சகவாசத்தினால் சிறு வயதிலேயே நெறி தவறி அயோக்கியப் பையன்களுடன் ஊர் சுற்றுவதும், பொடி, சுருட்டு, குடி, ரங்காட்டம் இவைகளிலும் வல்லவனானான்.

இவன் லாவண்ணியத்திற்குப் பல கடிதங்கள் எழுதினான். பதிலில்லை. கடைசியாய் மேட்ரன் அவர்களுக்கு, தனக்கு வது வேண்டுமென்றும், மெட்ரிகுலேஷன் வரை படித்த சுமார் பதினெட்டு வயதுள்ள பெண் தேவையென்றும், தான் தூர தேசத்தில்—ரங்கூனில்—உத்தியோகமாயிருந்து மாதம் முன்னூறு ரூபாய் சம்பாதிப்பதாகவும் எழுதியிருந்தான்.

அவர் லாவண்ணியத்தைக் கூப்பிட்டு "உன்னைப் பார்க்க யாரோ வரப்போகிறார்களாம். தலைவாரிப்பின்னிக்கொண்டுதயாராயிரு"என்று சொல்லிவிட்டு, வதுவைக் கேட்டெழுதின மனிதனுக்கு சாயங்காலம் நேரில் வந்து பார்க்கும்படி ஒரு சீட்டெழுதி சேவகனிடம் அனுப்பிவிட்டு, சாயங்காலம் நாலடித்ததும் மேட்ரன் அவர்கள் உள்ளுக்கும் வெளிக்கும் அலைந்துகொண்டு எதிர் பார்த்த வண்ணமாயிருந்தனர்.

பாபம்! லாவண்ணியத்திற்கு ஒன்றுமே தெரியாது. கமலத்தின் புருஷன் அல்லது கிருஷ்ணம்மாள் இவர்கள் யாராகிலும் வருவார்களென்று அவள் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மணி நாலடித்துப் பத்து நிமிஷத்திற்கெல்லாம் சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள ஓர் மனிதன் நிறத்தில் காக்கையைப்போலும், உருவத்தில் ரப்பர் பந்திற்குக் கைகால் முளைத்தது போலும், தனக்கு முன்னிலையில் என்னவிருக்கிறதென்பதைக் குனிந்து பார்க்க இயலாத அவ்வளவு பெரிய வயிற்றையுடைய ஒருவர் ஸூட் போட்டுக்கொண்டு வாயிலுக்கருகிலிருக்கும் விஸிடர்ஸ் ரூமில் தோன்றினார். முதலில் மேட்ரன் அவர்கள் போய் சற்று நேரம் அவருடன் பேசிவிட்டு வந்து லாவண்ணியத்தை அழைத்துச் சென்றனர். லாவண்ணியம் அம்மனிதனைக் கண்டதும் திடுக்கிட்டு சரேலென்று திரும்பி வந்து பேசாமல் தன் ஜாகைக்குப் போய்விட்டாள். வந்தவர் மேட்ரனிடம் மெல்ல ஏதோ சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

பிறகு மேட்ரன் லாவண்ணியத்தினிடம் வந்து அவள் அவ்வாறு செய்ததற்குக் காரணமென்னவென்று கேட்டதற்கு அவள் பரிச்சயமில்லாத மனிதனுடன் பேசத் தான் தயாராயில்லை என்று சொன்னாள். அதற்கு மேட்ரன் "உன்னை அவருக்குப்பரிச்சயப்படுத்திவைக்கத் தான் அழைத்துச் சென்றேன் ; அவர் நல்ல பெரிய மனிதர் ; சீமான் ; ரங்கூனில் வேலை ; மாதம் முன்னூறு ரூபாய் சம்பாதிக்கிறார். அவர் படித்த பெண்ணைக் கலியாணம்செய்து கொள்ளவேண்டுமாம். உனக்கும் திக்கில்லை. அவரைக் கலியாணம் பண்ணிக்கொண்டாயானால் சுகமாயிருப்பாயேயென்று பார்த்தேன்" என்றனர்.

லாவண்ணியம்—எனக்கு முன்பின் தெரியாமல் நீங்கள் இப்படிச் செய்தது எனக்குக் அதிக வருத்தத்தைத் தருகிறது. எனக்குக்

கலியாணம் செய்து கொள்கிற யோசனையே யில்லை. அப்படி வேண்டுமானால், எனக்கிசைந்த வரனைத் தேடிக்கொள்ள எனக்குத் தெரியும். அதைப்பற்றிய கவலை உங்களுக்குத் தேவையில்லை" என்று சற்று கோபத்துடன் பேசிவிட்டாள்.

ஆயிற்று; லாவண்ணியத்தைப் படுத்த இரண்டு காரணங்கள் கிடைத்தன. லாவண்ணியத்தை எப்படியாவது தனக்கு வசப்படுத்திக் கொடுத்தால் மேட்ரன் அம்மையவர்களுக்கு இருநூறு ரூபாய் கமிஷன் கொடுப்பதாக நமது பாபு சொல்லியிருந்தான். அது இல்லாமற்போனது அவ்வம்மைக்கு மிக்க கோபம். அதனால் ஒவ்வொரு விஷயத்திலும் லாவண்ணியத்திற்குக் கொடுத்த தொந்தரவை விவரித்தெழுதுவதென்றால் அதிக விரிவாகுமாதலால் இத்துடன் நிறுத்திவிட்டு நமது கதையைப் பின் தொடர்வோம்.

லாவண்ணியம் எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு வருஷ காலத்தைப் போக்கினாள். மார்ச் மாதத்தில் அவள் பரீட்சையும் முடிந்தது. இனி அவளுக்கு ஹாஸ்டலிலிருக்கப் பிடிக்கவில்லை. ஆதலால் பரீட்சையின் முடிவு தெரிந்து ஜூலை மாதத்தில் கல்லூரிப் பாடசாலைகள் எல்லாம் திறக்கும் வரை தனது தமக்கையின் வீட்டில் போயிருக்கலாமா வென்றெண்ணங்கொண்டாள். அன்று மாலை ஐந்து மணிக்கு கமலத்தின் வீட்டிற்குப்போய் அவளைப் பார்த்து வரமென்று போனாள். கமலத்தின் புருஷன் இன்னும் ஆபீஸிலிருந்து வந்திருக்கவில்லை. இவள் 'அக்கா' என்றழைத்துக்கொண்டே உட்புகுந்தாள். கமலம் பிற்றத்தோரத்திலுட்கார்ந்து காய்கறி நறுக்கிக்கொண்டிருந்தாள். லாவண்ணியத்தைக் கண்டதும் "அடி பாபி, நீ ஏண்டி என் வீட்டுக்கு வந்தாய்? மானங்கெட்ட நாயே! என் வீட்டில் அடி வைக்காதே; படிக்கிற சாக்கிட்டு ஊர் மேய்கிறவளே——" என்று கூக்குரலிட்டுக் கண்டபடி வைவதற்காரம்பித்தாள். லாவண்ணியம் தமக்கையினருகிற்போய் உட்கார்ந்து, தான் அந்தவையவளல்லவென்று எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. லாவண்ணியத்திற்கு அடக்காதுக்கமுண்டாய்த் தேம்பித் தேம்பி அழலானாள். பாபம்! அவளுக்கு இந்தத் தமக்கையைத் தவிர வேறு உறவினர் கிடையாது. கமலம் எவ்வளவு படுத்தியபோதிலும் பொறுமையுடன் பொறுத்துக்கொண்டு எவ்வளவோ அன்பு பாராட்டுவாள். பிரயோஜனமென்ன? செவிடன் காதில் சங்கூதுவதுபோல்தான். இதெல்லாம் பாபுவின் போதனையென்று நன்கறிந்தும் ஒன்றையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'அக்கா, நான்போய் வருகிறேன். உனக்கு சம்மதமானால் இரண்டு மாத காலம் உன் வீட்டில் வந்திருக்க எண்ணங்கொண்டிருக்கிறேன்" என்றனள். கமலம் இடங்கொடாமல் "நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என் வீட்டில் அடி வைக்காதே, எழுந்து நட" என்று கோபாவேசத்துடன் சொல்லவே, லாவண்ணியத்தின் மனம் வெறுத்து அவ்விடத்தினின்றும் வெளி வந்தாள். மணி ஆறரை அடித்து விட்டது. நேரம் பொறுத்து ஹாஸ்டலுக்குப் போனால் மேட்ரன் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். என்ன செய்வாள் பாபம்! தன் விதியை நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டே ஹாஸ்டலை நோக்கி நடக்கலானாள். மாலை நேரமானபடியால் மோடார்களும், பஸ்களும், சாலைகளில் பறக்கின்றன; ஜனப்பெருக்கமோ சொல்ல முடியாது. இதற்கிடையில் பைஸைகில் மீது பாபு மெல்ல அவளைப் பின் தொடர்ந்து வந்து "லாவண்ணியம்" என்றான். அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க பாபுவைக் கண்டு பயந்து ஒதுங்கினாள். இதற்குள் மோடார்களும் பஸ்களும் முன்னும் பின்னு



மாக வர, இரண்டு மோட்டார்களுக்கிடையில் பாபு அகப்பட்டுக்கொண்டான். ஸைகில் சுக்குச்சூராயிற்று. அவன் மண்டையில் பலத்த காயம்பட்டு மூர்ச்சையடைந்தான். அவனை மோட்டாரில் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆசுபத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டது.

லாவண்ணியமும் மிக அபாயகரமான நிலைமையிலிருப்பதை கவனித்த கிருஷ்ணம்மாள் தன் மோட்டாரைச் சட்டென்று நிறுத்தி அவளிடம் ஓடிப்போய் அவளை ஒதுக்குவதற்குள் ஒரு வண்டியின் சகடை அவள்மேல் உரைந்து அவள் கீழே விழுந்து மூர்ச்சையடைந்தாள். அதற்குள் ராஜமும் வண்டியிலிருந்து இறங்கிஓடிவந்து, இருவருமாகமெல்ல அவளைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு வீட்டிற்குச் சென்றுடெலிபோன் மூலமாய் டாக்டரைத்தருவித்து, அவளுக்கு ஔஷதோபசாரம் செய்யப்பட்டது. காயங்கள் கழுவிக் கட்டப்பட்டன. அப்படிப் பெரிய காயம் ஒன்றும் படவில்லை. சில மணி நேரங்களுக்குப் பிறகு அவள் கண்களை திறந்தபோது ஒரு புறம் கிருஷ்ணம்மாளும், மற்றொரு புறம் சிவகுமாரனுமாக உட்கார்ந்திருந்தனர். சிவகுமாரன் சீமையிலிருந்து திரும்பி வந்த சங்கதி அவளுக்கு இப்பொழுதுதான் தெரியும். அவனைக் கண்டதும் தகப்பனார் எழுதியிருப்பது ஞாபகத்திற்கு வந்து சற்று வெட்கமுற்றாள். அன்றிரவு அவளை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டது.

மறுநாட் காலையில் லாவண்ணியம் மெல்ல எழுந்துட்கார்ந்தாள். அவளிருந்த அறைக்குள் பல் தேய்க்க ஜலம் காப்பி முதலியன கொண்டு வந்து கொடுக்கப்பட்டன. அவள் பல் தேய்த்துக் காப்பியருந்திச்சற்று உலாற்றிக்கொண்டிருந்தாள். அப்பொழுது சிவகுமாரன் அவளை விசாரிக்க அங்கு வந்தான்.



அப்பொழுது அவள் தான் ஹாஸ்டலுக்குப் போகவேண்டும், மேட்ரனுக்கு சங்கதி தெரிவிக்காவிடில் ஏதாவது விபரீதம் நேரிடும் என்று சொன்னதற்கு சிவகுமாரன், "அதெல்லாம் பரவாயில்லை. நான்போய் நடந்த சங்கதி சொல்லிவிட்டு வருகிறேன்; உடம்பு சொஸ்தமான பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று வெளியிற் போய்விட்டான். லாவண்ணியத்தால் அவன் பேச்சை மறுக்கமுடியவில்லை.

## IV

லாவண்ணியம் அபாயத்தில் அகப்பட்டுக்கொள்வதற்கு முதல் நாள்தான் சிவகுமாரன் சீமையிலிருந்து வந்திருந்தான். அவனுக்கு கோயம்பத்தூரில் கலெக்டர் வேலைக்கு உத்தரவு வந்திருந்தது. ஒரு வாரத்தில் போய் வேலை பொப்புக்கொள்ளவேண்டும். லாவண்ணியத்திற்கு இச்சங்கதி தெரிவித்து அவள்முன்னுக்கு என்ன செய்யப்போகிறாள் என்பதைக் கேட்டு அதற்கு அவன் தன்னாலான உதவி செய்ய வேண்டுமென்கிற உத்தேசத்துடன் அவளுடைய அறைக்குச் சென்றான். தற்சமயத்தில் லாவண்ணியம் ஒரு புகைப்படத்தையும், கடிதத்தையும் கையில் எடுத்துக்கொண்டு ஜன்னலண்டை நின்றுகொண்டு அப்படத்தைப் பார்ப்பதில் மெய் மறந்திருந்தாள். சிவகுமாரன் வந்ததை அவள் கவனிக்கவில்லை. அப்பொழுது சிவகுமாரன் உட்செல்ல சற்று தங்கினான். பிறகு கதவில் டிக்டிக்கென்று தட்டினான். லாவண்ணியம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, கையிலிருந்த படத்தையும் கடிதத்தையும் மேஜையில் வைத்துவிட்டு, ஒரு நாற்காலியை எடுத்துப்போட்டு "உட்காரலாம்" என்றாள். சிவகுமாரன் வந்துட்கார்ந்து அவளுடைய க்ஷேமத்தை விசாரித்தப் பிறகு "முன்னுக்கு என்ன செய்ய உத்தேசங்கொண்டிருக்

கிருய்? எனக்குக் கோயம்பத்தூரில் வேலையாய் உத்தரவு வந்திருக்கிறது. அடுத்த வாரம் அம்மாளையும் ராஜத்தையும் அழைத்துக்கொண்டு போவதாயிருக்கிறேன். பரீட்சையின் முடிவு தெரிகிறவரையில் எங்களுடன் வந்து இருக்கப் பிரியமானால் வரலாம். இல்லாவிட்டால் இங்கேயே சௌகரியம்போல் இருக்கவேண்டுமானால் இருக்கலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். ஹாஸ்டலிலிருந்து கஷ்டப்படுவது உசிதமென்று எனக்குத் தோன்றவில்லை; இல்லை, விவாகம் செய்து கொண்டு இல்லறத்தில் அமரவேண்டுமானால் அப்படியும் செய்யலாம்" என்று சொல்லிக்கொண்டே மேஜையிலிருக்கும் புகைப்படத்தை எடுத்தான். ஆச்சரியமுற்றான். லாவண்ணியத்தை உற்றுப் பார்த்தான்; அவள் தலை குனிந்த வண்ணமாய் நின்றிருந்தாள். அவளை நோக்கி "லாவண்ணியம் இதென்ன? இப்படம் உனக்கெப்படிக் கிடைத்தது? இது நான் எம். ஏ. பாஸ் பண்ணினதும் எடுத்ததல்லவோ."

லாவண்ணியம்—"ஆம், அது எனக்கு என் தந்தையாரால் அளிக்கப்பட்ட சீதனம்," என்று சொல்லித் தகப்பனார் எழுதிய கடிதத்தை எடுத்து அவன் கையிற் கொடுத்தாள். சிவகுமாரன் அதைப் படித்துப் பார்த்துவிட்டு "லாவண்ணியம், உன் தந்தை கொடுத்த சீதனத்தை நீ யாதொரு சந்தேகமுமின்றி ஸ்வீகரித்துக் கொள்ளலாம். தன் வீட்டை நாடிவந்த லக்ஷ்மியை வரவேற்று ஆதரிக்க யாதொரு ஆக்ஷேபமுமில்லையல்லவா?" என்று நாற்காலியினின்றும் எழுந்து அவளருகிற் சென்று அவள் கரத்தைப் பிடித்து அவளை அருகிற் சேர்த்துக்கொண்டான். தற்சமயத்தில் தோட்டத்தினின்றும் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு அவ்வழியாக வந்த ராஜம் தன் மடியிலிருந்த புஷ்பங்களை அப்படியே தூவினாள். சிவகுமாரனுக்கும் லாவண்ணியத்திற்கும் உண்டான ஆனந்தத்திற்கு ஓரளவில்லை.

அவ்வாரத்தில் ஓர் நல்ல முகூர்த்தத்தில் அவர்களுடைய விவாக மகோற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. மேட்ரன் அம்மை அவர்களுக்கும் பத்திரிகை அனுப்பப்பட்டிருந்தது. மேட்ரன் அவர்கள் விவாகத்திற்கு வந்திருந்தனர். ஆனால் லாவண்ணியம் தன் கையினின்றும் நழுவிவிட்டதைப் பற்றி அவருக்குச் சற்று வருத்தந்தான். கிருஷ்ணமானுக்கு இவ்வளவு நல்ல மருமகள் கிடைத்ததற்காக மிதமிஞ்சின ஆனந்தமுண்டாயிற்று. லாவண்ணியம் தன் மாமியார் நாத்தனார் முதலியவர்களை மிகவும் அன்புடன் ஆதரித்து வெகு விமரிசையாக இல்லறத்தை நடத்தலானாள்.

சுபம்!

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.




# நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(466-வது பக்கத் தொடர்ச்சி)

## இருபத்துமூன்றுவது அத்தியாயம்.

ராணா பிரதாபசிம்மனுக்கு உதவிபுரியும் பொருட்டு பற்பல வம்சத்து ரஜபுத்திர வீரர்கள் கும்பளமேர் கோட்டைக்கு எதிரில் கூடினார்களென்பதைப் பற்றி முன்னும் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது பாதுஷாவின் சேனையின் ஸ்திதியைக் குறித்து கவனிப்போம். மொகலாய சேனாதிபதி மான்சிங் இளவரசன் சலீமுடன் மேவாடா தேசத்தை யடைந்து, மஞ்சள் கோட்டைக்கு வெளியிற் கூடாரங்களமைத்துச் சேனைகளுடன் தங்கலானான். அக்கோட்டையின் எதிரிலிருந்த விஸ்தீர்ணமான மைதானத்தில் எங்கும் ஓரே கூடாரமயமாகவே யிருந்தது. கூடாரங்களுக்கு மத்தியில் இளவரசன் சலீமின் கூடாரம் தென்பட்டது. அதைக் கூடாரமெனப் பகராது ஓர் சிறு அரண்மனை யெனவே சொல்லவேண்டும். கூடாரத்திற்குள் காஷ்மீர் ரத்னகம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. காட்டிலும் இளவரசன் தன் வைபவங்களோடு இருக்கவேண்டுமென எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அக்கூடாரத்திற்கருகில் முக்கிய சேனாதிபதி மான்சிங்கின் கூடாரமிருந்தது. கூடாரங்களில் இரண்டு மாதங்களாய்த் தங்கியிருந்தபோதிலும், என்ன மகத்தான காரியத்தை உத்தேசித்து வீடு வாசல்களை விடுத்து வந்துள்ளோம் என்

பதை இளவரசனும் அவனது சகாக்களும் நினைக்கவேயில்லை. அரண்மனையில் நடந்து வந்த தடபுடல்களெல்லாம் இங்கும் காணப்பட்டன. நாட்டியப் பெண்களது பாட்டிலும், தமாஷாவிலும் இளவரசன் நிதமும்காலத்தைக் கழித்து வந்தான்.

வழக்கம்போல் அன்றும் இளவரசன் குதூகலமாய்க் காலத்தைக் கழித்துவரும்பொழுது, ஒரு சேவகன் உள் நுழைந்து வணக்கத்துடன் தண்டனிட்டு, "அரசே! சேனாபதி மான்சிங் தங்களைக் காண வந்துள்ளார்" என்றனன். இதைக் கேட்ட மாத்திரத்தில் பாட்டுக் கச்சேரி நின்றது. ஆங்கிருந்தவர்களெல்லோரும் கூடாரத்தை விடுத்து வெளியே சென்றனர். மான்சிங் உள் நுழைந்து இளவரசனுக்கு வலதுபுறமிருந்த ஆசனத்தில் அமர்ந்தனன். உடனே இளவரசன் மான்சிங்கை நோக்கி, 'ஐயா! சண்டை எப்பொழுது ஆரம்பமாகும்?" என வினவினன்.

மான்சிங் :—"இன்னும் இரண்டு மூன்று நாட்களில் யுத்தம் ஆரம்பமாகும். நீங்கள் சத்துருவை யெதிர்க்கச் தயாராயிருக்கவேண்டும்."

சலீம் :—"உமது ஆக்ஞையையல்லவோ எதிர்பார்த்திருக்கின்றேன்."

மான்சிங் :—"சரி, ஆயினும் இளவரசே! நீர் மிகவும் ஜாக்கிரதை யுடனிருக்கவேண்டும். பிரதாபசிம்மன் ஏராளமான வீரர்களைச் சேகரித்துள்ளான். இதுவுமன்றி எனக்கு மவனுக்கும்—"

சலீம் :—"ஏன் மௌனமாயிருக்கின்றீர்?"

மான்சிங் :—"இளவரசே! பிரதாபசிம்மன் ஒரு காலத்தில் என்னை அவமானப்படுத்தியுள்ளான். இச்சங்கதிகளைப் பற்றி நான் பாதுஷாவினிடம் முன்னாலேயே பகர்ந்துள்ளேன்."

சலீம் :—"அதென்ன சொல்லும்."

மான்சிங் :—"சோலாபுரத்தில் ஜயங்கொண்டபின், ஆக்ராவிற்குத் திரும்பி மேவாடா வழியாகச் செல்லும்பொழுது, பிரதாபசிம்மனைக் காண நேர்ந்தது. அவன் என்னை உபசரித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். ஆனால் போஜன காலத்தில் அவன் எங்கள் பந்தியிலுட்காரவில்லை. நாங்கள் இவனுக்காகக் காத்திருக்க, இவனது குமாரன் தன் தந்தை தலைவலியோடு படுத்திருப்பதால் எங்களெல்லோரையும் போஜனஞ் செய்யும்படி பகர்ந்தனன். நாங்கள் மொகலாய அரசர்களுக்குப் பெண்களைக் கொடுத்து விவாகஞ் செய்திருப்பதால், எங்கள் பந்தியிலுட்காரக் கூடாதெனத் தலைவலியென்று பாசாங்கு செய்தனன்."

சலீம் :—"பிரதாபன் உங்களை அவமானஞ் செய்திருப்பதுமன்றி, எங்களையும் அலட்சியப்படுத்தியுள்ளான். அக்பாது புத்திரன் சலீம் நாளை ரணபூமியில் இதற்குப் பழிக்குப் பழி வாங்காதிரான், பீதிகொள்ளக் காரணமில்லை."

மான்சிங்இளவரசனது வார்த்தைகளைக்கேட்டு சந்தோஷங்கொண்டவனாய்த் தன் கூடாரத்தை யடைந்தனன்.

(தொடரும்)

# கடவுள் ஒருவர் இருக்கிறார்.

(ஸ்ரீமதி கஜலக்ஷ்மி அம்மாள்.)

கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதை நாம் பூரணமாக நம்பவேண்டும். அவர் அகில லோகங்களுக்கும் ஒரே நாயகர். அவர் ஆன்மாக்களிடத்து அளவு கடந்த திருவருளே திருமேனியாகவுடையார். அவர் புண்ணியஞ்செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும் பாபஞ்செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுக்கிறார். துன்பத்தைக் கொடுத்தலினால் நாம் அவரை வெறுக்கக்கூடாது. தீமை செய்த பிள்ளைகளைத் தந்தைதாயார் தண்டிப்பதைப் போலவே பாபஞ்செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல் மேலே பாபஞ்செய்யாவண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினால் அதுவும் கருணையே. அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்புபோலவே. அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. நாம் அவரை அன்போடும் பக்தி ஆசாரத்துடனும் துதித்துவணங்கல்வேண்டும். பிறஉயிர்களிடத்து அன்பில்லாதவர் தம்முயிருக்குத் தாமே வஞ்சகர். பிற உயிர்களுக்குத் துன்பஞ்செய்வது கடவுளுக்கே துரோகஞ் செய்வதாய் இருக்கிறது. உயிர்களெல்லாம் கடவுளின் திருமேனிகள். பிற உயிர்களிடத்து அன்பில்லாதவர்கள் கடவுளிடத்து அன்புடையவர்களாயிருக்க மாட்டார்களென்பதை நாம் அநுபவத்திலே காணலாகும். அன்பு யாரிடத்திருக்குமோ அவர்களிடத்தில் பழி பாபங்கள் இருக்கமாட்டா. ஹிருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியமுள்ளவர்கள். மரம் நல்லதென்றால் அதன் கனியும் நல்லதாயிருக்கும். மரமானது கனியினாலறியப்படும். அதுபோலவே நமது ஹிருதயம் சுத்தமாயிருந்தால் நல்ல எண்ணமும் ஆன்மாக்களிடத் தன்புமிருக்கும். ஹிருதயம் களங்கமுள்ளதா யிருக்குமாகில் அதினின்று உண்டாகும் எண்ணங்களும் களங்கமுள்ளவைவாக விருக்கும். கடவுளிடத்து அன்பிராது.

கடவுள் எங்கே இருக்கிறார் என்று சிலர் கேட்கிறதும் அதற்கு விடையாகப் பிரகலாதன் கூறியதுபோல் சிலர் கூறுவதுமுண்டு. ஆனால், அவரை என் கண் முன்னே காட்டு, பார்ப்போமென்றால் எப்படிக்காட்டுவது? நாம் இருள் சூழ்ந்த ஒரு இடத்திலிருந்தபடியே ஒரு பொருளின் உருவத்தைக் காண இச்சிக்கின் அப்பொருளின் உருவம் நமது கண்களுக்கு தோற்றுமா? தோற்றாது. அதுபோல் மாயையால் மூடப்பட்டிருக்கிற மனக்கண்ணையுடைய நாம் ஞானக்கண்ணைக் கொண்டு பார்த்தால் கடவுள் தோற்றுவார். அல்லாமல் நாம் அவரைக் காண்பதென்றால் எவ்விதம் காண்பது? கருணையக்கடலாகிய பகவானை நாம் மாயை சூழ்ந்த கண்களைக்கொண்டு காண்பதென்றால்சாமானியமல்ல. நாம் கடவுளைக் காணவேண்டுமானால் முதலில் ஆன்மாவை அறியவேண்டும். ஆன்மாவை அறிவதே ஒருவன் செய்யத் தக்க எல்லாக்காரியங்களிலும் மிகக் கஷ்டமானது. ஆனால் அசாத்தியமானதல்ல. ஆன்மாவையறிவதே ஆன்மஞானம் என்று கூறப்படுகிறது. அதை யறிந்தோரே மகான்கள் என்றும் பிரம்ம ஞானிகளென்றும் கூறப்படுகிறார்கள். ஆன்மஞான ஆராய்ச்சியிலும் அநுபவத்திலும் நமது முன்னோரே உலகில் முதன்மையானவர்கள்.

ஆன்மஞானம் ஒன்றே நம்மைப் பிறப்பற்ற நித்தியானந்த பதவியில் சேர்க்கவல்

லது. ஆன்மஞானமில்லாதவர் கடவுளைக் காணமுடியாது. பரமான்மாவே கடவுள். உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் எங்கும் நிறைந்த பரமான்மாவின் ஓர் பாகமே. பரமான்மாவை அன்றி ஆன்மாக்கள் இல்லை. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறபடியால் ஆன்மா இல்லாத இடமே இல்லை. ஆன்மா இல்லாத இடம் ஒன்றுளதேல் அங்கு கடவுளுமில்லையாகும். ஆகையால் ஆன்மா இந்த அண்டாண்ட சராசரங்களெங்கும் நீக்கமற மயிர் முனைக்கு மிடமற நிறைந்து ஏக சொரூபமாக விருக்கிறது. இந்த ஆன்ம சொரூபத்தை யறிவதே மேலான ஞானமாகும். நாம் முன் கூறியதுபோல் மனிதன் முதலாவது தனக்குள்ளிருக்கும் கண்டமாகிய ஆன்மாவையறிந்து பின்பே அகண்டமாகிய பரமான்மாவை யறிய வேண்டும்.

மனத்தை நன்றாகப் பண்படுத்திக்கொண்டு பகவத் பக்திசெய்து பரந்தாமனைக் கண்டறிவதற்குப் பிரயத்தனிக்காது, தங்கள் மதத்தில் எல்லாம் சாரமற்றிருப்பதாக எண்ணி அந்நிய மதங்களில் சித்தத்தைச் செலவிடுபவர்கள் எந்நாளும் கடைத்தேறார். ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பாஷைகள் வழங்கும். பாஷைகளுக்கேற்ப மதங்களும், அநுஷ்டான ஆசாரங்களும் வெவ்வேறாகக் காணப்படும். ஒவ்வொருவரும் தத்தம் முன்னோர்கள் ஆசரித்த மதானுஷ்டானங்களையே பின்பற்றி, நெடுங்காலமாய்த் தங்களில் வம்ச வழியில் வழக்கமாய் வந்த ஆசாரங்களையே தழுவி பகவத்தியானஞ் செய்யவேண்டும். உண்மையை உணர்ந்தவன் எல்லா மதங்களிலும் உண்மையைக் காண்பான். உண்மையைக் கண்டறியக் கூடிய பக்குவயோகமுள்ளவனுக்கு எந்த மதத்திலும் ஈச்வர வெளிச்சம் தோற்றக்கூடும். உண்மை கண்டறிந்து உறுதியான மனதுகொண்டு உத்கிருஷ்டமான சிந்தனைகளுக்கு நம்மை உறைவிடமாக்கி பகவானைப் பூஜித்து அவரின் திருவடிகளிலே நமது மனதைச் செலுத்தி அவரின் கிருபை பெற்றுய்வோமாக!

நமது சகோதரி பாலம்மாளவர்கள் பிரசுரித்துவரும் இச்சிந்தாமணியும் நமது மனதைச் சுத்தப்படுத்தி, விவேகத்தை விருத்திசெய்து பிரபஞ்ச அனுபவங்களை தெளியவுணர்த்தி, லௌகிக ஞானமும் உலகியலை உணரும் சக்தியும் ஈச்வர பக்தியும் பெருகும் படியாய் நல்லெண்ணங்களை வளர்த்து வருவதில் நமக்கு இன்றியமையாததோர் சாதனமாக விருக்கின்றது. ஆகையால் இச்சிந்தாமணியும் நமது சகோதரி பாலம்மாளும் இந்நிலவுலகின்கண் நீடூழி வாழ எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

சுபம்.

# பைத்தியத்தின் வகைகள்.

(ஸ்ரீமதி குகப்ரியை.)

உலகத்தில் எத்தனையோ விதமான பைத்தியங்கள் இருக்கின்றன வென்பது யாவருமறிந்த விஷயமே. சாதாரணமாய்ப் பைத்தியம், வைத்தியம் என்னும் இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியான பதங்கள். ஆதலால் வைத்தியத்தினால் பைத்தியந்தீரும், வியாதியைப் போக்கினால் வியாதி உண்டாகும் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதனால் நான் இதுவரையில் எல்லாவிதமான பைத்தியங்களும் வைத்தியத்தினால் தீரும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது நான் சொல்லும் பைத்தியக்காரர்களைக் குணமாக்கக் கூடிய வைத்தியர்கள் தற்காலத்தில் கிடையாதென்றே தோன்றுகிறது. உங்களுக்கு அதைத் தீர்க்கக் கூடிய வைத்தியர்கள் எவரேனும் தெரிந்திருந்தால் தயவுசெய்து எனக்கு அறிவித்தால் மிகவும் உபகாரமாய் இருக்கும். வியாதியின் போக்கு பின் வருமாறு:—

* * *



“அவாத்தில் வங்கி முத்து வளை பண்ணியிருக்கிறது. ரொம்ப அழகாய் இருக்கிறது. ரவுண்டு ரவுண்டாய் குச்சிலிப்பொட்டாட்டமா பட்டை தட்டி யிருக்கிறது. எப்படித்தான் ஜ்வலிக்கிறது. கண்ணைப் பறிச்சிண்டுபோறது. கட்டாயம் வருகிறமாதத்தில் கடன் வாங்கியாவது எனக்கு ஒரு வளையும், அங்கச்சிக்கு ஒரு சங்கிலியும் பண்ணத்தான்வேணும்” என்று 35 ரூ. சம்பளத்திலுள்ள தன் கணவனை பொன்னு கேட்கிறாள். அவளுக்கு நகைப்பைத்தியம் பிடித்துவிட்டது. தீருமோ? தீராதோ?

* * *

“போனவருஷம் நான் 25 ரூ. க்கு உல் நூல் வாங்கினேன். 20 பெட்டி க்ரோஷியா நூல் வாங்கினேன். மயில், கிளி, பூனை, யானை, புலி, சிங்கம், கரடி, கழுதை முதலிய எல்லாச் சவுக்கங்களும் போனவருஷம் போட்டதுதான். டைநூலினால் 10 சின்னப் பைகளும் பாசிமணி கோர்த்து 2 கைப் பைகளும் இந்த புதுமாதிரி எம்ப்ராய்டரி கிளாத்தும் இந்தவருஷம் போட்டது. இந்த மாதம் இவர் நூலே வாங்கக் கூடாதென்றும் நான் பணத்தை வீணாய் நூலில் செலவழிக்கிறேனென்றும், அதிக நூல் வேலையால்தான் கண் கெட்டுப் போய்விடுகிறதென்றும் சொல்லுகிறார். ஆனாலும் நான் 2 ரூ. கடன்வாங்கி நூலும் மணியும் வாங்கிவிட்டேன். அவர் ஆத்திலில்லாத வேளைகளில்தான் பின்னுகிறேன். நேற்று தற்செயலாய்ப் பார்த்துவிட்டார். பிரமாதமாய்க் கோபம் வந்துவிட்டது” என்று சொல்லும் என் சிநேகிதி ராஜத்திற்கு நூல் பைத்தியம்.

* * *

“இழைவெடித்த கதர் தூக்கவும் முடியவில்லை, தோய்க்கவும் முடியவில்லை. கதர், கதர் என்று கதறித்தொலைக்கிறார் இந்தப்பிராமணன். சோமனை உலர்த்துவதே கஷ்டமாயிருக்கிறது. இந்த அழகில் நான்வேறு கதர் புடவை கட்டிக்கொள்ள வேண்டுமாம். ஜர்மன் சில்கு எட்டு ரூபாய்க்கும் ஒன்பது ரூபாய்க்கும் கொட்டிக்கிடக்கிறது. ஆரணி புடவை எல்லாம் ரொம்ப மலிவு; 50, 60 தான். அதிலிரண்டு வாங்கிக்கொண்டாலும் பளிச்சென்றிருக்கும். அவளைப்பாரு. அதையும் புடவையும், பாதேவதை போலிருக்கிறாள்” என்று நாலுபேர் சொல்வதைவிட்டுக் கதற வேண்டுமாம். கதர் யாருக்கு வேண்டியிருக்கு? ஒரு தர்மாவரம் கேஸரிக் கலராவது ஆனந்த ரோஸ் கலராவது வாங்கலாமே” என்று காந்தி சிஷ்யர்களுள் ஒருவருடைய மனைவி பிரசங்கம் செய்கிறாள். அவளுக்குப் பட்டுப் பைத்தியம். அவருக்கு கதர்ப் பைத்தியம். இரண்டுபெயருக்குமே வைத்தியம் தேவையோ என்னமோ தெரியாது.

* * *

“இன்று பணிபாய் கதை. திருவாரூர் ராஜாயி கச்சேரி. நான் எப்படியாவது போகத்தான் வேண்டும். கோவிலில் மதுரைப் பொன்னுச்சாமி மேளமாம். கேட்காத காது இருந்தென்ன, செவிடாயிருந்தென்ன? இரண்டும் ஒன்றுதான். அரியக்குடி ராமானுஜம் ஆனந்த பைரவி ஆலாபனம் எப்படி இருந்தது தெரியுமா” என்று நானுநோம் ஞொஅஆ நஅஅ அஅ என்று திறந்த வாயில் ஈ நுழைவதுகூடத் தெரியாமல் எப்பொழுதும் ஆலாபனமும் ஸ்வரம்பிடிப்பதும் அவன் அப்படிப் பிடித்தான், இவள் இப்படி சங்கதி போட்டாள் என்று தானே மகிழ்வதும், சங்கீத சாகரத்தில் தவித்துத் தவித்து திக்குமுக்காடித் திண்டாடித் திரும்ப வழிதெரியாமல் திகைக்கும் நிலைமையிலிருப்பவர்களுக்குப் பாட்டுப் பைத்தியம் முற்றிவிட்டதென்றே சொல்லவேண்டும்.

* * *

“கன்னையா கம்பெனியில் கிருஷ்ணலீலா நான் பத்துத்தடவைபோயிருக்கிறேன். இருந்தா

னும் பார்க்கப்பார்க்கப் பரமானந்தம்; ஒருதரம் பார்த்தவர்கள் மறுபடி பாராதிருக்க முடியவே முடியாது. நீ என்னதான் சொல்லு. அந்தக் காட்சியும், அந்த உடையும் அந்தப் பாட்டும் அந்தப்பேச்சும், அந்த அழகும் வேறு கம்பெனியில் பார்க்கமுடியுமா. தசாவதாரம் என்னமோ ஒரு கம்பெனியில் போட்டார்கள், அடாடாடா! என்ன அற்புதம், என்ன அழகு! பிரம்மானந்தமாயிருந்தது. நானும் இதுவரையில் எத்தனையோ ரூபாய் நாடகத்துக்குச் செலவழித்துத் தலையும் பொட்டை பறந்துபோயிற்று. ஆனாலும் கடன்வாங்கியாவது இன்று போய் வரலாமென்று எண்ணித்தான் இங்கே வந்தேன். ரூபாய் எடுத்துக்கொண்டு வருகிறாயா? இருவரும் போவோம்" என்று என் சிநேகிதி மீனாக்ஷி வெகு அவசரமாய் என்னுடன் சொன்னாள். அவளுக்கு நாடகப் பைத்தியந்தான்.

* * *

ரயில் வண்டியிலேயோ, ட்ராம் வண்டியிலேயோ, கடற்கரையிலேயோ, எங்கே யாரைச் சந்திக்கிறோமென்பது கூட இல்லாமல், பணக்காரன் பரம தரித்திரனையும், அவன் மற்றொருவனையும், வெகு தாராளமாய் 'எங்கே ஒரு சிட்டிகை' என்று மூக்குப் பொடிக்குக் கையை நீட்ட அஞ்சுகிறதில்லை. அவர்களும் இரண்டொரு தடவைகளில் சிட்டிகை சிட்டிகை என்று நீட்டிய கைக்குக் கொடுத்து மூன்றாந் தடவை இனிமேல் கொடுக்கமுடியாது என்று சிரித்துக்கொண்டே சொல்லுவதும் அதைக் கேட்டுக்கொண்டே எங்கே வார் ஒருதுண்டு என்று புகையிலைக்குக் கையை நீட்டுவதும், சில சமயங்களில் மூக்குத் தூளையே வாரி வாயிற்போட்டுக் கொள்ளுவதுமாய்க் காலங் கழிக்கும் என் தம்பி ராமுடு பொடி, புகையிலைப் பைத்தியத்தின் ஒரு அம்சமென்று நினைக்கிறேன்.

அவசரமாயிருந்து நாலாவது கைக்கு ஆள் அகப்படாவிட்டால் சமையற்காரனையோ, அல்லது பஹிஷ்டையாயிருக்கும் மனைவியையோ சேர்த்துக்கொள்வதும், இரவு, பகல், அழுகை, சிரிப்பு, கோபம், தாபம் ஒன்றுமே தெரியாமலும், வேஷ்டி அவிழ்ந்தாலும், குடுமியோ முன்மயிரோ காற்றினால் பிய்த்துக்கொண்டுபோனாலும் தெரியாத அப்பேர்ப்பட்ட பிரம்மானந்த நிலைமையில் உட்கார்ந்துகொண்டு, பணம் போனாலும் சரி, நகைபோனாலும் சரி, மனைவி மக்கள்போனாலும் சரி, 'இன்னும் ஒருஆட்டம், ஒரே ஒரு ஆட்டம்' என்று தலை கால் தெரியாமல் கூத்தாடும் புல் ரங்கு ரங்கசாமி சீட்டுப் பைத்தியத்தில் முதற் பாதம்.

* * *

நடக்கும்போதும் நிற்கும்போதும் A+B, B+A, AB+BA×A×2; 2+4 என்று சதாமாரியாய் உளறுவதும், தனக்குத் தானே தலையை ஆட்டிக்கொண்டு கை விரல்களை எண்ணி, அரைக்கோணம், முக்கோணம், நாற்கோணம், அஷ்டகோணம், கும்பகோணம் முதலிய கோணங்களை எண்ணுவதும், கூட்டுவதும் கழிப்பதும் பெருக்குவதும் வகுப்பதுமே வேலையாய்ச் செய்துகொண்டிருக்கும் அம்பிக்குக் கணக்குப் பைத்தியமல்லவா.

* * *

யாரையாவது கண்டு விட்டாற் போதும், முன்னே கண்டோமா, பின்னே கண்டோமா ஒன்றுந் தெரியாது. யாரோ வீதியில் ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டால் சரி, "ஏ அம்மாமி! என்ன புஸ்தகம் அது! நாவலா? யார் எழுதியது? வடுவூரா, வேறு யாராவதா? கொஞ்சம் கொடுங்கள்; இராத்திரியே படித்துவிட்டுக் கொடுத்து விடுகிறேன். அழுக்காக்காமல் அப்படியே திருப்பி விடுகிறேன். கொஞ்சம் கொடுக்கிறீர்களா?" என்று படைப் படைக்கும் வெயிலானாலும் சரி, அவர்



கள் கூடவேபோய் கந்தையோ பொந்தையோ கதைப் புஸ்தகம் என்று பெயரிருந்தாற்போதும் என்று அதிக ஆசையுடன் வாரிக்கட்டிக்கொண்டுவரும் அம்மணியை எல்லாரும் நாவல் பைத்தியம் என்று தான் சொல்லுகிறார்கள்.

* * *

'சக்தியும் சிவமும் ஒன்று தான். அரியும் சிவனும் ஒன்று; அறியாதவன்வாயில் மண்ணு' என்று சொல்லிக்கொண்டு காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்துகொண்டு, 'ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாய்ப் போகவேண்டும், பரமாத்துமா, சத்துமா, பத்துமா எல்லாமாவும் ஏகமான மாவாகி ஏக பரம்பொருளோடு கலந்து ஒரே மொத்தையாய்ப் போகிறதே. அது தான் பேதமற்ற நிராலம்பவாலம்ப நிஷ்பரமான வஸ்துவாகி அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாகிற திவ்ய தேஜோமய சிதாகாசவெளி' என்று சொல்லுகிற என் பாட்டிக்கு வேதாந்தப் பைத்தியம்.

* * *

"ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும், என்பதுபோல் மெய்ஞ்ஞானி சுகத்தையும் துக்கத்தையும் சமமாகவே எண்ணுகிறான், அழுகையையும் சிரிப்பையும் ஒன்றாகவே நினைக்கிறான். பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் புசிக்கும் போஜனத்தையும் சுத்த உபவாஸத்தையும் ஒன்றாகவே கருதுகிறான். ஆகலால் அதுதான் சுக்ஞானம், அக்ஞானம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் தத்வஞ்ஞானம் பிரமஞ்ஞானம் முதலிய பல பெயர்களால் சொல்லப்பட்டிருக்கிறது," என்று நீ உளறுதே நான் கிளறுகிறேன் என்று ஓயாமற் சொல்லும் அம்மாஞ்சி சுந்தர சாஸ்திரிக்கு ஞானப் பைத்தியம்.

# ஹரித்துவார மகாகும்ப (வட இந்தியா) இமயமலை மகாபிரஸ்தான யாத்திரை.

(சுவாமி அற்புதானந்தர்.)

தென் இந்தியா சமரச சன்மார்க்க சங்கப் பிரசாரகர்.

இந்து மதப்பற்றுள்ள மக்களிலுள் மகா கும்பம் என்பது ஒரு பெரும் விழா. இவ்விழா, வட இந்தியாவின் முக்கிய க்ஷேத்திரங்களாகிய உஜ்ஜைனம், நாசிகம், பிரயாகை, ஹரித்துவாரம் என்பவைகளில் பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை ஏற்படும். தென்னிந்தியாவின் நகரமாகிய கும்பகோணத்தில் பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை ஏற்படும் மகாமகத்தைப் போலவே. இம்மகாகும்பம் பெரும் கூட்டம் கொண்ட திருவிழாவாக இருக்கும். நளது பிரபவ வருடம் வைகாசி மாதத்தில் இம்மகாகும்பம் ஹரித்துவாரம் என்ற புண்ணிய நகரத்தில் நடைபெறுகின்றது.

ஹரித்துவாரம் என்ற க்ஷேத்திரம் ஐக்கிய மாகாணத்தின் ஜில்லாக்களில் ஷாரன்பூர் என்ற ஜில்லாவின் ஒரு தாலூகாவின் சிறந்த நகரம். இந்நகரம் மிகப் பண்டைய நகரமெனச் சரிதைகளும் மத நூல்களும் கூறும். அலக்நந்தா, மந்தாகினி, பாகீரதி என்ற புண்ணிய நதிகள் இமயமலையில் உற்பத்தியாகி கருணப்பிரயாகை, தேவப்பிரயாகை என்ற இடங்களில் சங்கமமாகி கங்கை என்ற பெயர் பூண்டு இந்நகர் ஓரம் சிறப்பாகச் செல்லும். இந்நதிக்கரையில்

அனேக கோயில்களும் மடங்களும் தர்மசாலைகளும் உள்ளன. இவைகளில் முக்கியமானவையாக ஹரிக்காபைடி, கேங்கை கோயில், சங்கராசாரியர் மடம் என்பனவைகளைக் கூறலாம். லட்சக்கணக்கான மக்கள் இம்மகாகும்ப சமயத்தில் இங்கு ஒருங்குகூடி வைசாகத்தில் ஸ்நானம், பிதுர்மாதர் (பிதா மாதா) தர்ப்பணம், தானதர்மம் செய்வர். இந்து மதப் பிரிதிபாதனம் செய்பவர்களாகிய சன்னியாசிகள், உதாசீனர்கள், வைணவர்கள், நிர்மலர்கள், நாத்துகள் முதலிய சாம்பிரதாயிகள் பெரும் கூட்டமாக ஒருங்குசேர்ந்து மதப்பிரசாரம் செய்வர்: மகேச்வர பூஜைகளையும் நடாத்துவர்.

ஹரித்துவாரத்திற்கு அடுத்தாப்போல் கன்கல், ஜ்வாலாபூர் இப்புறத்திலும், சத்தியநாராயணன் கோயில், ஹிரிஷிகேசம் அப்புறத்திலும் உள்ளது. இவ்விடங்களில் பண்டைய ஐதிகக் கோயில்களும், புண்ணிய ஸ்தலங்களும் உள்ளன. கன்கலில் தக்ஷபிரஜாபதி யாகஞ்செய்த இடம் கோயில்களாக அமைக்கப்பட்டுள்ளன. ஜ்வாலாபூரில் அம்மன் கோயில் ஒன்று உள்ளது. இதற்கெதிர்த்தாப்போல் கங்கை நதியின் அப்புறத்தில் சண்டி கோயிலும் உள்ளது. இதற்கு அருகில் காங்கிரி குருகுலம் உள்ளது. ஹரித்துவாரத்திற்கும் சத்தியநாராயணன் கோயிலிற்குமிடையில் பீமகோடா உள்ளது இதன் அருகில் ஒரு குண்டம் இருக்கிறது. இதில் யாத்திரிகள் யாவரும் ஸ்நானம் செய்வர். இதற்கடுத்தாப்போல் சப்த சரோவரம் என்ற புண்ணிய பூமி உள்ளது. இங்கு கங்கை ஏழு பிரிவாகப் பிரிந்து, உடனே ஏழு பிரிவும் ஒரே சங்கமமாகின்றது. தினப்பிரதி நூற்றுக்கணக்கான மக்கள் ஹரித்துவார யாத்திரைக்கென பல பாகங்களிலிருந்து இருப்புப்பாதை மார்க்கமாக வந்திறங்குவர். நாலு ஐந்து நாள் தங்கி ஐதிக முறைப்படி யாத்திரையை முடித்துக்கொண்டு இருப்புப்பாதை மார்க்கமாகவே திரும்பி விடுவர்.

இம்மகாகும்பம் முடிந்தவுடன் மகாபிரஸ்தான யாத்திரை ஆரம்பிக்கப்படும். இந்த யாத்திரை ஹரித்துவார மகாகும்பம் பூர்த்தியானவுடன், அதாவது நாற்பத்தெட்டு வருடத்திற்கொருமுறை ஏற்படும். எங்ஙனமெனில் ஹரித்துவாரத்திற்குப்பின் பன்னிரண்டு வருடமாகியதும் பிரயாகை மகாகும்பம் ஏற்படும். பின் பன்னிரண்டு வருடமாகியதும் நாசிக் மகாகும்பம் ஏற்படும். பின் பன்னிரண்டு வருடமாகியதும் உஜ்ஜைனே மகாகும்பம் ஏற்படும். பின் பன்னிரண்டு வருடமாகியதும் ஹரித்துவாரம் ஏற்படும். இந்த யாத்திரை மகத்துவங்களைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. இந்த யாத்திரையில் பிரதிதினம் மாலை ஒவ்வொரு இடங்களிலும் மகாபிரஸ்தான மகாத்மியம் வாசிக்கப்படும். அக்கதைச் சரிதங்கள் அவ்வவ்விடங்களின் சிறப்பையும் குறிப்பிடும். இந்த யாத்திரை சுமார் 354 மைல்கள் கொண்டுள்ளது. அதாவது ஹரித்துவார இருப்புப்பாதை ஸ்டேஷனிலிருந்தும் கேதாரநாதம் 151 மைல்களுள்ளது. கேதாரநாதமிருந்து பத்ரிநாதம் 128 மைல்களுள்ளது. பத்திரிநாதத்திலிருந்து மோயில்சேளரி என்ற இருப்புப்பாதை ஸ்டேஷன் 75 மைல்களுள்ளது. எனவே இரண்டு இருப்புப்பாதைக்குமிடையில் நடந்து செல்லவேண்டிய பாதைகளின் தூரம் 354 மைல்களாகின்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் பிரதிதினம் இம்மகாபிரஸ்தான யாத்திரையில் செல்லமுயலுவர். ஹரித்துவாரமிருந்து கேதாரநாதம் செல்லும் வழியில் ஹிரிஷிகேசம், வியாசகேங்கை, தேவப்பிரயாகை, ருத்திரப்பிரயாகை முதலிய புண்ணிய



ஸ்தலங்கள் கிடக்கும். இம்மலைகளில் நடக்கக்கூடாத மக்களுக்கு ஜம்பான்கள் வாடகைக்கு கிடைக்கும். இந்த 354 மைல் தூரத்தை 40 நாட்களில் யாத்திரை புரிவதையே மகாபிரஸ்தான யாத்திரையெனக் கூறலாகும். இராமாயணம், மகா பாரதம் முதலிய இதிகாசங்கள் இவையின் சிறப்பை நன்கு விளக்கும். வழியில் உணவு, இருப்பிட வசதிகள் எல்லாம் நன்கு அமைக்கப்பட்டிருக்கும். ஹரித்துவாரமிருந்து பீமகோடா ஒரு மைலிலுள்ளது; இங்கிருந்து ஸப்த சரோவர், பின் சத்தியநாராயணன் கோயில், பின் ஹிரிஷிகேசம், செல்லலாகும். இவை 14 மைலினுள் உள்ளன. ஹிரிஷிகேசத்திற்கும் சத்தியநாராயணன் கோயிலிற்கும் 7 மைல் தூரம்; சத்தியநாராயணன் கோயிலிற்கும் சப்த சரோவருக்கும் நான்கு மைல் தூரம்; சப்த சரோவருக்கும் பீமகோடாவிற்கும் இரண்டு மைல் தூரம். சத்தியநாராயணன் கோயிலில் வெள்ளைக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூர்த்தியுள்ளது. ஹிரிஷிகேசத்தில் அக்கினி குண்டம், சங்கராசாரியர்மடம், பரதர்கோயில் உள்ளன. இங்கிருந்து மூன்றுமைல் தூரத்தில் லெட்சுமணன் ஜூலா உள்ளது. இங்கிருந்து 15-வது மைலில் வியாஸகேங்கை உள்ளது. இங்கிருந்து 13-ம் மைலில் தேவப்பிரயாகை, உள்ளது. இங்கு பாகீரதியும் அலக்நாந்தாவும் சங்கமமாகின்றன. வாசுதேவமூர்த்தி கோயில் சங்கராசாரியரினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாகீரதியின் கரையோரமாக கங்கோத்திரி செல்பவர்கள் செல்லுவர். இங்கிருந்து இத்தீர்த்தம் 100 மைல் தூரத்திலுள்ளது. கங்கோத்திரி சுமார் பதினாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அங்கு கங்காதேவி கோயிலுள்ளது. இக்கோயிலை அமர் சிங் தாப்பா என்ற கூர்க்கியர் கட்டியுள்ளனர். இவர் கர்வல் சமஸ்தான சேனாதிபதியாக இருந்தனர். கங்கைக் காவடிகள் இங்கிருந்து கட்டப்படும். குளிர் நாட்களில் இக்கோயில் மூடப்பட்டு முக்பா வென்ற கிராமத்திற்கு மக்கள் தங்க வந்துவிடுவர்.

தேவப்பிரயாகையிலிருந்து ஸ்ரீநகரம் 30 மைல் தூரத்திலுள்ளது. இங்கு கமலேச்வரர் ஆலயமும், சங்கராசிரியரின் சிருங்கேரி மடமும் உள்ளன. இங்கிருந்து 20 மைல் தூரத்தில் ருத்ரபிரயாகையுள்ளது. இங்கு மந்தாகினியும், அலக்நந்தாவும் சங்கமமாகின்றன. கேதாரநாதம் மந்தாகினி நதிக்கரை ஓரத்திலுள்ளது. ருத்ரபிரயாகையிலிருந்து கேதாரம் 49 மைல் தூரத்திலுள்ளது. இதன் இடையில் 24 மைலில் குப்தகாசி தீர்த்தமுள்ளது. இக்குப்தகாசியும் மந்தாகினி நதிக்கரையிலுள்ளது. இதற்கு எதிர்த்தாப்போல் அக்கரையில் ஊக்கி மடம் உள்ளது. ஊக்கிமடத்தில் சங்கராசாரிய சுவாமிகளினால் பிரதிபாதிக்கப்பட்ட உஷா கோயிலுள்ளது குளிர்கால நாட்களில் பத்திரிநாராயணன் கோயில் பூஜை செய்யும் ராவல் இங்குதான் தங்குவர். இவ்விடம் சுமார் ஆறாயிரம் அடி உயரத்திலுள்ளது. இங்கிருந்து (குப்தகாசி) கௌரிகுண்டம் 19 மைல் தூரமுள்ளது. இக்குண்டம் சுடு தண்ணீர் கொண்டுள்ளது. உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், அரிசி முதலியவைகளை துணியில் கட்டி இத்தண்ணீரில் இட்டு சில நிமிடநேரமிருந்தால் அவைகள் உணவுக்குத்தகுந்தவையாகி விடும். இவ்விடம் 7,500 அடி உயரம் உள்ளது. இங்கிருந்து ஆறுவது மைலில் கேதாரநாதமுள்ளது. இக்குன்று 12,000 அடி உயரம்; மந்தாகினி அருவியின் கரையிலுள்ளது. இதற்கப்பால்தான் கைலாயமுள்ளதென்பர். இங்கு அப்பர் சுவாமிகள் சென்று திரும்பியதாகவும் கூறப்படும். குளிர் மிகுதியாயும், ஆற்றின் ஜலம் சிலுசிலுப்பாகவும், மலஜல உபாதிகளைக் கழிப்பது மிக் கஷ்டமாகவும், குளிப்பது பாத்திரசுத்தி செய்வது, வேஷ்டி முதலியன

துவைத்துக்கொள்வது மிக்கவும் கஷ்டமாக இருக்கும்.

இங்கிருந்து திரும்பும் சமயம், துங்கநாதம் என்ற கோயில் கிடைக்கும். இக்கோயில் சுமார் பதினோராயிரம் அடி உயரத்திலுள்ளது. இதன் பாட்டை மிக்க கஷ்டமானது. இச்சிகரத்தினருகில் ஆகாச கங்கை உற்பத்தியாகின்றது. இங்கிருந்து கோபிநாதம் சென்று, பின் சாமோலி சென்று பின் பாண்டேச்வரம் சென்று பத்திரிநாராயணம் செல்லல்வேண்டும். இக்கோயில் அலக்நந்தா நதி அருகிலுள்ளது. இங்கும் ஒரு தப்தகுண்டம் என்ற அக்கினி குண்டம் உள்ளது. இக்கோயிலில் நாராயண மூர்த்தி யென்ற விஷ்ணுவும், நரன் என்ற அருச்சுனனும் காணலாம். இவ்விரு விக்கிரகங்களுக்கு முன்பாக நாரத மகரிஷியும் குபேர மூர்த்தியும் வீற்றிருப்பார்கள். இங்கிருந்து பிரம்மகபாலம் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இவ்வழியாய் தீபேத், பூட்டான் செல்லுபவர்களும் உள்ளார். இப்பிரம்மகபாலத்திலிருந்து கிம்புருஷ காண்டம் சுமார் 120 மைல் தூரத்திலும், இதன் அருகில் மான் சுரோவர் என்ற அழகிய ஏரியும் உள்ளன. பத்திரிநாராயணம் தரிசித்த வுடன் யாத்திரிகள் நந்தப்பிரயாகை திரும்புவர். இங்கிருந்து கர்னப்பிரயாகை இருபதாவது மைலில் உள்ளது. இங்கிருந்து ஆதிபத்ரி பதிமூன்றும் மைலில் உள்ளது. இதன் அருகில் இராம கெங்கை, கௌசிகை முதலிய நதிகள் உள்ளன. இவையைப் பாலவாயிலாகத் தாண்டியவுடன் நைநிதால், பீமதால், கோராதால் என்ற மலை நகரங்களின் மார்க்கமாக மேயில்சேளரி என்ற இடம் சேரலாம். இதன் அருகில் காட்குதாம் என்ற இருப்புப்பாதை ஸ்டேஷன் குமாவூன்—ரோகில்கண்டு லைனில் உள்ளது. இக்கிளை அவுத்-ரோகில்கண்டு இருப்புப்பாதைத் தொடர்ச்சியில் பேரைலி என்ற ஜங்ஷனில் இணைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து இந்தியாவில் எல்லா நகரங்களுக்கும் இணைப்புக்களுள்ளதினால் மகாபிரஸ்தான யாத்திரிகர் வெகுவாகத் தத்தம் நகரங்களேருவர். தென் இந்தியா திரும்புவோர்கள், மதுரா, பிருந்தாவனம், அயோத்யை, பிரயாகை, காசி, கயை, பைஜிநாதம், சிம்மாசலம் முதலியன தெரிசித்து இராமேசுவரம் ஏகி இல்லம் ஏக வேண்டும். வட இந்தியர்கள் மதுரா, பிருந்தாவனம், அயோத்யை, பிரயாகை, காசி தரிசித்துத் தம் இல்லம் சேருவர். இம்மகாபிரஸ்தான யாத்திரையில் 108 கங்கைகளையும், 1008 ஸ்தலங்களையும் தரிசிக்கவேண்டிய அவசியங்களுள்ளன.

இத்தகைய அகில இந்தியா ஹரித்துவார மகாகும்ப யாத்திரை திருவிழா தினங்களும், அகில இந்தியா மஹாபிரஸ்தான யாத்திரை நந்நாட்களும் நாளது 1927-ம் வருடம் ஏப்ரல் மாதம் (பிரபவஹு வைகாசிமீ) ஆரம்பத்திலிருந்து ஏற்படுவதினால் அவ்வமயத்தில் ஆங்கு தென் இந்தியா தென் ஆற்காடு ஜில்லா கருங்குழி தாலூக்கா வடலூர் பெருவெளியின் கண் 1867-ம் ஆண்டில் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணைத் தலைவரெனும் திருவருட் பிரகாச வள்ளலாகிய ஸ்ரீமத் இராமலிங்கப் பெருந்தகைகள் ஸ்தாபித்த சுத்த சன்மார்க்க சபையின் அறுபதாம் ஆண்டு டைமண்டு ஜூபிலி விழாவை திருவருட்பா ஊர்வலம், திருவருட்பாபாராயணம், மகேச்வர பூஜை என்ற திருப்பணிகளினால் அகில இந்தியா மக்களைத் தமிழ் மறையின் ஆனந்தாமிர்தத்தில் மூழ்கிடச் செய்ய, தென் இந்தியா சமரஸ சன்மார்க்க சங்கத்தினர்கள் தீர்மானித்திருப்பதினால், தாங்கள் அக்கைங்கரியங்கள் நன்முறையில் நடைபெறுவதற்காகிய சௌகரியங்களிற்கு உதவிபுரிந்து நடத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.



இத்திருத்தல யாத்திரை புரிய முற்படும் தமிழ் மக்கள் கல்கத்தா மார்க்கம் செல்லுதலே நன்மையாகும். தென் இந்தியாவிலிருந்து பம்பாய் மார்க்கமோ ஐதிராபாத் மார்க்கமோ செல்பவர்கள், டெல்லி சென்று லக்ஸர் திரும்பி ஹரித்துவாரம் ஏகுதலே நன்மையாகும். கல்கத்தாவிலிருந்து டோரடேன் இருப்புப் பாதைத் தொடருக்குக் கட்டணச்சீட்டு பெறுபவர்கள் இடையில் இறங்காமல் ஹரித்துவாரம் செல்லலாம்.

தென்இந்தியா சமரச சன்மார்க்க சங்க (1925-26-27) நடைமுறை நிகழ்ச்சிகள்.

அக்டோபர் 1925 காவேரிப்பாக்கம் திருவருட்பிரகாச திருவுருவப்பட ஊர்வலம்.

நவம்பர் 1925 திருவண்ணமலை திருவருட்பிரகாச திருவுருவப்பட ஊர்வலம்.

டிஸம்பர் 1925 மஞ்சக்குப்பம் கூடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் திருவுருவப்பட ஊர்வலம்.

ஜனவரி 1926 வடலூர் சமரச சன்மார்க்க சங்கமகாநாடு.

பிப்ரவரி 1926 காரைக்காலில் திருவருட்பா பிரசாரம்.

மார்ச்சு 1926 ஆலப்பிழை கொல்லம் திருவருட்பா பிரசாரம்.

ஏப்பிரல் 1926 திருவநந்தபுரம்-நாகர்கோயில் திருவருட்பாபிரசாரம்.

மே 1926 கோட்டாரில் திருவருட்பா பிரசாரம்

ஜூன் ஜூலை 1926 திருநெல்வேலி திருச்செந்தூரில் திருவருட்பா பிரசாரம்.

ஆகஸ்டு 1926 இரங்கோன் கிருஷ்ணஜயந்தி வாரம்; திருவருட்பிரகாச வள்ளலார் பிரசாரம்.

செப்டம்பர் 1926 இரங்கோன் விநாயகசதுர்த்தி வாரம்; திருவருட்பிரகாச வள்ளலார் பிரசாரம்.

அக்டோபர் 1926 இரங்கோன் திருவருட்பிரகாச வள்ளலார் 103-வது ஆண்டு நட்சத்திரப் பிரசாரம்.

நவம்பர் 1926 இரங்கோன் தமிழர் தினப் பிரசாரம்.

டிஸம்பர் 1926 இரங்கோன் தனவைசிய இளைஞர் சங்கத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் பிரசாரம்.

ஜனவரி 1927 இரங்கோன் திருவருட்பா ஊர்வலம், திருவருட்பா 60-ம் ஆண்டு டைமண்டு ஜூபிலி பிரசாரம்.

பிப்ரவரி 1927 இரங்கோன் பொதுஜன சமூகத்தில் மாஜிக்லாண்டேர்ன் பிரசாரம்.

# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

(539-வது பக்கத் தொடர்ச்சி)

## இருபத்தைந்தாம் அத்தியாயம்.

மூர்பிலி அல்லது மொன்ஸல்,—லக்—விலோன்—கயல்—கொல்லம்—குமாரீ—டிலே—மலபார்—குஜராட்—கான்ஹா — கம்பேயா—ஸோமனுத் — ரஸ்மகுரான் — ஸோகோத்ரா—சடுலி—பாஸ்டக்.

மூர்பிலி அல்லது மொன்ஸல் என்பது மலபாரிலிருந்து ஐந்நூறு மைலுக்கு வடக்கேயுள்ளது. அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அந்நாட்டு மலைகளில் வைரக்கற்கள் உண்டாகின்றன. பெருத்த மழைகள் பொழிந்தபின் அந்நாட்டார் அவைகளைத் தேடியெடுப்பார்கள். வெயிற் காலத்திலுங்கூட வெயிலின் கொடுமையினாலுண்டாகும் கஷ்டங்களைக் கவனிக்காமல், அவர்கள் அம்மலைகளின் மேலேறி அங்குள்ள கற்களினிடையே கிடக்கும் கணக்கற்ற [illegible]வைரக் கற்களை [illegible]சேகரிப்பார்கள். [illegible] இவ்வர் [illegible] கள் தேடி[illegible]செலவோர்க்கு அம்மலைகளின்

190380
[illegible] 600 008

பாறைகளினிடையேயுள்ள வங்குவளைகளிற் கார்த்துறையும் கணக்கற்ற பெரும் பாம்புகளினால் பின்னும் பெரிய அபாயங்கள் உண்டாகின்றன. அந்த வங்கு வளைகளிற்றான் அளவற்ற வைரங்கள் கிடைக்கின்றன. வைரங்களைச் சேகரிப்பதற்கு அவர்கள் செய்யும் உபாயங்களிற் பின் வருவதும் ஒன்று: மேற்குறித்த பாறைகளின் மேல்பாகங்களில் அவைகளின் அடியிலுறையும் சர்ப்பங்களைத் தின்னுவதற்காக ஏராளமான வெண் கழுகுகள் காத்திருக்கின்றன. அதை யறிந்த அந்நாட்டார், ஆழமான பள்ளத்தாக்குகளில் இறங்கவும் செங்குத்தான பாறைகளின்மேல் ஏறவும் பயந்து, கழுகுகள் இருக்கும் பாறைகளின் மேல் விழுமாறு மாமிசத் துண்டுகளை யெறிவார்கள். இவ்வாறு கீழே விழுந்து கிடக்கும் மாமிசத் துண்டுகளைக் காணும் கழுகுகள் அவற்றின் மேல் சட்டென்னப் பாய்ந்து அவற்றின் ஈரமான பாகங்களில் ஒட்டிக்கொள்ளும் சிறு கற்களுடனும் பருக்கைக் கற்களுடனும் அவற்றைக் கவ்விக்கொள்கின்றன. வைரங்களைத் தேடுவதில் கண்ணாயிருப்பவர்கள் கழுகுகளின் கூடுகளைக் காவல் காத்து, கழுகுகள் அவைகளை விட்டு வெளியே சென்றபின் மாமிசத் துண்டினின்றும் விழுந்த சிறு கற்களைப் பொறுக்கிக்கொண்டு, கழுகுகளின் எச்சத்தில் பெரிய வைரக்கற்கள் இருக்கின்றனவாவென்று ஆராய்வார்கள்.

அந்நாட்டு அரசர்களும் பெரிய மனிதர்களும் இவ்வாறு கிடைக்கும் வைரக்கற்களிற் சிறந்தவைகளையும் சேர்த்தியானவைகளையுந் தங்களது சொந்தத்திற்கு வைத்துக்கொண்டு மீந்தவற்றை வியாபாரிகள் மூலமாக விற்று விடுகின்றனர்.

'லக்' என்பது ஸான்தோமுக்கு மேற்கில் இருக்கின்றது. அந்தாண பிராமணர்களது பூர்வ ஸ்தலம். அங்குள்ள பிராமணர்களைப் போல் நாணயமுள்ள வியாபாரிகள் உலகத்தில் வேறெங்குங்கிடையாது; எவ்வளவு லாபம் வருவதாயிருந்தாலும் அவர்கள் ஒருகாலும் பொய் சொல்லமாட்டார்கள்; தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட வஸ்துக்களை வெகு விசுவாசத்துடன் பாதுகாத்து வருவார்கள்; அவ்வாறே தரகுக்காகப் பிறரது பண்டங்களை விற்றும் மாற்றியுங் கொடுப்பார்கள். அவர்கள் தோளின் மேலணியும் பருத்தி நூலே அவர்களது அடையாளம். அதை மார்பின் குறுக்காகப் போட்டுக்கொண்டு முழங்கையின் கீழ் முடிந்திருப்பார்கள். அவர்கள் ஏக பத்தினி விரதர்கள்; அதி நிபுணரான சோதிடர்கள்; அருந்தவமும் நெடு வாழ்வுமுடையவர்கள். ஒரு வியாபாரந் தொடங்குமுன் தங்களது நிழலின் நிலையை கவனித்து சாஸ்திரீதியாக முன்னுடியே பலனறிந்து கொள்வார்கள். அவர்கள் ஒருவகைத் தழையை இடைவிடாமல் மென்றுகொண்டே யிருப்பார்கள். அதனால் அவர்களது பற்கள் உறுதி பெறுவதுமன்றி, அவர்களது ஜீரண சக்தியும் பலப்படுகின்றது.

அவர்களுட் சிலர் தங்குவி யென்ற வைதிகர்கள். அவர்கள் ஆடைகள் சிறிதுமின்றிக் கொடுந்தவத்தினராய்ப் பசுக்களைப் பூஜித்து வருபவர்கள். அவர்கள் பசுவின் பிம்பமடித்த சிறு பித்தளை விக்கிரகங்களை நெற்றியிற் கட்டிக்கொள்வார்கள்; எருதின் எலும்பைச் சாம்பலாக்கி அச்சாம்பலைக்கொண்டு ஒரு சாந்துசெய்து அதை வெகு பக்தியுடன் தங்களது உடம்பின் பல விடங்களிலும் பூசிக்கொள்ளுவார்கள்.

உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும் ஜீவனுள்ளவை யென்பது அவர்களது நம்பிக்கையாதலால், அவர்கள் உயிருள்ள பிராணிகள்



எதையும் கொல்லவாவது, தின்னவாவது மாட்டார்கள். கீரை, பூண்டு, காய், கிழங்குகளையும் உலர்த்தியன்றிப் பச்சையாய்த் தின்னார்கள்.

அவர்கள் நம்மைப்போல் தட்டுகளில் சாப்பிடுவதில்லை. உலர்ந்த வாழை மட்டையில் தங்களது ஆகாரத்தை வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள்.

அவர்கள் மணற்பாங்கான விடங்களில் மலஜலபாதைகளைக் கழிப்பார்கள்; புழுக்கள் பெருகாமல் இருக்குமாறு அம்மண்ணை அங்குமிங்கும் சிதறி விடுவார்கள்; அப்படிச் செய்தால் புழுக்கள் அழிந்துபோய் விடுமாம்.

அவர்களிற் சிலர் நூற்றைம்பது வருஷம் வரை ஜீவித்திருக்கின்றனர்; இறந்தபின் அவர்களது உடல்கள் தகனம் செய்யப்படுகின்றன.

ஸிலோனை வர்ணித்தபொழுது அங்குள்ள ஒரு பெரிய மலையைப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். இரும்புச் சங்கிலிகளைக் கொண்டுதான் அதன் உச்சியை ஏறக்கூடுமென்றும், அந்த உச்சியில் ஆடம் என்பவரது பாதம் இருப்பதாக ஸரேஸர் சொல்வதாகவும் கேள்விப்பட்டேன். விக்கிரகாராதனைக்காரர்கள், அது விக்கிரகங்களை முதல் முதல் செய்து வரும், அந்நாட்டு அரசரின் மகனுமான ஸோகமான் பர்கான் என்பவரது தேகமென்றும் அவர் துறவறம் பூண்டு எவ்விதமான போதனைகளுக்கும் போகங்களுக்கும் இணங்காமல் அம்மலை யுச்சியில் ஏகாந்தமாய் வசித்து வந்ததாகவும் அவர் இறந்தபின் அவரது தகப்பன், அவரைப்போல் சொர்ண விக்கிரகமொன்றைச்செய்து, ஆடைகளாலலங்கரித்து, அதை அத்தீவிலுள்ளோரெல்லாம் வணங்க வேண்டுமென்று உத்தரவு செய்ததாகவும், அதுவே விக்கிரகாராதனைக்கு ஆரம்பமென்றும் சொல்லுகிறார்கள்.

அந்த ஸ்தலத்திற்கு நெடுந்தூரத்திலிருந்தும் யாத்திரிகர்கள் வருகின்றனர். அவர்கள் அங்கு அதிக சிரத்தையுடன் காக்கப்பட்டுவரும் அப்புனிதரின் முன்பற்களையும் வட்டிலையும் வெகு பயபக்தியுடன் தரிசனஞ்செய்வார்கள்.

ஆனால் ஸரேஸர்கள் அவையெல்லாம் ஆடம் என்பவரது சின்னங்களென்று சொல்லி வந்ததினால் கி. பி. 1281-ம் வருஷத்தில் குப்ளேகான் தனது தூதர்களைச் சிலோன் அரசனிடம் அனுப்பி, அவரிடமிருந்து அவ்விராஜ குமாரனது பற்களில் இரண்டு, சில ரோமங்கள், அவர் உபயோகித்த வட்டில் ஆகிய இவைகளை யிரந்து வரும்படியும், அவை கம்பளுவுக்குள் வருமுன், அந்நகர வாசிகள் சகல மரியாதைகளுடனுஞ்சென்று அவற்றை ஊருக்கு வெளியிலேயே வரவேற்றுத் தன்னெதிரில் கொண்டு வரவேண்டுமென்றுங் கட்டளையிட்டார்.

கயல் என்பது ஒரு பெரிய பட்டணம். அதன் அரசனுக்கு அஸ்டர் என்று பெயர். அவர் முன்சொன்ன அரசர் நால்வரில் ஒருவர். பெருத்த பணக்காரர்; வியாபாரிகளிடம் அதிகம் அன்புள்ளவர்; முன்னூறு வைப்பாட்டிகளை யுடையவர்.

அந்நாட்டு ஜனங்களெல்லாம் "தாம்பூலம்" என்னும் ஒரு தழையை வாயிற்போட்டுக்கொண்டு, வாசனைத் திரவியங்களுடனும் சுண்ணாம்புடனும் சதா மெல்லும் வழக்கமுடையவர்கள்.

கூலம் என்பது மலபாரிலிருந்து தென்மேற்காக, ஐந்நூறு மைல் தூரத்திலிருக்கின்றது. அங்குள்ளவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள்; அங்கு கிறிஸ்தவர்களும் யூதர்களுங்கூட இருக்கின்றனர். அவர்களது பாஷை வேறு. அங்கு மிளகு, பிரவில், நீலி, கருஞ்சிங்கங்கள், பல விதமான கிளிகள் ஆகிய இவைகள் இருக்கின்றன. கிளிகளிற் சில பனிக்கட்டியைப்போல்

சுத்த வெண்ணிறமாகவும் வேறு சில நீல நிறமாகவும், பின்னுஞ் சில சிவப்பு நிறமாகவுமிருக்கும். சிறிதும் பெரிதுமான மயூரங்களும் மயில்களுங்கூட அங்குண்டு. ஆனால் அவை நம் நாட்டிலுள்ளவைகளைப் போலிருப்பதில்லை.

பழ வகைகளும் அங்கு விசேஷமாகக் கிடைக்கின்றன.

அந்நாட்டார் காமாதுரர்கள். தங்களது சகோதரிகளையும் மற்றும் நெருங்கிய பந்துக்களையும் விவாகம் செய்து கொள்ளுகின்றனர். (மருமக்கத்தாயத்திற்குக்காரணம் இதுதானோ?)

சோதிடமும் வைத்தியமுந்தெரிந்தவர் அனேகர் அங்குண்டு.

குமாரியில் மனிதரைப்போன்ற பெருத்த வாலில்லாக் குரங்குகள் இருக்கின்றன. அங்கு நாங்கள் துருவ நட்சத்திரத்தைக்கண்டோம்.

திலாயில் ஒரு அரசனுண்டு. அங்குள்ள ஜனங்களுக்குச் சொந்தமான பாஷையுண்டு. அவர்கள் விக்கிரஹாராதனைக்காரர்கள். வாசனைத் திரவியங்கள் அங்கு விசேஷமாக விளைகின்றன.

மங்கி தேசத்துக் கப்பல்கள் அங்கு வருகின்றன.

மலபார் என்பது மேற்கேயுள்ள ஒரு ராஜ்யம். அங்கும் குஜராத்திலுமுள்ள கடற்கொள்ளைக்காரர்கள் ஒரோர் சமயங்களில் நூறுக்கு மேற்பட்ட கப்பல்களுடன் புறப்பட்டுச் சென்று, வியாபாரிகளைக் கொள்ளையடிப்பர்கள். அவர்கள் தங்களது பெண்டுபிள்ளைகளுடன் கோடை காலமெல்லாம் சமுத்திரத்திலேயே சஞ்சரிப்பார்கள்.

குஜராத்தில் பருத்தி விசேஷமாக விளைகின்றது. அது ஆறு பாதம் (1 பாதம் = ஆறு அடி) உயரம் வளர்ந்து இருபது வருஷம் வரை பலன் தருகின்றது; ஆனால் பன்னிரண்டு வருஷங்களுக்குமேல் உண்டாகும் பருத்தி மெத்தைக்குத்தான் ஆகுமேயன்றி நூல் நூற்பதற்கு உதவாது.

கானே என்னுமிடத்தில் சாம்பிராணி குவியல் குவியல்களாகக் கிடைக்கும். அது குதிரை வியாபாரம் விசேஷமாக நடைபெறும் ஒரு பெரிய பட்டணம்.

காம்பேயா என்னுமூரில் நீலமும், பட்டுத்துணியும், பருத்தியும் விசேஷமாகவுண்டு.

ஸெமேனத் (ஸோமனத்) என்னும் ராஜ்யத்தில் ஒரு விசித்திரமான பாஷை பேசப்படுகின்றது. அங்குள்ளவர்கள் விக்கிரகாராதனை செய்யும் நல்ல சுபாவமுள்ள வியாபாரிகள்.

ரெஸ்மகுரான் என்பது விக்கிரகாராதனைக்காரரும் ஸரேஸரும் வசித்துவரும் ஒரு பெரிய ராஜ்யம்.

பெரிய இந்தியாவின் கடைசியான மாகாணம் வடமேற்கு மூலையிலிருக்கின்றது. அது ஐந்நூறு மைல் விஸ்தீரணமுள்ளது. அதனருகில் இரண்டு தீவுகள் இருக்கின்றனவாம். ஒன்றில் புருஷர் மாத்திரமும் மற்றொன்றில் ஸ்திரீகள் மாத்திரமும் வசித்து வருகின்றனராம். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் புருஷர்கள் ஸ்திரீகளது தீவுகளுக்கு வருவார்களாம். அந்த ஸ்திரீகள் தங்களது புதல்வர்களைப் பன்னிரண்டு வயது வரை வளர்த்துப் பின் அவர்களது தகப்பன்மாரிடம் அனுப்பிவிடுவார்களாம். அந்நாட்டுச் சீதோஷ்ண ஸ்திதியும் காற்றின் விசேஷமுமே இவ்வழக்கத்திற்குக் காரணமென்று தோன்றுகின்றது. அவர்கள் கிறிஸ்தவர்கள். அவர்களது குரு, ஸோகோத்திராவிலிருக்கும் குருவுக்குக் கீழ்ப்பட்டவர். அவர்கள் மீன் பிடிப்பதில் சமர்த்தர்கள்; அம்பர் வாஸனைத் திரவியத்தை விசேஷமாகச் சேகரித்து வைத்திருக்கின்றனர்.



ஸோகோத்திராவில் ஒரு பெரிய குரு இருக்கின்றார். அவர் ரோமிலுள்ள போப்புக்குக் கீழ்ப்பட்டவரல்லர். இவரது மேலதிகாரியாகிய ஸாட்டலி யென்பவர் பால்டக்கில் இருக்கிறார். அவர்தான் அவரை நியமிக்கிறார்.

ஸோகோத்திராக் காரரினும் மிகுந்த சாமர்த்தியமுள்ள மாந்திரிகர்கள் உலகத்தில் எங்குமில்லை. இந்தக் கெட்ட வித்தையைக் கற்றதற்காக அவர்களது குரு அவர்களை ஜாதியிலிருந்து தள்ளியுங்கூட அவர்கள் அவ்வழியே செல்லும் கப்பற்காரர்கள் தங்களைத் திருப்தி செய்யும்வரை அக்கப்பல்களை விடுவதில்லை; அவற்றைத் திருப்பிக்கொண்டு வருமாறு காற்றையேவி விடுகின்றனர்.

(தொடரும்.)

# கொலையின் கொடுமை.

(ஸ்ரீமான் மயிலை இரத்தின சபாபதி முதலியார்.)

தெய்வத் திருவள்ளுவர், ஔவைப் பிராட்டியார், கண்ணகி, மங்கையர்க்கரசியார், புனிதவதியார், தாயுமானவர், வடலூர் இராமலிங்க சுவாமிகள், உலகம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகள் தோன்றிய திருநாட்டிலே களவும் கொலையும் நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பத்திரிகைகளில் வாசிக்கும் போதெல்லாம் மயிர் சிலிர்த்து, பொறிகள் துடித்து, மனம் பகீரெனப் பதைபதைக்கும்.

நமது நாட்டின் தற்கால நிலைமை உற்றுணரில் அருள் அழிந்து, மருள் பெருகி வருகின்றது. கொலைகளின் பெருக்கை என்னென்று கூறுவது. அந்தோ! உள்ளம் நடுங்குகிறது! ஜீவகாருண்யத்தை அறவே ஒழித்து, நீரில் மூழ்குதல், நீறிடுதல் அனுட்டானஞ் செய்தல் முதலிய புறவொழுக்கங்களால் உலகை வஞ்சித்து உள் நெறியாகிய ஜீவகாருண்யத்தைக் களைந்தும் கருதாது உயிர்க்கொலை செய்து வருகின்றார்கள். எல்லா வுயிர்கட்கும் மரண வேதனையைப் பார்க்கினும் அதிக துன்பம் வேறு எதுவுமில்லை. உடலின் வேறாக உயிரென வொன்றுண்டெனல் நிச்சயம்.



கொலையே பெரும் பாபம். எல்லா வுயிர்க்கும் இன்பஞ் செய்தலே புண்ணியமெனவும், அவைகட்குத் துன்பஞ் செய்தலே பாபம் எனவும் அற நூல்கள் முழங்குகின்றன. அத்துன்பச் செயல்களுள் மாற்ற முடியாததும், மிகக் கொடியதுமான கொலைத் துன்பம் பெரும் பாபமேயாயிற்று. இத்தகைய கொடும் பாபங்களில், கொலை, களவு, கள், காமம், கோபம் என்பவற்றைப் பஞ்ச மகா பாதகங்களென்பர். இப்பஞ்சமா பாதகங்களுள்ளும் கொலையே மிகக் கொடியதாதல் பற்றி முதலில் வைத்தெண்ணப்படுவதாயிற்று. உயிர்கள்தோறும் அந்தர்யாமியாய் எள்ளினுள் நெய்போல் வியாபித்து வீற்றிருத்தலால் உயிர்க் கொலையானது இறைவனின் திருக்கோயிலை யிடித்ததோடொக்கும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்.

"எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"
"எவ்வுயிர்த்திரளும் உலகிலென்னுயிர்
எனக்குளழ்ந்துருகி"
"தம்முயிர்போல் எவ்வுயிருந் தானென்று
[தண்ணருள் கூர்

செம்மையருக்கேவலென்று செய்வேன்
[பராபரமே"
"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
[யிரங்கவு நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"
"கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்"

என்ற பெரியார் வாக்கியங்களைப் படித்தும், கேட்டும், சிலர் அருள், கருணை, இரக்கம், தயை இவ்வகை மறந்து கன்னெஞ்சமுடையவர்களாய்க் கோரமான கொலை புரிந்து வருவது நாட்டின் துர்ப்பாக்கியமேயாகும்.

கருணை நிதியாகிய கடவுளால் ஆக்கப்பட்ட சிறந்த பொருள் யாவற்றினும் மனித யாக்கையன்றோ சிறந்தது. பெறற்கரிய யாக்கையைப் பெற்றும், அதனாலடையவேண்டிய பெரும் பயனை அடையாது, பணச்செருக்கினாலும், கள் வெறியினாலும், காமவேட்கையினாலும், சூதாட்டத்தின் மயக்கத்தினாலும் உடலினின்றும் உயிரை நீக்கும்படி செய்வது என்னே விபரீதம்! என்னே ஆச்சரியம்!!

தெய்வம் ஒன்று உண்டென்பதும், பாப புண்ணியங்களுக்கேற்ப நரக, சுவர்க்கமுண்டென்பதும் உண்மையாதலால் கொலையினின்றும் என்றும் எக்காலத்தும் எவராலும் உய்ய முடியாது. தவங்களெல்லாவற்றிலும் கொல்லாமையே சிறந்த தவமெனத் திருவள்ளுவர் சாற்றியும், தாயினுஞ் சிறந்த தாயுமானவர் "கொல்லா விரதம் கொண்டவரே நல்லோர்" என்று கூக்குரலிட்டும், வடலூர் இராமலிங்க சுவாமிகள் கன்னெஞ்சமும் கரையும்படிக் கதறியும், மனித வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த அறநெறி ஓம்பி வரும் காந்தியடிகள் அஹிம்சா தர்மத்தை போதித்தும் பணப்பேயர்கள், பெண்பித்துக் கொண்டவர்கள், கட்குடியர்கள் கோரமான கொலைகளைச் செய்து இகத்தில் அபவாதத்தையும், அபகீர்த்தியையும் அடைந்து நரகத் துன்பத்திற்கு ஆளாவது அந்தோ, பரிதாபம் பரிதாபம்!

"படமாடக் கோயில் பரமற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பற் கங்காகா
நடமாடக் கோயில் நம்பற் கொன்றீயின்
படமாடக் கோயில் பரமற் கங்காமே"

என்னுந் திருப்பாட்டில் திருமூலர் ஆடு, மாடு முதலிய எல்லா உயிர்களையும் நடமாடுங் கோயிலென்று ஓதியிருக்க, புருடர், பெண்களை வருத்தச் செய்வதும், தங்கள் குழந்தைகள் பிணியால் வருந்துங்காலத்து தாய்மார்கள் தயையின்றி ஆடு, கோழி முதலிய பிராணிகளின் உடல் வருந்த, உள்ளம் வாட, உயிர் துடிக்க, பலி கொடுப்பதும் இறைவன் சம்மதமும் பெரியோர் அங்கீகாரமும் ஆகாது.

சகோதரிகளே, சகோதரர்களே, அறிவு நூல்களும், அன்பு நூல்களும், அறநூல்களும் காட்டியிருந்தும், ஆடு, கோழி, மாடுகள் கொலையும் தற்கொலையும், சிசுக்கள் கொலையும் பெருகி வருவதை ஒழிக்கவேண்டியது அவசியம். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரின் அரிய வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு, வேதாந்த சமாஜங்களும், சைவசமாஜங்களும், உண்மை வழியர்களும், பொதுநலப் பிரியர்களும் பணிசெய்யப் புறப்படுவார்களானால், நாட்டில் அன்பு, அருள், தயை, இரக்கம், ஜீவகாருண்யம் சித்தத்தில் நிலைத்து எங்கணும், அருளறம், எங்கணும் அருளரசு, எங்கணும் அருட்டொண்டு பெருகும்.

சகோதரிகளே! ஔவைப்பிராட்டியின் அரிய செயல்களை உற்று உணருங்கள், மங்கையர்க்கரசியார் வீரத்தை எண்ணுங்கள், கண்ணகியின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்.

சகோதரர்களே! பக்தியின் பெருக்கால் காளத்தி அப்பனுக்குக் கண்ணைப் பிடுங்கி அப்பிய கண்ணப்பரைக் கருதுங்கள், நீலகண்டரின் உறுதியை உணருங்கள், நெருப்பிடை நின்ற ஞானசம்பந்தரை நினையுங்கள், நீற்றறையிற் கிடந்து கடலில் மிதந்த நாவரையரை நினைந்து நினைந்து வணக்கங்கொள்ளுங்கள்.

பணிசெய்து கொலையின் கொடுமையை ஒழியுங்கள்.

# ஜோன் ஆப் ஆர்க்.

(ஜனாப் A. M. அல்லாபிச்சை)

இப் பூமண்டலத்தில் புகழுடன் விளங்கும் நாடுகள் பலவுள்ளன. அவை மாட்சிமை வாய்ந்த பிரிடன் முதலிய நாடுகளேயாமெனச் சொல்லாமலே விளங்கும். அவற்றுள் நாமீண்டெழுதத் துணிந்தது இராஜபக்தி, தேயபக்தி முதலிய சிறப்புவாய்ந்த குணங்களின் அவதாரமோ என்று வியக்கத்தக்க தகமையுடனிருந்த ஜோன் என்னுமொரு பிரஞ்சு மங்கையைப்பற்றியும், அவள் காலத்தில் பிரஞ்சு தேயமிருந்த நிலைமையைப் பற்றியும், அவள் தன் தேயத்தின் சத்துருக்களைத் தோற்கடித்துப் பெற்ற சிறந்த வெற்றியைப் பற்றியும், தன் நாட்டின் மன்னனுக்காகவும் தன் தேயத்துக்காகவும் தன்னின்னுயிரினையுமளித்த தன்மையைப்பற்றியும், அவள் காரணமாகப் பிரான்சு தேயம் புகழுடன் விளங்குந் தகைமையைப் பற்றியுமாகையால், யாமவற்றைப்பற்றிச் சுருக்கமாகச் சில விஷயங்களை முன்னர் குறிக்கின்றோம்.

இவ்வுலகத்தின் பற்பல மதங்களிருக்கின்றன. அவையாவும் சமாதானத்தையே நிலைநாட்டி மாந்தர் யாவருமிம்மை மறுமைப்பயனையடையும்வண்ணம் பேருபகார மூலகத்திற்குச் செய்கின்றன. அவற்றின் பேருபகாரத்தை யனுபவியாத காரணம் பற்றியன்றோ உலகத்தில் பல விபத்துக்கள் நேரிடுகின்றன? மேற்கூறிய மதங்களைப்பற்றி யொன்றுமறியாத ஒவ்வொரு மனிதனும் ஞமலியும் ஞமலியுமோர்றுமைப் பெரும்போர் புரிந்து தங்களுடம்பு முழுமையும் காயப்படுத்திக்கொண்டு உதிரந் தாரைதாரையாகச் சிந்தப் பேரிரைச்சல் செய்து கொண்டோடுவதைக்கண்டு, "ஐயோ! சமாதானமின்மையாலன்றோ இத்துன்பம் நேர்ந்தது" என்றறிவானென்பதற்குச் சற்றுமையப்பாடில்லை. ஆயினும், மாந்தர் பலருமிச்சிறந்த உண்மையை யறியாமையாலன்றோ பலவகைத் துன்பங்களுக்கு முதற்காரணமாகிய பற்பல பெரிய யுத்தங்கள் உலகத்தில் நடைபெறுகின்றன?

யுத்தத்திற்கு முதற்காரணமாக இருப்பது போவாவாகும். இது காரணமாக வுலகத்தில் கணக்கற்ற மாந்தர் வாட்படைக்கு இரையாகின்றனர்; பல நாடுநகரங்கள் அழிவுறுகின்றன; மாடமாளிகைகள் அழிக்கப்படுகின்றன; பொருட்செல்வம், கல்விச் செல்வமாகிய இவ்விருவகைச் செல்வமும் சீர்குலைந் தழிவுறுகின்றன; பஞ்சம், பிணி, பயமுதலியவை யதிகரிக்கின்றன; பெருமைவாய்ந்த நாடுநகர்கள் குடிகளற்ற காடுகளாக மாறுகின்றன; தருமமுதலியவை பறந்தோடுகின்றன; கள்ளர், தூர்த்தர் முதலிய பெரும்பாதகர் உலகையெய்கின்றனர்; திக்கற்ற மகளிர் துன்பசாகரத்திலாழ்கின்றனர்; காளைகள்போன்ற வீரர்களை இழந்த அவரன்னையர்கள் நாடோறும் புலம்புகின்றனர்; தம் தலைவர்களை இழந்த தலைவியர்கள் எல்லையற்ற துன்பத்திற்காளாகின்றனர்; தம் குடி ஜனங்கள் அனுபவிக்கும் இன்னலைக்காணும் அரசர்கள் மனநோயடைகின்றனர்; எவ்விடத்துங் கடைகள் சாத்தப்படுகின்றன; பெருநாட்களைக் கொண்டாடுவோர் எவரும் இலர்; கோவில்களின் வாயில்கள் சாத்தப்பட்டு அரண் வாய்ந்த கோட்டைகளாக மாறுதலடைகின்றன; வயல்களில் வேலை செய்யுமுழவர்கள் தங்கள் வயல்களின் வளத்தைச் சற்றுங் கவனிக்கின்றாரில்லை; கானகத்தில் வேட்டையாடும் வேடர்கள் தங்கள் தீத்

தொழிலை யொழித்து, விலங்குகள் சுகமடையச்செய்கின்றனர்; தங்களைக்காதலித்த ஆடவர் போர்க்களத்தில் புறங்காட்டியோடாது போராற்றலுடன் பொருதுகொண்டே மரணமெய்தியதைச் செவியுற்ற இளங்கன்னியர்கள் தங்கழகிய வதனத்தைக் கண்ணீரால் சுத்தப்படுத்துகின்றனர்; கலாசாலைகளில் மாணவரின்மையால் அவ்வாசிரியர்கள் வறுமையெய்தித் துன்புறுகின்றனர்; நியாயஸ்தலமுதலிய இடங்களில் வௌவால் முதலியவை சஞ்சரிக்கின்றன; எங்கும் பேரிரைச்சல் பெருகுகின்றது; தங்கள் தந்தை, தமையன்மார் முதலியவரிறத்தலையுந் தங்கள் மன்னன் துக்கமெய்துதலையுங் காணுமிளைஞர்கள் தங்களன்னையையும், தங்கை, தமக்கையர்களையும் நோக்கி, "நமது கொற்றவனது துன்பத்தை நீக்கிக் காத்தலும், எமது தந்தை, தமையன்மார்களைக்கொறல் செய்த சத்துருக்களை வரியப் போரிலெதிர்த்துக் கொலைபுரிதலும் எமது கடமையன்றோ?" என்று வீரவாக்கியங்கள் கூறுவதைக் கேள்வியுற்று மகளிர் தங்கள் விழிகளில் நீர்ததும்ப அவ்விளைஞர்களை நோக்கி, "எம்மைப் பாதுகாத்துவந்த ஆடவர் யாவரும் யுத்தத்தில் மாண்டனர். நீங்கள் உதவியற்ற மகளிரைத் தனியேவிட்டுப் போர்க்களத்திற் சென்றால் எங்கள் கதி என்ன?" என்று புலம்புகின்றனர். ஆகாரமின்மையால் மாந்தர் பலரும் பழங்களையும் தழைகளையுமிலைகளையு மருந்துகின்றனர்; இப்படி இறந்தவர்களெரிக்கப்படாமையாலும், புதைக்கப்படாமையாலும் காகம், கழுகு முதலிய பறவைகள் அவ்வாறு இறந்துகிடக்கும் பிணங்களைத் தங்கள் அலகால்கீறி வெளியே ஈர்த்தெறிந்து தங்கள் பசியை யாற்றிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து செல்லுகின்றன; இவ்வண்ணமழுகிக் கிடக்கும் பிணங்களின் துர்நாற்றத்தால் விஷபேதி முதலிய கொடிய நோய்கள் பரவிப்பரிதபிக்கத் தக்க நிலையிலிருக்கும் மாந்தர்களை யழிக்கின்றன; மருத்துவர்கள் பிணியாளரை நெருங்குகின்றாரில்லை; பிரலாபிக்கத்தக்க இச்சமயத்தில் யுத்தத்தில் வெற்றியடைந்த இரக்கமற்ற தோலர் பிணிக்கும், பசிக்கிரையாகாத எஞ்சிய மாந்தரைத் தங்கள் வாட்படைக் கிரையாக்குகின்றனர்; வேந்தனது அரண்மனையையுமற்றுஞ் சிறந்த மாளிகைகளையையுந் தீக்கிரையாக்குகின்றனர்; மாதர்களின் கற்பின் வன்மை மென்மையாக்கப்படுகின்றது; கர்த்தனைத்துதிக்கும் வண்ண மேற்படுத்திய தேவாலயங்கள் பாழாக்கப்படுகின்றன. ஐயோபாபம்! எவ்விடத்தும் கூக்குரல் கேட்கப்படுகின்றது. உதிர ஆறுகளோடுகின்றன. இத்தகைய விபத்துக்களால் பெருந்துன்பம் அடைந்த பிரான்சு தேயத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சில விஷயங்களைக் கூறுதல் நலமாகும்.

ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் பிரசித்தி பெற்றிருக்கும் ஆங்கிலேய நாட்டிற்கும் பிரான்சு தேயத்துக்கும் ஏறக்குறைய நூற்றாண்டுகளாக இடைக்கிடையே விட்டுப்பெரும் யுத்தம் நடந்தது. இப்பெரும் யுத்தத்தை நிகழ்த்துதற்குரிய பல காரணங்களையுமீண்டெடுத்துரைத்தல் வேண்டாக் கூறுதலெனக் கருதி மிகவும் முக்கியமான ஒரு காரணத்தையே கூறியதன் மூலமாகப் பிரான்சு தேயத்துக்குண்டான பெருந் துன்பத்தை யெடுத்துரைத்தல் நலமென எண்ணுகின்றனம். ஆங்கிலேய நாத்தை யாண்டுவந்த மூன்றாவது எட்வர்ட் என்னுங் கொற்றவன் தைரியத்திற் சிறந்தவன். இம்மன்னன் பிரான்சு தேயத்தின் பெருமையாற்றல் முதலியவற்றை யடக்கி யதனை வென்று உலகத்தில் பிரதாபத்தை நிலைநாட்டவேண்டுமென்ற பேரவா கொண்டனன். இவ்வெண்ணத்தை நிறைவேற்றுமாறு மூன்று



[illegible]ர்ட் முதற்கொண்டு ஆறாவது [illegible]வது எட்[illegible] இறுதியாகப் பல மன்னர்கள் ஹென்[illegible] தேயத்தாருடன் பெரும் போர் புரி[illegible], அவர்களுக்குச் சொல்லொண்ணாத் துன்[illegible]பத்தை [illegible]வித்தனர்.

துன்பம் இன்பத்தை நிலை நாட்டுமொரு கருவியாகும். துன்பத்தாற் பெருங் கஷ்டமனுபவிக்குமொருவன் தன்னிடங் குடியிருக்குஞ் செருக்கு முதலிய தீக்குணங்களை வேருடனழித்துத் தன்னைப் படைத்துக் காக்கும் பரம்பொருளை நோக்கி, "என்னைப் படைத்துக் காக்குமண்ணலே! யானியற்றிய தீத்தொழிலின் காரணமாக யான் அனுபவிக்கு மின்னல்களை யடியேனுக்கு மனமிரங்கி நீக்குக! கோடாகோடி அண்டங்களைப் படைக்குங் கர்த்தனே! நின் பணியாளனாகிய யான் செய்த இப்பிழையினைத் தலைவனாகிய நீ மன்னியாயாயின் என்னிலைமை எவ்வாறாகும்? இரக்க முதலிய சிறந்த குணங்களில் யாவரினும் மிக்க உறுவனே! பாமரனாகிய என் மீது இரக்கங்கொள்ளுதல் நின் கடமையன்றோ?" என்று பல படத் துதித்துக் கடவுளின் நட்பைத் தன் வயமாக்கி இம்மை மறுமை இன்பத்தைச் சிறிதேனும் தடையின்றி யனுபவிக்கின்றனன். இவ்வண்ணமே ஒரு தேயந்துன்பமனுபவிக்குஞ் சமயத்தில், அத்தேயத்திலுதித்த தேயபக்தன் எல்லையற்ற அன்புடையவனாய்த் தெய்வத்தை நோக்கி, "என் தேவனே! என் தேயமறிவின்மையாற் செய்த பிழைகளின் காரணமாக இப்பொழுது துன்பமெய்துகின்றது. இத்துன்பத்தை நீக்கி இன்பமடையும் வண்ணம் நீ உதவி புரிவாயாக!" என்று துதித்துக் கூடிய சீக்கிரத்தில் தன் முயற்சி முதலியவற்றால் அத்தேயத்தினின்பத்தை நிலைநாட்டுகின்றனன். மேற் கூறிய விஷயங்களிலிருந்து துன்பம் காரணமின்றி யுண்டாவதில்லையென்றும், துன்பமே இன்பத்தை நிலை நாட்டுமொரு கருவியென்று மறிகின்றோம்.

அப்படியாயின் பிரான்சு தேயமும் பதின்மூன்றாவது நூற்றாண்டில் காரணமின்றித் துன்பமெய் திலதெனத் தெளிவாக விளங்குகின்றது. ஒரு தேயத்தில் துன்பமுண்டாவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. அவற்றுள் மிக்க முக்கியமான காரணம் ஒற்றுமை யின்மையாம். இது காரணம் பற்றியன்றோ விமலனையாமொற்றுமையின் சிறப்பினை யறியும் வண்ணமவனாற் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தில் எப்பொருள்களிலும் வியக்கத் தக்க ஒற்றுமையாக வியாபித்திருக்கின்றனன்.

பகலவனுக்கும் மதிக்கு மொற்றுமையில்லாமலிருப்பின், காலையில் மதியுமிரவிற் பகலவனுமுதித்து மாந்தர்களுக்குப் பெருமின்னலை யுண்டாக்குமென்பது சொல்லாமலே விளங்கும். நெறி தவறாத நேயனொருவன் வறுமையால் வருந்தும்போது, ஒற்றுமை, நட்பு முதலியவை வாய்ந்த அவன் நண்பன் தன் நேயனனுபவிக்குந் துன்பத்தைத் தன்னுடையதாகப் பாவித்து, அவனுக்குப் பேருபகாரஞ் செய்வதுபோல், பூமியிருக்குஞ் சராசரங்களும் நீரின்மையால் பெருந்துன்பத்தையனுபவிப்பதைக் காணுமேகங்களும் அவற்றின் வருமையைத் தங்களுடையதாகக் கருதித் தாங்கள் பல மாதங்களாக மிகக் கஷ்டப்பட்டுச் சேகரித்த தண்ணீரை மாரியாகப்பொழிந்து அவற்றின் துன்பத்தை நீக்குதல் ஒற்றுமையதியல்பினாலன்றோ? நம்முடைய இடக்காம் வெட்டுண்டால் வலக்காம் துன்பமடைதல் வேற்றுமை யின்மையாலன்றோ? அதுகாரணம் பற்றியே கண்கள் நீர் சொரிதல் ஒற்றுமைக் குணமன்றோ? நம்முடைய உடம்பின் ஓரிடத்தில் புறப்படுங்கட்டியால் உடம்பு முழுமையும் நோவடைதலும் அந்நற்குணமன்றோ? ஒவ்

வொரு இரவாகப் பல இரவுகளிலும் தோன்றிப் பூமியின் மீது பாவியிருக்குங்கருமை நீக்குதல் சந்திரனுக்குப் பூமியிடத்துள்ள இலையினுலன்றே? உலகத்தைப் படைத்துக் காக்கும் விமலன், ஒற்றுமையின்மையாலுண்டாகும் விபத்தையாமறியும் வண்ணம் அமாவாசியிற் சந்திரனைத் தோன்றச் செய்யாமல், அதனால் இருள் எங்கும் நிறைந்திருப்பதைக் காணும் சில மனிதர்கள், "சந்திரனுக்கும் பூமிக்குமின்று ஏதோ மன வருத்தம்போலும். அது காரணம் பற்றியே சந்திரனுக்கும் பூமிக்குமிருந்த ஒற்றுமை சிதைந்தமையால் யாம் பெருந் துன்பத்திற்காளாயினும்? உலகத்தில் யாவரும் ஒத்துடன் வசிப்பதற்கேற்றமை இன்றியமையாததாயிருக்கின்றது. ஐயோ பாவம்! இந்த பரிதாப மாந்தர் ஒருவரை யொருவர் கோறச்செய்து வீணே பெருந் துன்பத்தை விளைவிக்கின்றனர்" எனவும் வகையை மாந்தர் அறியும்படி செய்கின்றனர். ஒற்றுமையைப் பற்றி இன்னும் அதிகம் கூறுவனேன்? ஒற்றுமையாலுண்டாகும் இத்தகைச் சிறப்பில்லை பரிதாபநிலை பிரான்ஸ் தேசத்து மாந்தர் பதின்மூன்றாவது நூற்றாண்டில்.

யாமெழுதத் துணிந்தது ஜோன் என்னும் நங்கையின் வீரச் செய்கையைப் பற்றியாகையால் அவள் காலத்தில் பிரான்ஸ் தேசமிருந்த நிலைமையைப் பற்றிச் சிறிதேனும் அறிதல் நலமெனக் கருதுகின்றனம். பிரான்ஸ் தேசத்தில் இரண்டு கட்சிகள் இருந்தன. அவற்றுள் ஒன்று பர்கண்டியை யாண்டுவந்த அரச குடியிற் பிறந்த ஒரு பிரபுவையும் மற்றொன்று அரசிளங் குமாரனாகிய சார்லெஸ் என்பவனையுஞ் சார்ந்தன. இதுவுமன்றிப் பர்கண்டியர்கள் தேச பக்தி யென்பது சிறிதுமின்றி அன்னியர்களாகிய ஆங்கிலேயர்களைத் தங்கள் நண்பர்களாக்கித் தங்கள் தேய வாணர்களாகிய மற்றப் பிரஞ்சுக்காரர்களுக்குச் சொல்[illegible] தீமை இயற்றினர். பின்னர் ஆ[illegible]களும் பர்கண்டியர்களும் ஒன்று கூடி[illegible]ன்க தேசத்து அரசிளங் குமாரனாகிய [illegible]லெஸ் என்பவனை அவன் தேசத்திலிருந்து துரத்தி யவன் நாட்டைத் தம் வயமாக்கக் கருதினர். இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வண்ணம் சார்லெஸ் அரசாட்சிசெய்து வந்த மத்திய பிரான்சுக்கும், தென் பிரான்சுக்கும் வாயில் போலிருக்கும் ஆர்லியன்ஸ் என்னும் நகரத்தை முற்றுகை செய்தனர். சார்லெஸ் என்னுமிளவரசன் ஓரரசனுக்கு இன்றியமையாததாயிருக்குஞ்சாமர்த்தியமில்லாதவன். தன் குடிகள் தன் பொருட்டு முற்றுகையாலுண்டாகும் பெருந் துன்பமனுபவிப்பதை முற்றுமறிந்திருந்தும், அவர்களுக்குதவி புரியச் சக்தியற்றிருந்தனன். ஆர்லியன்ஸ் சரணம் புகுவது திண்ணமென எல்லோரும் நன்குணர்ந்திருந்தனர்.

அதுபொழுது முற்றுகை செய்துவரும் ஆங்கிலேயர்கள் தாம் வெற்றி பெறுவதற்கு எள்ளளவேனுஞ் சந்தேகமில்லை யென்று அகக்களிப்பால் "ஜய ஜய" என்று பெருங் கோஷ்டஞ்செய்தனர். அப்பேராரவாரத்தைக்கேட்ட சார்லெஸ் என்னும் அரசிளங்குமாரனும் அவன் சேவகர்களும் தாம் தோல்வியடைவதற்குச் சிறிதுமையப்பாடில்லை யென்று துக்கமெய்தியிருக்குஞ் சமயத்தில், உலக சரித்திரத்தில் என்றும் நிகழாத மிக்க வியக்கத்தக்க சிறப்புற்ற ஒரு காட்சி தோன்றியது. அக்காட்சிக்கு முதற் காரணமாகிய ஜோன் என்னுமங்கையைப் பற்றித் தெளிவாகக் கூறுதல் செம்மையுடைத்து.

ஜோன் இன்று உலகத்திற் சிறப்புற்றிருக்கின்றனள். அவளைப் பற்றியின்றும் பலவித மான தர்க்கங்களிருக்கின்றன. அவளைச் சிலர்



குற்றமற்ற சாதுவென்றும்; சிலர் மதவைராக்கியம் வாய்ந்த ஒரு பெண்ணணங்கென்றும்; சிலர் மனோராஜ்யம் படைத்த அறிவற்றவளென்றும்; சிலர் கடவுளால் தன் தேசத்தை இரட்சிக்க அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியென்றுங் கருதுகின்றனர். ஆனால் நம்முடைய கடமை இது நன்று அது தீது என்பதன்று. அவளைப்பற்றிய உண்மையை வெளிப்படுத்தினதைக்கொண்டு அக்கன்னிகை எத்தகையவளென்று பலரும் அறிவாரென்பதற்குச் சற்றுமையப்பாடில்லை.

மியூஸ்நதிக்கரையின் மேல் டாம்ரெமி என்ற ஒரு கிராமமிருக்கின்றது. இவ்விடத்து ஜாகு டெல்டி ஆர்க் என்னும் செல்வம் வாய்ந்த ஒரு குடியானவன் இசபெல்லா என்னும் பெயர் வாய்ந்த குணக்குன்றாகிய ஒரு மங்கையை மணந்தனன். இவனிடத்துக் குதிரை, ஆடு, மாடு முதலியவை மிகுதியாக இருந்தன. இவனுடைய மனைவி இசபெல்லா சிறந்த குணங்கள் வாய்ந்தவள்; தெய்வ பக்தியுடையவள்; ஏழைகளுக்கு நன்மையே செய்யுஞ் செய்கையுடையவள்; அன்பாய் [illegible]டன் ஆசிப்பவள்; தன் குழந்தைகளும் தன்னைப் போலத் தெய்வ பக்தி நிறைந்திருக்கவேண்டுமென்ற இச்சையுடையவள். இத்தகைய பெண் மணிக்கு ஆயிரத்து நானூற்றுப் பத்தாவது வருஷத்துக்குமாயிரத்து நானூற்றுப் பன்னிரண்டாவது வருஷத்துக்குமிடையில் [illegible] ஒரு பெண் மகவு உதித்தது. அது மானொரு மேனியும் பொழிலோரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவமடைந்தது. உலகத்திற் சிறந்து விளங்குமிம் மங்கையர்க்கரசிக்கு அவள் தாய் தந்தையர் ஜோன் என்னும் நாமமளித்தனர்.

அவள் மங்கைப் பருவங் கடந்து மடந்தைப் பருவத்தில் பதினேழாவது வயது வரையில் தென்னூருயிரையை அன்னைக்கும் பிதாவுக்கும் அகத்தும் புறத்தும் அம்புற்றுத் தன்னூர் கூடியவரையில் உதவிபுரிந்து அவர்கள் மனத்துக்குப் பெருங்களிப்புண்டாக்கினள். இப்படி இவள் இருக்குங் காலத்தில், தன் சன்ம பூமியாகிய பிரான்ஸ் தேசத்தில் யுத்தத்தாலுண்டாகும் பெருங் விபத்துக்களையும்; தன் தேசம் ஆறுவது தொன்றிக்குப் பிரதிநிதியாகிய பெட்போர்ட் பிரபு பிரான்ஸ் தேசத்தின் வட பாகத்தை யாண்டு வருதலையும்; அரசிளங்குமாரனாகிய சார்லெஸ் உதவியற்றுப் பரிதபிக்கத் தக்க நிலைமையிலிருத்தலையும்; பர்கண்டியின் பிரபு ஆங்கிலேய நாட்டிற்கும் மற்றப் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை மூட்டி வேடிக்கைப் பார்க்கும் வஞ்சகத்தையும்; பாமரஜனங்கள் அனுபவிக்கும் கடுந் துன்பத்தையும்; ஆங்கில படை வகுப்புக்களும், பர்கண்டியின் படை வகுப்புக்களும் ஒன்று கூடிப் பிரான்ஸ் தேசத்தைக் கொள்ளையடித்தலையும்; இன்பஞ் சற்றுமின்றித் துன்பமடைகிற தலையும் கண்ணுற்றுத் துக்கமெய்தினள். ஜோன் என்னும் மாதர் குலமணி, ஆயினும், தன் வயதொத்த தன் வயதுள்ள பிள்ளைகளுடன் விளையாடுவதிலும், தாய் செய்யவேண்டிய தொழில்களைச் செய்வதிலுஞ் செலுத்தியபடியால், தன் தேசமனுபவிக்கும் பெருந் துன்பத்தை யதிகம் கவனித்தாளில்லை. இதுவுமன்றி, இவளது கிராமத்திலொரு வருவாயிக் காடிருந்தது. இக்காட்டிலோ யக்ஷர்களும் மோகினிகளுமதிகமாக இருந்தனவாம். அம் மோகினிகளை உச்சாடனம் பண்ணும் பொருட்டு சில [illegible] வந்தனர் குருக்கள். இவ்விடத்து ஒரு குடிலிருந்தது. இவ்வூருக்குப் பிணிபாளர் பலர் வந்தனர். அங்கு அக்கிராமத்திலுள்ள பிள்ளைகள் வந்து நடனஞ் செய்வதும் விளையாடுவதும் வழக்கம். இவ்வாறு காலத்தைப் போக்கும் பிள்ளைகளில் ஜோன் ஒருத்தியாம்.

(தொடரும்)

# இந்துமதியின் சுயம்வரம்.

(ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள்)

தீபத்தினின்றும் ஒளி எவ்வண்ணம் அதைவிட்டு வேறுபடாதிருக்குமோ, அவ்வண்ணமே ரகு மகாராஜனுடைய குமாரனான அஜனும் ஒவ்வொன்றிலும் தந்தையையொத்துச்சோபித்தான். பிதாவினுடைய உயர்ந்த கம்பீரத்தோற்றம், பராக்கிரமம் இவை யாவும் புத்திரனிடமும் குடிகொண்டு விளங்கின. கிரமப்படி கல்வியபின்று அஜன் யௌவன பருவத்தையடைந்ததும், இயற்கையான அவன் சௌந்தரியம் முன்னிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கலாயிற்று. இச்சமயத்தில் விதர்ப தேசத்தரசனான போஜன் தன் சகோதரி இந்துமதியின் விவாகநிமித்தம் சுயம்வரமொன்று ஏற்படுத்தி சகல தேசத்தரசர்களுக்கும் தூதுவிடுக்க, அஜனின் மணம் புரிய யுக்தமான வயதையெண்ணி அயோத்தி மன்னனும் தகுந்த சைன்யத்துடன் அவனை அத்தேசம் அனுப்பிவைத்தான். குறித்த நேரத்திற்குச் சரியாய் அங்குசென்ற அஜன், போஜராஜனால் மரியாதையுடன் வரவேற்கப்பட்டு சுயம்வர மண்டபத்திற்குள் பிரவேசித்ததுடன், விமானத்திலேறிச் சஞ்சரிக்கும் தேவர்களுக்கொப்பாய் அழகிய ஆடையாபரணங்களணிந்து தங்களுக்குரித்தான உயர்ந்த ஆசனங்களிலமர்ந்திருக்கும் அரசர் கூட்டத்தைக் கண்ணுற்றான். ஆனால் அவர்களுக்கோ, ரதியின் பிரலாபத்தைக்கண்டு மனமிரங்கிய ஜகதீசனால் மீண்டும் உருவளிக்கப்பெற்ற மன்மதன்போன்று விளங்கும் அஜனை நோக்கியதும், இந்துமதியை யடைவோம் என்ற நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போய்விட்டது. போஜனால் காண்பிக்கப்பட்ட சிம்மாசனத்தில் அவனேறி உட்காரும்பொழுது, உன்னதமான மலைச்சிகரத்தின்மீது இளஞ்சிங்கமும் இவ்வண்ணம்தான் ஏறிச்செல்லுமல்லவா வென்று யாவரும் எண்ணும்படியாய் விளங்க, அஜன் ஆசனத்திலமர்ந்ததும், அம்முடிசூர்ந்த மன்னர்கள் மத்தியிலும் கற்பக விருட்சங்களின் நடுவிற்றோன்றும் இளம்பாரிஜாத மரம்போல் தென்படலானான். மதநீரைப் பெருகவிட்டுக் கொண்டிருக்கும் காட்டு யானை மீது வந்துபாயும் வண்டுகளென எல்லாருடைய கண்களும் அங்கு வீற்றிருக்கும் வேந்தர்களனைவரையும்விட்டு அவன் மீதே சென்றன.

இச்சமயத்தில் சூரிய சந்திர வம்சத்தில் தோன்றிய அரசர்களை வந்திகள் ஸ்துதிசெய்ய, ஊதுவர்த்தி முதலிய வாசனைத் திரவியங்களின் நறுமணம் எங்கும் வீசத்தொடங்கிற்று. உத்தியானத்தில் உலாவும் மயில்கள் மேகத்தொனியோ வென்று மயங்கித் தோகை விரித்தாடும் வண்ணம் மங்களகாலத்திற் கடையாளமான பேரிகைகளும், சங்க வாத்தியமும் முழங்க, விவாக சமயத்திற்குரிய ஆடையாபரணங்கள் அணிந்து ராஜகுமரியான இந்துமதி பல்லக்கினின்று மிறங்கி சுயம்வர மண்டபத்திற்குள் பிரவேசித்தாள். பிரும்மாவினுடைய சிருஷ்டியில் முதன்மையானவளென்று கூறும்படி எழில் பொருந்திய அவளைப் பார்க்கும் ஆவலில், அங்கு கூடியிருந்த அரசர்கள் யாவரும் மெய் மறந்தனர் அவர்களுடைய தேகங்கள் மட்டும் ஆசனங்களில் தங்கியிருந்தனவேயன்றி, அவர்கள் அந்தக்கரணம் முழுவதும் இந்துமதியின்பால் சென்றிருந்தனவென்று கூறும்படியாயிருந்தது. விருட்சங்களில் புதிதாயுண்டாகும் இளம் தளிர்கள் போல் அவ்விந்துமதியின் மேற் கொண்டிருக்கும் ஆசையை வெளியிடுவதான சிருங்கார சேஷ்டைகளும் பலவிதமாய் அவர்களிடம் அப்பொழுது தோன்றலாயின.



ஒரு அரசன் இதழ்கள் சுழல்வதனால் அடிக்கப்பட்டு வண்டுகள் ஓடிப்போகும் வண்ணம் தாமரை மலரை வேடிக்கையாய்க் கையில் வைத்துச் சுழற்றிக்கொண்டிருந்தான். மற்றொருவன் தன் அழகிய முகத்தை ஒரு பக்கமாய் வளைத்து, தோளில் அணிந்திருக்கும் ரத்தினாபரணத்தின்மீது நழுவி விழுந்த மாலையையெடுத்து சாவதானமாய் மீளவும் தன் கழுத்தில் சரியாய் அணிந்துகொண்டிருந்தான். பின்னுமொருவன் கீழே சாய்ந்த பார்வையுடன் காலின் கீழிருக்கும் தங்க பீடத்தை முன் விரலினால் மெதுவாய்க் கீறிக்கொண்டிருக்க, ஒரு அரசன் இடது கையை ஆசனத்தில் ஊன்றியதால், ஒரு பக்கம் தோள் உயர்ந்து விளங்க, அதனால் கழுத்திலணிந்திருந்த ஹாரம் பின்னமாகவும் தன் நண்பனுடன் வார்த்தையாடுவதில் ஊக்கமாயிருந்தான். ஒரு யுவகன் விலாஸினிகள் காதில் உல்லாசமாய் அணிவதான தாழை மடலை நகத்தினால் கிழித்துக்கொண்டிருக்க, மற்றொருவன் விரல்களிலணிந்திருக்கும் ரத்தின மோதிரங்களுடைய காந்தியினால் பிரகாசமாய் விளங்கிய பாசிகைக் காய்களைத் தாமரை மலர்போல் சிவந்து ராஜ லக்ஷணம் பொருந்திய உள்ளங்கைகளில் வைத்து விநோதமாய் உருட்டிக்கொண்டிருந்தான். ஒரு மன்னனுடைய காமானது தலையில் கிரீடம் நேரே யணியப்பட்டிருந்தும் கூட, இடம்விட்டுப் பெயர்ந்த பாவனையாக அக்கிரீடத்தின் மீதே காரியமாய்க் காணப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் புருஷனைப்போல் ஆற்றலுள்ளவளும், ஒவ்வொரு அரசனுடைய வம்சாவளியையும் அறிந்தவளுமான சுநந்தையென்னும் தோழியானவள் ராஜகுமாரியை முதன் முதல் மகதராஜனின் சமீபம் அழைத்துச்சென்று பின் வருமாறு சொல்லலுற்றாள்: "மகத தேசத்து மன்னனான இவர் தன்னைச் சரணமென்றடைந்தவர்களை விடாது காத்து ரக்ஷிப்பவர்; ஆழ்ந்த பராக்கிரமமுள்ளவர், பரந்தபன் (சத்துருக்களை தகிக்கச் செய்பவன்) என்னும் பெயர் இவருக்கு உண்மையாக அமைந்திருக்கிறதென்றே கூறவேண்டும். இன்னும், தன் பிரஜைகளைத் திருப்தி செய்வதிலேயே மிகுந்த புகழைப் பெற்றுள்ளார். உலகில் பல்லாயிரம் வேந்தர்களிருந்தபோதிலும் பூமிக்கு அரசனென்று இவரைத்தான் கூறலாகும், ஏனெனில், கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் இலங்குகின்றனவெனினும் சந்திரன் ஒருவனல்லவா இரவு நிலவேற்படுகின்றது? யாகாதிக்கிரியைகளை அனவரதம் நடத்தி இவ்வேந்தன் தேவேந்திரனை எப்பொழுதும், அவைகளின் பொருட்டு வரவழைத்துவிடுவதால், வெளுத்து வாடிய கன்னங்களில் மலரணியாத கூந்தல் அவிழ்ந்து தொங்க, இந்திராணியும் கணவரின் பிரிவாற்றாமையை அனுபவிக்க வேண்டியதாய்விட்டது! ராஜகுமாரி! இம்மன்னர் சிரேஷ்டனை நீ வரித்து மாலையிட்டு இவருடைய தலைநகரான புஷ்பபுரியைப் பிரவேசிக்கும்பொழுது அப்பட்டணத்து ஸ்திரீகளனைவரும் உன்னைப் பார்க்க ஜன்னலண்டை ஆவலாய் நின்றுகொண்டிருப்பார்கள். அப்படி நிற்கும் அவர்களுக்கு நேத்திரோத்சவத்தையளிக்க உனக்கு விருப்பந்தானோ?" என்று இவ்வண்ணம் சுநந்தை வினவியதும் இந்துமதியானவள் ஒன்றும் பேசாமல் மௌனமாய் அவ்வரசனைச் சற்று நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பிறகு கையிலிருந்த மதூக மாலை சிறிது நழுவ, அவனுக்கு ருஜுவான வந்தனம் புரிந்தாள். அக்குறிப்பை யறிந்து, ராஜ ஹம்சத்தைச் சிறு அலைகள் ஒரு தாமரையைவிட்டு மற்றொரு தாமரையிடம் தள்ளுவதுபோல் சுநந்தையானவள் அவளை மற்றொரு மன்னனிடம் அழைத்துச்சென்று, "ராஜகுமாரி! அங்க தேசத்திற்கெல்லாம் அதிபதி

மான இவருடைய யௌவனத்தின் சௌந்தரியச் சிறப்பைக் கண்டு தேவ கன்னிகைகளும் மயங்கி வேண்டுகின்றனர். மேலும், பூலோகத்திலிருந்துகொண்டே இவர் இந்திர பதவியை யனுபவிக்கின்றாரென்றும் கூறவேண்டும். இவருடையப் பராக்கிரமத்திற்கு முன் நிற்க வலியற்றுச் சத்துருக்கள் மடிய, அவர்களுடைய அழகிய மனைவியர் கண்களினின்றும் முத்துக்கள் போன்று கண்ணீர் தோன்றி மார்பின் மீது விழுவதை நோக்கின், நூலில் கோர்க்கப் படாத முத்தாஹாரங்களை இவரால் அளிக்கப்பட்டு அவர்கள் மீளவும் அணிந்திருப்பது போலவே தோற்றும். லக்ஷ்மியும் சரஸ்வதியும் ஓரிடத்தில் சேர்ந்து தங்கமாட்டார்களென நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆயினும் அதற்கு விரோதமாய் அவ்விருவரும் இவரிடம் சேர்ந்தே வாசம் செய்கின்றனர். அவர்களுடன் மூன்றாவதாகச் சேர்ந்திருக்க ஹே! கல்யாணி! அழகிலும், கல்வியிலும் உன்னைவிட மற்றவர்கள் இவ்வுலகில் வேறு யாரிருக்கின்றார்கள்?" என, அவ்வங்க ராஜனை விட்டுத் திரும்பி அரசகுமாரியானவள் சுநந்தையைப் போகும்படி உத்திரவளித்தாள். அம்மன்னனை அவள் வரிக்காததின் காரணம், அவன் அதற்குத் தகுந்த ரூபகுணங்களையுடையவனாயில்லையோவெனின், அப்படியல்ல. அவளும் பார்த்தவுடன் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவள் என்பதுமல்ல. ஒவ்வொருவருடைய அபிருசியும் இவ்வுலகில் வெவ்வேறு பட்டதன்றோ!

பிறகு வாசற்காப்பாளான சுநந்தை அப்பொழுதுதான் உதித்த சந்திரனை நிகர்த்த முகவசீகரத்தையுடையவனும், சத்துருக்கள் கண்டு அஞ்சியோடக் கூடிய வீர்யமுள்ளவனுமான மற்றொருவனை இந்துமதிக்குக் காட்டி "அகன்ற மார்பும், நீண்ட புஜங்களும், சிறந்த இடையுமுடைய இவ்வவந்தி நாதனைப் பார். விசுவகர்மாவினால் சாணையிலேற்றித் தீட்டப்பட்ட சூரியன்போல் இவருடைய தேஜஸ் ஜ்வலிக்கின்றது. சார்வபௌமனான இப்பூபதி நகரைவிட்டுக் கிளம்பும்பொழுது, முன் செல்லும் குதிரைகளின் குளம்புகளினால் கிளம்பும் தூசியானது மற்ற சிற்றரசர்கள் தலையிலணிந்திருக்கும் வைரமணிகளின் மீது படிந்து அவைகளின் ஒளியை மழுங்கச்செய்து விடுகின்றது. மகாகால நிகேதனரான சந்திரமௌளீச்வரர் உறைவிடத்திற்குச் சமீபமாக இம்மன்னனும் வசிப்பதால், அப்பட்டணத்தில் கிருஷ்ண பக்ஷத்துப் பிரதோஷங்களிலும் சந்திரிகை ஒளி வீசா நிற்கின்றது. சிப்ராநதியின் அலைகள் மீதுபட்டுத் தென்றலானது குளிர்ந்து வீச, சுற்றிலுமுள்ள நந்தவனங்களில் இவ்விளம் வேந்தருடன் ரமிக்க உனக்குச் சம்மதமில்லையோ?" என்று சுநந்தை கேட்க, தாமரையை விகசிக்கச் செய்கின்ற சூரியனைக் கண்டும் எவ்வண்ணம் குமுதமானது களித்து மலராதோ, அவ்வண்ணமே அவ்வரசன் மீது சர்வாங்க சுந்தரியான ராஜகுமாரியும் நாட்டம் கொள்ளாதவளாய் அவ்விடம் விட்டு நகர, சுநந்தை மற்றொரு அரசனைக் காட்டிக் கூறலுற்றாள்: "யுத்தரங்கத்தில் தனது ஆயிரம் கைகளுடனும் போர்புரிந்து, பதினெட்டு த்வீபங்களிலும் ஜயஸ்தம்பத்தை நாட்டியவரான கார்த்த வீரியனென்னும் ஒரு பெரிய ராஜ ரிஷி இருந்தாரல்லவா? துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலரான அவர், பிரஜைகளுடைய மனதில் கெடுதலான ஓரெண்ணம் உதிக்கு முன்னமே வில்லாளியாய் எதிரில் தோன்றி அவர்கள் அந்தக்கரணத்தினின்றும் அத்தகாத நினைவை அறவே யொழிக்க முயலுவார். தேவேந்திரனை ஜயித்த லங்கை வேந்தன் கூட ஒரு சமயம் வில்லினுடைய நாணினால் பிணிக்கப்பட்டு காராக்கிருஹத்தில் வசித்ததாகச் சொலவதுண்டு. பிரதீபனென்னும் பெயர் கொண்ட இப்பூபதியானவர் அக்கார்த்த வீரியருடைய வம்சத்திற் பிறந்தவர். பெரியோர்களிடத்தில் பக்தி மிகுந்தவர். இவரை யடைந்த பிறகு ஸ்ரீதேவிக்குச் சஞ்சலை யென்னும் வசையானது நீங்கி விட்டதென்று கூறவேண்டும். போரில் அக்கினி பகவானுடைய சகாயத்தைப் பெற்ற இம்மன்னன் க்ஷத்திரிய குலத்திற்குக் காளராத்திரி போன்ற பரசுராமருடைய அதி கூர்மையான வாளையும் நீலோத்பல மலரின் இதழுக்குமேல் அதிகமாய் மதிப்பதில்லை. ராஜகுமாரி! மாஹிஷ்மதி நகரைச் சுற்றிலும் வளைந்தோடும் அழகிய ரேவாநதியைப் பலகணியண்டை நின்று எப்பொழுதும் பார்க்க உனக்கு விருப்பமிருந்தால், இவ்வரசனை வரித்து மாலையிடுவாயாக!" என்றாள். களங்க மற்ற ஆகாயத்தில் தன பதினாறு கலைகளுடனும் பிரகாசிக்கும் பூர்ண சந்திரனும் எவ்வாறு தாமரை மலருக்குக் களிப்பையளிப்பது அசாத்தியமோ அவ்வாறே பார்க்கப் பார்க்க ரூபவானாயிருந்தும் அம்மன்னன் இந்துமதியின் ஹிருதயத்தை வசிப்படுத்தக் கூடியவனாயில்லை.



பிறகு சுநந்தை, தாய் தந்தை இருவருடைய குலத்திற்கும் மணி விளக்குப் போன்றவனும், சூரசேனாதிபதியுமான சுஷேணனென்னும் அரசனைக் காட்டி "இவ்வேந்தன் நீப வம்சத்திற்றோன்றியவர். சித்தர்களுடைய ஆசிரமத்தில் மிருகங்கள் தங்கள் சுபாவப் பகைமையொழிந்து ஒன்றோடொன்று கூடிப் பாராட்டுவது போல், குணங்களும் இவரை யடைந்து இயற்கையாயுள்ள விரோதம் நீங்கப்பெற்று அழகாய் ஒன்று சேர்ந்திருக்கின்றன. தன் நகரில் மிகவும் சாந்தமாய்ச் சந்திரனைப்போல் இனிமையான காந்தியையுடையவராய்க் காணப்பட்டாலும், சத்துருக்களுடைய மாளிகைகளைப் புற்பூண்டுகள் முளைத்தும், இடிந்தும் பாழடையச் செய்வதில் இரக்க மற்றதாய் இவருடைய தேஜஸ் ஜ்வலிக்கின்றது. ஜலக்கிரீடை செய்யும் காலத்தில் இவருடைய அந்தப்புரத்து ஸ்திரீகள் மார்பிலணியும் சந்தனமானது கரைந்து ஜலத்தோடு கலப்பதை நோக்கும் பொழுது, யமுனாநதியானது மதுரையிலேயே கங்கையுடன் சேர்ந்து விட்டதோவென ஐயமுண்டாகும். அது மட்டுமல்ல. கருடனிடமிருந்து தன்னை ரக்ஷிக்கும்படி காளியனென்னும் நாகத்தால் வேண்டியளிக்கப்பட்ட ரத்தினமணியை மார்பிலணிந்து இச்சுஷேணர் கௌஸ்துபத்தைத் தரித்த கிருஷ்ணன்கூட கண்டு வெட்குமாறு பிரகாசிக்கின்றார். ஹே சுந்தரி! ஏன்? இவரைப் பர்த்தாவாக அடைந்து சைத்திரரதத்திற்குச் சமானமான பிருந்தாவனத்தில் ஆனந்தமாய் நாட்களைக் கழிப்பதற்கு என்ன தடையிருக்கின்றது? ரமணீயமான கோவர்த்தன மலைக் குகைகளில் ஜலத்துளிகளால் நனைந்த சிலாதலத்தின் மீதுட்கார்ந்து, வர்ஷாகாலத்தில் மயில்கள் மனோகரமாய்த் தோகை விரித்தாடுவதை நீ பார்க்க விரும்பவில்லையா?" என்றாள். சாகரத்தை நாடிச்செல்லும் நதியானது வழியிற்குறுக்கிடும் மலையையும் எவ்வண்ணம் மீறிச்செல்லுமோ, அவ்வண்ணமே மற்றொருவனுக்கு மனைவியாக விதிக்கப்பட்ட இந்துமதியும் அவ்வரசனைத் தாண்டிச்செல்ல, பின்னும் தளராமல் சுநந்தையானவள் தோள் வளை யணிந்து விளங்கிய கலிங்க தேசத்தரசன் ஹேமாங்கதனென்பவனை யணுகி, பூர்ண சந்திரனை நிகர்த்த முகத்தையுடைய இந்துமதியை நோக்கிக் கூறலுற்றாள்:

"மகேந்திர பர்வதற்குச் சமமான பலத்தையுடைய இவர் சமுத்திரத்திற்கும் மலைகளுக்கும் அதிபதியாவார். இவர் நகரைவிட்டுக் கிளம்பும்பொழுது, மதநீரைப் பெருகவிட்டுக் கொண்டிருக்கும் யானைகள் முன் சென்று

மகேந்திரகிரியே செல்லுகின்றதோ வென்று யாவருக்கும் ஐயமுண்டாகச் செய்யும். வில்லாளிகளுள் முதன்மையான இவ்வேந்தருடைய தோட்களில் நாண் உராய்வதனால் ஏற்பட்ட இருவடுக்கள் தெரிகின்றனவல்லவா? அவைகளை நோக்கும்பொழுது இவரால் சிறைபிடிக்கப்பட்ட சத்துரு அரசர்களுடைய பாக்கிய தேவதையானவள் விழி நீர் பெருக இவ்வழிதான் சென்றனளோ வென்றும் தோன்றுகின்றது. ஜன்னலருகில் நின்று பார்க்கும்படி அவ்வளவு சமீபமாக சமுத்திரம் காணப்படுவதால் தூர்ய வாத்தியத்திற்குப் பதிலாக அலைகளுடைய கம்பீரமான கோஷமே தூங்கிக் கொண்டிருக்கும் இம்மன்னனை எழுப்பி விடுகின்றது. தீபாந்தரங்களினின்றும் வரும் லவங்கப் புஷ்பங்களுடைய நறுமணத்துடன் கூடிய காற்றானது குளிர்ந்து வீசி வியர்வையைப் போக்கடிக்க, கடற்கரையிலுள்ள சோலைகளில் இவருடன் உல்லாஸமாயிருக்க ஏன் யோசனை செய்யவேண்டும்?"

இவ்வாறு சுநந்தையால் வெருவாய்த் தூண்டப்பட்டும், தெய்வம் பிரதிகூலமாயிருக்கும் பொழுது வெகு சிரமப்பட்டு நெருங்கிய ஸ்ரீதேவியும் எவ்வண்ணம் விலகி விடுவாளோ, அதுபோல் இந்துமதியும் அவ்வரசனை அணுகாமலே விரைந்து செல்ல, திவ்விய ரூபம் பெற்று விளங்கும் உரக பட்டணத்து மன்னனை [illegible]க்கிட்டி, "ராஜகுமாரி! இதோ இங்குபார்," என்று சுநந்தை இந்துமதியை யழைத்தாள். "தோள்களில் அழகிய மாலைகள் ஊசலாட, மேனி முழுவதும் [illegible] மணிந்திருக்கும் இப்பாண்டிய மன்னன் [illegible] அருவிகளும், இளம் வயல் படிந்த தாழ்வரையுமுடைய கிரிராஜனைப்போல் [illegible]கின்றார். உன்னதமான விந்திய பர்[illegible] அடக்கியவரும், கடலை ஒரு துளியளவுமற் பானஞ்செய்து பின்னர் பெருகவிட்டவருமான அகஸ்திய மகரிஷியே இவ்வரசர் அசுவமேத யாகத்தைச் செய்து முடித்த பொழுதிருந்த விசுவாசத்துடன் வந்து விசாரித்ததாகச் சொல்லுகிறார்கள். மிக்க இறுமாப்புப் படைத்த லங்கை வேந்தனும் ஒரு சமயம் ஜனஸ்தானம் எங்கு அழிந்து போய் விடுமோவென்று அஞ்சியவனாய், பரமசிவனிடமிருந்து ஒருவராலும் வெல்ல முடியாத பெரிய அஸ்திர மொன்றைப் பெற்றுள்ள இம்மன்னருடன் சமாதானம் புரிந்து கொண்ட பின்னரே இந்திரலோகத்தை ஜயிப்பதன் பொருட்டுக் கிளம்பியதாகக் கேள்வி. உயர்ந்த குலத்திற்றோன்றிய இவ்வேந்தரை நீ மணம் புரிந்து கொண்டால், ரத்தினங்களுக்கு இருப்பிடமான கடலை மேகலையாகப் பெற்ற தக்ஷிண தேசத்திற்குப் பத்தினியாய், வெற்றிலைக்கொடிகளேறிப் படர்ந்த பூக மரங்களும், ஏலாலதைகளினால் தழுவப்பட்ட சந்தன மரங்களுமடர்ந்த மலைய மலைப் பிரதேசங்களில் அடிக்கடி ரமிக்க மனம் கொள்ளுவாய். இவ்வரசர் நீலோத்பல மலர்போன்ற கறுத்த மேனியுள்ளவர். நீயோ புசும்பொன்போன்ற தேக காந்தியைப் பெற்றவள். நீங்களிருவரும் சேர்ந்திருப்பதானது கார்முகிலும், மின்னற் கொடியும் ஒன்று சேர்ந்ததுபோல் பரம்பரம் சோபையையளிப்பதாகட்டும்." இவ்வாறு சுநந்தை கூறி முடிக்கச் சூரியனை எதிர் பார்த்து வாட்டம் கொண்டிருக்கும் பத்மமுகுளத்தைச் சந்திரன் தன் கிரண ஸ்பரிசத்தினால் விகசிக்கச் செய்வது எங்ஙனம் சாத்தியமற்றதோ அதுபோல் சுநந்தையின் மொழிகளும் ஒன்றும் ஹிருதயத்திற் புகாதவளாய் அரசகுமாரி அவ்விடம் விட்டு நகரலானாள். தீபத்தை எடுத்துச் செல்லும் பொழுது முன்னாலெல்லாம் பிரகாசமாக, பின்னால் இருளடைந்திருப்பதுபோல் அவள் வரிக்காது விட்டுச் சென்ற அரசர்களும் முகம் வேறுபட்டுக் குன்றிய மனத்தினரானார்கள்.



அஜனின் சமீபம் இந்துமதி நெருங்கிய பொழுது தன்னை அவள் வரிப்பாளோ வென்று அவனுக்குக் கவலைமேலிட்டது. ஆனால் வலது கரமானது இடைவிடாது துடித்து அவன் சம்சயத்தை அறவே யொழிக்க, ராஜகுமாரியும் அக்குற்றங்கூற முடியாத சௌந்தரியாகிருதியை யணுகியதும் அவ்விடத்தை விட்டு அப்புறம் செல்லும் எண்ணமற்றவளாய் நின்று விட்டாள். ஆஹா! நன்றாய்ப் புஷ்பித்திருக்கும் மாமரத்தை யடைந்த பிறகு வண்டினங்களும் இவ்வண்ணந் தானே மற்றோர் விருட்சத்தை நாடிச் செல்ல மனமில்லாமலிருக்கும். அது ஓர் அதிசயமல்லவன்றோ! அஜனிடம் அவள் நாட்டம் கொண்டதைக் குறிப்பாலுணர்ந்துசாதுர்யமுள்ள சுநந்தையும் அதற்குத் தக்கவாறு தொடங்கினாள். "இக்ஷ்வாகு வம்சத்திற்றோன்றியவரும் யாவரினும் விசேஷமான நற்குணங்களமையப்பெற்றவருமான ககுத்ஸனென்னும் வேந்தர் திலகரொருவர் இருந்தார். அவருக்குப் பிறகே உயர்ந்த நோக்கங்களுடைய உத்திர கோசல தேசத்தரசர் ஒவ்வொருவரும் காகுத்ஸனென்னும் சிறந்த பெயர் பெற்றவர்களானார்கள். அம்மன்னர் பரமசிவனைப்போல் காளையினுருவம் கொண்ட இந்திரன் மேலுட்கார்ந்து புரிந்த யுத்த வல்லமையால் அசுர ஸ்திரீகள் அனைவரும் நாதர்களையிழந்து தங்கள் கபோலங்களில் பத்திரலேகை யற்றவர்களாகும்படி நேர்ந்தது. அதுமட்டுமல்ல; இந்திரன் தன் ஸ்வய ரூபத்துடன் ஆசனத்திலமர்ந்திருக்கும் பொழுதும் அக்ககுத்ஸர் தோள் வளையுடன் தோள்வளையுராயுமாறு அவ்வொரே ஆசனத்திற் சேர்ந்து வீற்றிருக்கும் பெருமையைப் பெற்றார். இந்திரனுடைய பொறாமைக் கஞ்சி ஒன்று குறைய நூறுயாகங்களைச் செய்து முடித்தவரும் அழியாப் புகழ் பெற்றவருமான திலீபனென்னும் அரசர்—குலத்திற்குத் தீபவொளிபோன்றவர்—அவ்வம்சத்திற் பிறந்தவரேயாவார். அத்திலீபமன்னர் ராஜ்ய பரிபாலனம் செய்யுங்கால் விஹாரப் பிரதேசத்திற்குச் செல்லும் வழியில் மதுபான மயக்கத்தினால் நித்திராதேவிக்குவசமான ஸ்திரீகளுடைய வஸ்திரங்களைக் காற்றும் ஸ்பரிசிக்க அஞ்சிற்றெனின் கையை நீட்டித் தொடத் துணிவாருமுளரோ? அவருடைய குமாரர் ரகுவென்பவர் இப்பொழுது ராஜ்யத்தை யாள்கின்றார். விச்வஜித் என்னும் மகா யாகத்தின் பொருட்டு திக்விஜயம் செய்து கொண்டு வந்து பொருள் முழுமையும் மட்பாத்திரங்களே மிகுதியாக நிற்கும் வண்ணம் செலவழித்த உத்தம சீலர். அவர் புகழ் வியாபிக்காத விடமில்லை. மலைகளெல்லாம் கடந்து கடலினூட் சென்றும் பாதாளத்திலும் சுவர்க்கத்திலும் புகுந்தும், பின்னும் அகன்றதாய் அக்கீர்த்தி அளவுக்குட்படாமலிருக்கின்றது. அப்புகழ் பெற்ற ரகுமகாராஜனுக்கு, தேவேந்திரனுக்கு ஜயந்தன் போல், குமாரனாக அவதரித்த இவ்வஜனென்பவர் ராஜ்ய பாரத்தைத் தந்தையுடன் சரியாய்ப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். மேன்மேலும் கூறுவானேன், ராஜகுமாரி! குலத்திலும், அழகிலும், இளம் வயதிலும் வினயத்தை மேற்கொண்ட அந்தந்த நற்குணங்கள் ஒவ்வொன்றிலும் உனக்கு முற்றிலும் ஏற்றவரான இவரை நீ வரித்து மாலையிட்டுவிடு. ரத்தினமானது சுவர்ணத்தை யடைந்ததாகட்டும்." இவ்வாறு சுநந்தைகூறி முடித்தவுடன் லஜ்ஜையை யொதுக்கி இந்துமதியானவள் சுயம்வர மாலைக்குப் பதிலாகத் தன் மலர்ந்த விழிகளினால் நிமிர்ந்துநோக்கி அஜனை வரித்து நின்றாள். நாணத்தினால் தன் உட்கருத்தை அவள் வெளியிட்டுக் கூறவில்லையாயினும் மயிர் சிலிர்த்த அவளது ஒவ்வொரு அங்கமும் அதை நன்றாயெடுத்துக் காட்டியது. அவ்வாறு நிற்கும் அவளை "ஏன்? செல்வோமா" என்று சுநந்தை பரிகாசமாய் வேண்டுமென்றே கேட்க, சிறிது

கோபமாய் இந்துமதி அவனை நோக்கினாள். பிறகு மங்களமாகக் குங்குமம் தடவப்பெற்று தன்னுடைய அனுராகமே வடிவுகொண்டது போன்ற மாலையைத் தோழியின் மூலமாய் அஜனின் கழுத்திலிட அவனும் மார்பில் ஊசலாடும் அப்புஷ்ப மாலையை இந்துமதியின் தழுவிய கரங்களாகவே எண்ணலானான். அச்சமயம், மேகத்தினின்றும் விடுபட்ட சந்திரனுடன் நிலவு ஒன்று சேர்ந்து விட்டதென்றும் தனக்கு அனுரூபமான மகா சமுத்திரத்தை கங்கை யடைந்து விட்டாளென்றும் இவ்வண்ணம் ஒருவருக்கொருவர் முற்றிலும் இசைந்து தோன்றிய அவ்விருகாதலர்களையும் கண்டு ஆனந்தமுற்றவர்களாய் யாவரும் ஒன்றுப் புகழ்ந்துகூற அவ்வார்த்தை மற்றஅரசர்களின் காதுகளில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அப்பொழுதிருந்த அவ்விராஜ சபையின் மனநிலைமையை எதற்கு ஒப்பிடக் கூறலாம். சூரியோதயத்தில் நன்றாய் மலர்ந்த தாமரைகளும் இதழ்கள் குவிந்து வாடிய குமுதங்களுடைய ஒரு தாமரைக் குளம் போல் விளங்கிற்றென்றால் அதில் வியப்பேதேனுமுண்டோ?

# பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(545-வது பக்கத் தொடர்ச்சி)

## பதினைந்தாம் அத்தியாயம்.

## விடைகோள்.

மாதர்கள் வதூவரர்களை ஒன்றுய் உட்கார வைத்து, அவர்களின் முன்னே விதம் விதமான பழங்களையும் பணியாரங்களையும் கொண்டுவந்து வைத்து, இருவரையும் அவற்றை உண்ணும்படி வற்புறுத்தினார்கள். எல்லோரும் சேர்ந்து நிர்ப்பந்தப்படுத்தினபடியால், அவ்விருவரும் ஏதோ கொஞ்சம் உண்ணவேண்டியதாயிற்று. பிற்பாடு மாதர்கள் வதூவரர்களோடு பலவிதமான பரிஹாஸம் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் அப்பரிஹாஸங்கள் நிர்த்தோஷமாயும் நாகரிகமாகவுமே இருந்தன. சற்று நேரம் கழித்து பூபேந்திரநாதன் அங்கிருந்து எழுந்து வந்து விருந்தினர் மத்தியில் உட்கார்ந்தான். அப்பொழுது எல்லோரும் போஜனம் செய்து கொண்டிருந்தார்கள். போஜனம் முடிந்தவுடனே, புருஷர்களில் பெரும்பாலோர் விடைபெற்றுக்கொண்டுத் தம் இருப்பிடம் சென்றார்கள். விருந்துக்கு வந்திருந்த மாதர்களும் விருந்துண்டபின் ஒவ்வொருவராய்ப் புறப்பட்டுப் போனார்கள்.

கல்யாணக் கூடத்தில் சங்கீதக் கச்சேரி, ஹாஸ்யவிநோதம் எல்லாம் ஒரு குறைவுமின்றி நடந்தன. பூபேந்திரனும் நரேச சந்திரனும் எல்லோருடனும் கலந்து ஆனந்தமாய்க் காலங் கழித்தார்கள். சுசீலகுமாரன் நாள் முழுதும் பட்ட சிரமத்தினால் களைப்படைந்து நித்திராதேவியின் மடியில் இளைப்பாறலானான்.

மறுநாட் காலையில் சேஷஹோமம் நடந்தது. இதனுடன் விவாஹம் முற்றுப்பெற்றது. இது நிற்க, நரேச சந்திரனும் சுசீலன் வீட்டிலிருந்து நிருபமையின் வீட்டுக்கு மஞ்சட் காப்புக்குரிய ஸாமக்கிரிகளை அனுப்புவிக்க, அங்கும் ஆனந்த கோலாஹலம் நடைபெறலாயிற்று. பிரதிபை வெகுசாய் நாள் முழுதும் நிருபமையின் வீட்டிலேயே இருந்தாள். சுசீலகுமாரன்



நிருபமையைப் பாணிக்கிரஹணம் செய்து கொண்டு இரண்டா நாள் வீட்டுக்கு வராவிட்டால், பூபேந்திரநாதனும் பிரதிபையும் விடைபெற்றுக்கொண்டு போகக்கூடாதென்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தது.

சுசீலகுமாரன் தன் விவாஹத்தில் எவ்விதமான ஆடம்பரமும் நடப்பதற்கு சம்மதிக்கவில்லை. எல்லோரும் விசேஷித்து வற்புறுத்தியதன்மேல், ஒரு பாண்டு மேளம் மாத்திரம் கல்யாணப் பெண் வீட்டுக்கு அவசியம் அனுப்பப்பட்டது. சுப முகூர்த்தத்தில் சுசீலனுக்கும் நிருபமைக்கும் விவாஹம் நடந்தேறியது. நிருபமையின் மாதா, பிதா, மனோரமை, பிரதிபை முதலிய எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

அடுத்த நாள் சேஷஹோமம் முடிந்தவுடன் வதூவரர்களின் விடைகோள் நிகழ்ந்தது. நிருபமையின் புக்ககம் அவளுக்குப் பக்கத்து வீடாகவும், அவள் தினந்தோறும் வழக்கமாய் வந்து நாள் முழுதும் கழித்த வீடாகவுமே யிருந்தும், தம் மகளை அந்த வீட்டுக்குச் செல்ல விடை கொடுத்தனுப்பும் சமயத்தில மாதா பிதாக்களின் நெஞ்சம் வேதனைப்படாமலில்லை.

பிரதிபை தன் நமையன் மனைவியை மிகுந்த மகிழ்ச்சியோடும் அன்போடும் கிருஹப்பிரவேசம் பண்ணுவித்தாள். பிதா மாதாக்களின் க்ஷணநேரத்தியப் பிரிவினால் நிருபமையின் சித்தத்தில் உண்டான துயரம் பிரதிபையைக் கண்ட மாத்திரத்தில் போய்விட்டது. பிரதிபை தன் புது மதனியை முகத்தில முத்தமிட்டு இவ்வாறு கூறினாள்—"நிரு, நான் உன்னை நிரு வென்று அழைக்கட்டுமா, அல்லது மன்னியென்று அழைக்கட்டுமா? இல்லை, நான் உன்னை நிரு வென்றே அழைப்பேன். இந்தப் பேர்தான் எனக்குப் பிடிக்கிறது. இனி நான் இந்த வீட்டுக்கு ஒன்றுமேயில்லை—நீயே எல்லாமாய் விட்டாய். இனி மேல் இந்த வீட்டின் பளுவெல்லாம் உன் தலைமேல் ஏறியதாகும். எங்கள் அண்ணா இப்பொழுது உன் வஸ்துவாய் விட்டார்—எங்கள் அண்ணாவின் இந்த வீடு வாசல் உன்னதாய் விட்டது—இன்னும் அவருக்கு என்னென்ன உண்டோ, அதெல்லாம் உன்னதே ஆய்விட்டது. உன்னுடைய சொத்துக்களை இனி நீயே பார்த்துக்கொள். இதைவிட அதிகமாக வேறே நான் இப்போது என்ன சொல்லட்டும்? நான் இன்றே இராஜ குமாரனோடு கூடப்போகப் போகிறேன்; ஆனால் இப்பொழுதே அவருடைய ஊருக்குப் போகிறதில்லை. இங்கே கல்கத்தாவில் ராஜ நிவாஸத்தில் எழெட்டு நாள் தங்கும்படியாயிருக்கும்." மிகுந்த கஷ்டத்தின்மேல் நிருபமையின் வாயிலிருந்து வார்த்தை வந்தது. அவள் சொன்னாள்: "அப்படியானால், இப்போது நீ ஊருக்குப் போகப் போகிறதில்லையா? ஏன்?"

பிரதிபை சிரித்துக்கொண்டு சொன்னாள்: "ஏன் போகப் போகிறதில்லையோ, என்னால் சொல்லமுடியாது. ஆனால் இந்த சமயம் என்னை அழைத்துக்கொண்டு போகப் போகிறதில்லை யென்று இராஜகுமாரன் சொல்லுகிறார். கல்கத்தாவிலேயே புக்ககத்துப் பண்டிகை நடக்கும். அதற்கப்புறம் அவர் என்னை இங்கேயே விட்டு விட்டு ஊருக்குப் புறப்பட்டுப் போவார். எனக்குப் புக்ககத்துப் பண்டிகை நடக்கும்போது, நீயும் எங்கள் வீட்டுக்கு வருவாய். பிற்பாடு, நான் இங்கே வரும்போது, உனக்குப் புக்ககத்துப் பண்டிகை நடக்கும். இதன் நடுவில் நீ எழெட்டு நாள் தனியாய் இருக்கவேண்டி வரும். தனியாய் இருப்பானேன்? நான் ஒருத்திதான் இருக்கமாட்டேன்,—மற்ற எல்லாரும் இருப்பார்கள். இதைத் தவிர, சகி (மனோரமை)யும், அநுபமையும், உன் தாயாரும் தினந்தோறும்

இங்கே வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போவார்கள்."

நிருபமையின் கண்களில் நீர் ததும்பிற்று. சற்று நேரம் பொறுத்து அவள் சொன்னாள்: "பிரதிபையக்கா, நீ இராவிட்டால், எனக்கும் எதுவும் ஒன்றுமோடாது."

இதைக் கேட்டதும் பிரதிபைக்குத் தொண்டை அடைத்துக்கொண்டது. அவள் மறுபடியும் நிருபமையின் முகத்தை முத்தமிட்டு, "சே, நிரு, இப்படிச் சொல்லாதே," என்றாள்.

இவ்விருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், மனோரமையும் அவள் தாயாரும் அநுபமை முதலியவர்களும் பிரதிபை விடைபெற்றுக்கொண்டு போவதைப் பார்க்க வந்தார்கள். மனோரமை சிரித்துக்கொண்டே, "என்ன சகி, மன்னியுடன் என்ன ஆலோசனை பண்ணிக்கொண்டிருக்கிறாய்?" என்றாள்.

பிரதிபை சொன்னாள்: "ஆலோசனை வேறென்ன இருக்கப்போகிறது! நான் நிருவுக்கு சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தேன்."

மனோரமையின் தாயார் கண்ணீர் ததும்பக் கூறினாள்: "குழந்தாய்! அவளுக்கு என்ன சமாதானமாகப் போகிறது. நீ போனால், இவள் ஒரு நாழிகையாவது இங்கே தங்கியிருக்க மாட்டாள்."

பிரதிபை கண்ணைச் சிமிட்டிக்கொண்டு சொன்னாள்: "அம்மா, நீ என்ன சொல்லுகிறாயோ எனக்கு விளங்கவில்லை. நிரு திவ்வியமாய் இங்கே இருப்பாள். நானும்புக்ககத்துக்கே போகிறேன். நானும் அங்கே தனியாகத் தான் இருக்கவேண்டும்."

மனோரமையின் தாயார் பிரதிபையின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு சொன்னாள்: "ஆமாம், அது வாஸ்தவமே. நிருவும்தான் ஏன் இருக்க முடியாது. எங்கள் மனோரமையையே பாரேன், இவளுக்குக் கலியாணமான போது பத்தே வயது தான் ஆயிருந்தது. ஆனால் புக்ககத்தில் அவள் ரொம்ப சமத்தாய் இருந்தாள். இவள் புக்ககம் இங்கிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது, உனக்கே தெரியும். அப்படியிருந்தும் இவள் ஒரு தரமாவது அங்கே அழுதது கிடையாது. ஏண்டி மனோரமா, நீ அழுததுண்டா?"

மனோரமை நகைத்துக்கொண்டே சொன்னாள்: "அம்மா, நான் ஏன் அழவேண்டும்? புக்ககத்துக்குப்போய் யாராவது எப்பொழுதாவது அழுவாளா?"

மனோரமையின் வார்த்தையைக்கேட்டு வந்த சிரிப்பை அடக்க ஒருவராலும் முடியவில்லை.

மனோரமை பிரதிபையுடன் சொன்னாள்: "சகி, இன்றைக்கு நீ புக்ககத்துக்குப் போகிறாய். போகிறதற்குமுன் ஒரு தரம் உன் கல்லிழைத்த நகைகளைப் போட்டுக் கொள்ளேன், என் கண் குளிரப் பார்க்கிறேன்."

பிரதிபை தலையை அசைத்துச் சிரித்துக் கொண்டே சொன்னாள்: "சகி, நான் நீ கேட்கிறபடி செய்யப்போகிறதில்லை. நீ என்னை வேடிக்கை பண்ண எண்ணியிருப்பதுபோல் தோன்றுகிறது. என் கையில் இருக்கிற இந்த இரண்டு சங்குவளைகளைத் தவிர வேறெதையும் போட்டுக் கொள்ள எனக்கிஷ்டமில்லை. அவாளெல்லாம் ராஜாகூட்டம் என்று உனக்குத் தெரியாதா? கொஞ்சமாவது வயிரமோ, பச்சையோ, மாணிக்கமோ இல்லாவிட்டால் நம்மை ஒருவரும் ராஜாக்களென்று சொல்லமாட்டாரென்பது அவாளெண்ணம். இதற்காகவே அவாள் இதுகளையெல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். நாமோ சாமானியமானவாள். நாம் எந்த இடத்துக்குப் போகவேண்டும்? இந்த நகைகளெல்லாம் நமக்கு எதற்கு? நம் கைகளில்



வளையல்களும் நெற்றியில் குங்குமமும் இருந்தால் இவ்வளவே யதேஷ்டம். நீயே சொல்லு நான் சொல்லுகிறது சரியா இல்லையா?"

மனோரமைக்குப் பிரதிபையின் கேள்விக்கு எப்படி பதில் சொல்லுகிறதென்று ஒன்றும் தோன்றவில்லை, சற்று நேரம் கழித்து அவள் சொன்னாள்; "அது போகட்டும், இப்படி வா, உனக்குத் தலைவாரிப் பின்னிவிடுகிறேன் அதையாவது செய்யவிடுவாயா? உன் தலையில் சூட்டுவதற்காக இந்தப் பூமாலையையும் கொண்டு வந்திருக்கிறேன். இன்று ராத்திரி உனக்கு சோபன முகூர்த்தமாயிற்றே, நினைவில்லையா?'

இதற்குள் நிருபமை, 'நானும் பிரதிபை யக்காவுக்காகப் புஷ்பத்தால் செய்த கையணி, கழுத்தணி, காதணி முதலிய எல்லா நகைகளும் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லி ஒருவர்ணப்பட்டுச் சவுக்கத்திலிருந்து மேற்கூறிய விசித்திராபரணங்களை வெளியில் எடுத்தாள்.

பிரதிபையின் உள்ளம் இன்பத்தால் பூரித்தது. ஆநந்த மேலீட்டால் அவள் மீண்டும் நிருபமையின் முகத்தில் முத்தமிட்டு 'நிரு, நீ எனக்குப் பரிசாகக் கொடுக்கும் வஸ்துக்களை நான் அவசியம் ஏற்றுக்கொள்வேன். ஏனென்றால் நீ எனக்கு அன்புள்ள மன்னியல்லவா? இந்தக் காரியத்தை நீ என் மன்னி எப்படி செய்யவேண்டியதோ அப்படியே செய்திருக்கிறாய். மன்னீ, நான் இன்று என்புக்ககத்துக்குப் போகிறேன். நீ எனக்குச் சிங்காரம் பண்ணாவிட்டால் பின்னே யார் பண்ணுவார்கள். வா, உன்னுடைய பூவாபரணங்களை எனக்குச் சூட்டு' என்று சொல்லிக் கொண்டிருக்கையில் அவளுடைய கண்களிலிருந்து நீர் பெருகிற்று.

அப்பொழுது இன்னதென்று சொல்லமுடியாத ஏதோ ஒரு வேதனையால் எல்லோருடைய இருதயங்களும் வருந்தலாயின. பிரதிபையின் வார்த்தைகளைக் கேட்டு எல்லோரும் சேலைத் தலைப்பினால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்கள். பிரதிபை இன்று புக்ககம் போகிறாள். பிரதிபைக்குத் தாயார் இல்லையே, அவளை இன்று ஆடையாபரணங்களால் அலங்கரித்து யார் வழியனுப்புவார்கள்?

பிரதிபை சற்று நேரம் வரையில் பேசாமல் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள். பிறகு கொஞ்சம் ஆறுதலடைந்து, "நிரு, உன்னுடைய பூவாபரணங்கள் எங்கே? கொண்டுவா, நீயே அவற்றை எனக்குச் சூட்டு" என்றாள்.

நிருபமை அப்படியே செய்தாள். அவள் பிரதிபையின் இரண்டு கைகளிலும் இரண்டு கங்கணங்களையும், புஜங்களில் அநந்தாபரணத்தையும் பாஜுபந்தையும், நெற்றியில் சுட்டியையும், காதுகளில் கர்ணபூஷணங்களையும், கழுத்தில் கண்டமாலையையும், இவ்வாறு சமஸ்த புஷ்பாபரணங்களையும் அணிந்தாள். அந்தப் புஷ்பமய ஆபரணங்களால் பிரதிபை அலங்கரிக்கப்பட்டு ஸாக்ஷாத் வனதேவதையைப்போல் விளங்கினாள். பிரதிபை கண்ணாடியின் எதிரில் நின்று தன் வடிவத்தை நகசிகை பரியந்தம் பார்த்து, மனோரமையை நோக்கிச் சிரித்துக் கொண்டே, "சகி, முத்தணிகளும் வைர நகைகளும் இவற்றைவிட அதிக அழகும் [illegible]ப்புமுள்ளவைகளாய் இருத்தல் கூடுமோ," என்றாள். மனோரமை மந்தஹாஸத்துடன் மொழிந்தாள் 'இல்லை' என்று.

(தொடரும்.)

# ஆடவர் கடமை.

(ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன்)

நம்மையும் கண்ணகன்றவுலகத்தையும் சிருஷ்டித்த கடவுளுக்குப் பிரியமான புத்திமான்களே! பூர்வீக இராசாக்களும் வித்துவான்களும் குணமென்னுங் குன்றேறிய மகான்களும் மற்றும் முதியோர்களும் தங்களுடைய பத்தினிகளை எவ்வளவோ கௌரவமாக நடத்தினார்களென்றும் ஸ்திரீகளுடைய வார்த்தைகளை அவர்கள் ஒருகாலும் தட்டினதில்லையென்றும் இராமாயணம், பாரதம் முதலிய காவியங்களால் தெரிய வருகிறது. இந்துக்களாகும் நம்முடைய தேவர்களும் ஸ்திரீகளைக் கீழேவிட மனமில்லாதவர்களாய் தங்கள் தங்கள் தேகங்களிற் றானே வைத்துக்கொண்டதாகவும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றதை யாம் கண்ணுற்றிருக்கின்றோம். சாட்சாத் பரமசிவன் தமது தேவியாகிய பார்வதியைப் பாகத்திலும், மகா விஷ்ணுவானவர் தமது பாரியையாகிய இலட்சுமியை மார்மேலும், பிரமதேவன் தமது பத்தினியை நாவிலும் தேவர்கட்கரசனாகிய தேவேந்திரன் தொடையிலும் இவ்வாறாகப் புராணேதிகாசங்களிற் படித்தும் வித்துவான்கள் பிரசங்கித்தும் வரக்கேட்டுமிருக்கின்றோம். அப்படியிருக்க நாம் மாத்திரம் நமது மனைவிமார்களை அடிமையிலும் கடைப்படக் கடிந்து நடத்தி வருவது அளவிடப்படாத பெண் துரோகமல்லவா.

எங்கள் தெய்வங்களிற் பிந்தியவரும் முருகன் குமரன் கந்தன் கதிர்காமன் சண்முகன் மால்மருகன் அப்பன் சாமி யெனவும் பெயர் வழங்கிவரும் கலியுக வரதராங் கந்தசுவாமிக்கே மாதா விருக்கின்றதென்றால் பெண்பாலார் மகத்துவத்தைப் பேசவும் வேண்டுமோ.

‘தாயைச் சிறந்ததொரு கோயிலுமில்லை.’ இதன் கருத்தை வாசிப்பவர்களே அறியக் கடவர். நம்மைப் பத்து மாதகாலம் உதரத்திற் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாய்மார்களும் பெண்கள் தானே. இராவெல்லாங் கண் விழித்து அடிக்கடி பால் கொடுத்து மருந்து கொடுத்து எங்களுக்காகத் தாங்களும் மருந்துண்டு வைத்தியர் சொல்லும் பத்தியமிருந்து எங்களுடைய மலசலாதியவைகளை யெல்லாம் மனஞ் சலியாது சகித்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகள் வளரும் பொருட்டாய்த் தாய்மார் படுங் கஷ்டம் இவ்வளவென்று சொல்லக்கூடுமா? அல்லது என்னால் எழுதத்தான் கூடுமா? கூடாது. தாய்க்குப்பின் தாரம்.

இவ்வித மகத்துவந் தங்கிய தாயாருக்குப் பின் தாரமல்லவா! அன்னவளாலல்லவா நாம் கடைத்தேறவேண்டும். சாவித்திரி, சந்திரமதி, அருந்ததி முதலிய பெண்மணிகளின் செயலை உற்று யோசித்தால் தெரியவரும். தாய் தகப்பன் அண்ணன் தம்பி அக்காள் தங்கை பாட்டன் பாட்டி அயலார் அண்டையார் இனத்தவர் சனத்தவர் தன் தேசம் தானுண்ட சொத்துச் சுகம் எல்லாம்விட்டு நம்மை நம்பி நலியாமல் சலியாமல் நத்தும் நங்கையரை நலியச் செய்தால் நாமடையுங் கதியென்ன. அதுவுமல்லாமல் கடவுளானவர் படைத்த எண்பத்து நான்கு லட்ச ஜீவ பேதங்களில் அறிவின்மைப் பிறவியாகிய மிருகங்களிலும் பறவைகளிலும் ஆண் பிறவிகளை எவ்வளவு ரூப சவுந்தரியமாகப் படைத்திருக்கின்றாரோ அவ்வாறே மனுஷ ஜாதியாராகிய நம்மில் புருஷரை மாத்திரம் சமரசமாகவும் ஸ்திரீகளை மாத்திரம்



அதிக ரூபவதிகளாகவும் படைத்தருளியது அக்கடவுளுக்கும் பெண்பாலாரிற்பிரியமிருந்ததென்பதை இரண்டாமுறையும் விரித்திருக்கிறதைக் கண்ணுறக் கடவீர். பெண்ணென்றாற் பேயுமிரங்கும் என்பது முதுமொழி. அப்படியிருக்கும் பட்சம் எதற்காய் நாம் அன்னவர்களை இரக்கமாய்ப் பார்க்கக்கூடாது? அன்னவர்களாலல்லவா சபைதனிற் கூசாமற் பேசுந் திறம் உண்டாகின்றது. சில துஷ்ட ஸ்திரீகளின் துர்க்கிருத்தியத்தால் ஸ்திரீ சாதிகளைக் குறைவாய் மதிக்கலாகாது. ஏனெனில் அன்னவர்களை அனுப்பிய ஆடவர்களே அக்குற்றத்திற்காளாவார்கள். அதுவுமல்லாமல் ஆகாயவாணி பூமாதேவி அக்கினிதேவன் வேதப்பிராமணன் தேசத்தார் முதலாகிய சாட்சிகள் முன்னிலையில் சர்வபொறுப்பையும் ஏற்றதுமல்லாமல் அன்று தொட்டு அன்னவளை நன்மை காட்டி நடத்தவேண்டியவன் ஆடவனே. இது நியாயங் கருதியன்றோ பொன் கயிறோ சங்கிலியோ ஒன்றால் அவள் கழுத்தைக் கட்டிக் கைப்பற்றியிருக்கின்றதை கவனத்தில் வைக்கின்றதில்லையா? அதுவே தாலிக்கொடி யென்னும் பொற்கயிறு. இவ்விதமாய் அரண்படுத்தப்பட்ட பெண்பாவை என்ன குற்றமும் செய்ய நேரிடாதென்பது திண்ணம். அப்படி நேரிடில் அக்குற்றம் ஆளனையே சாருமென்பது சகலருக்கும் நன்கு புலப்படுமென்பது என் கருத்து.

அன்பார்ந்த நண்பர்காள்! இன்னுமோர் விஷயஞ் சொல்லுகின்றேன். பெண் பாலார் விசேஷமில்லாதவர்களென்று ஒருவர் சொல்லுகிறாரென்று வைத்துப் பார்ப்போம். அப்படிச் சொல்லும் ஒருவர் மழை பனி வெய்யில் பெருங் காற்றுக்களில் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தும் திரை கடல் ஓடிச் சம்பாதித்தும் உச்சியின் வேர்வை உள்ளங்கால் வழி செல்ல உழைத்தும் இன்னும் ஏராளமான கஷ்டப்பட்டும் எதற்காகச் சும்மா வீட்டிலிருக்கும் ஸ்திரீ சாதியாரைப் போஷிப்பிக்கவேண்டும்? அவர்கள் விசேஷமானவர்களானபடியாலன்றோ. இவ்வித உத்தம மாதர்களை ஆடவர்கள் எல்லோரும் மிக இரக்கமாகவும் ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் கவனமாகவும் மேன்மையாகவும் நடத்துவதே ஆடவர் கடமை.

சுபம்!

# எங்கள் தீர்த்த யாத்திரை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

(554-வது பக்கத் தொடர்ச்சி)

டில்லியிலிருந்து இரவு எட்டு மணிக்கு ரயிலேறி மறுநாட் காலை 7½ மணிக்கு ஹரித்துவாரம்போய்ச் சேர்ந்தோம்.

ஹரித்துவாரம் சேருவதற்கு முன்னதாகவே ரயில் வண்டியிலேயே அநேக பண்டாக்கள் எங்களை வந்து உபத்திரவம் செய்ய ஆரம்பித்தனர். அச்சிட்ட தங்கள் விலாசக் கடிதங்களைக் கொண்டுவந்து நீட்டினர். தாங்கள் கங்காபுத்திரர்கள் என்றும் யாத்திரைக்காரர்களுக்கு உதவி செய்வதே தங்கள் ஜீவனம் என்றும் சொன்னார்கள். நாங்கள் டில்லியிலிருந்தே சென்னை வாசி ஒருவருக்குக் கடிதம் எழுதியிருந்தோமாதலின், அவர் ரயில் ஸ்டேஷனுக்கு வந்திருப்பார் என்ற தைரியத்தில் எல்லா பண்டாக்களையும் மறுத்து விட்டோம். சிலரைக் கோபித்துக்கொள்ள வேண்டியிருந்தது. தோளைத் தட்டியும் சட்டையைப் பிடி

ந்து இழுத்தும் நச்சுச்செய்ய ஆரம்பித்தனர். ஹரித்துவாரத்தில் இறங்கிய உடன் எங்களைப் பல பண்டாக்கள் மொய்த்துக் கொண்டார்கள். அப்பப்பா! அவர்கள் வலையிலிருந்து தப்புவது பெருங் கடினமாயிருந்தது. திருப்பதி கிருஷ்ணமாசாரியருக்கு எழுதியிருப்பதாகப் பன்முறை சொல்லியும் கேட்கவில்லை. எங்களால் வரக்கூடிய வரும்படி தங்களுக்கு இல்லாமல் மதராசி ஒருவனுக்குப் போயிற்றே என்ற வருத்தமும் கோபமும் அவர்களுக்கு அதிகமாயிற்று. இந்தச் சங்கடத்தில் எங்கள் பேர்வழி ஒருவரும் ரயில் ஸ்டேஷனுக்கு வரவில்லை. மூட்டைகளையும் சாமான்களையும் இந்த பண்டாக்களும் வண்டிக்காரர்களும் தொடாதபடி வெகு கண்டிப்பாக இருக்க வேண்டியதாயிற்று. கடைசியாக எங்கள் ஆசாமியைத் தெரியும் என்ற ஒரு வண்டிக்காரன் அகப்பட்டான். அதில் சாமான்களை மாத்திரம் வைத்துக்கொண்டு நாங்கள் நடந்தோம்.

மலைப் பிரதேசத்திலிருந்து சம வெளியில் கங்காநதி முதல் முதல் ஹரித்துவாரத்தில் இறங்குகிறது. அதாவது ஹரித்துவாரத்திலிருந்து இமயமலை ஆரம்பமாகிறது எனலாம். மலையடிவாரத்தில் ஊர் இருக்கிறது. ஊரில் உள்ள முக்கியமான தெரு கங்காநதிக் கரையை ஒட்டியிருக்கிறது. அந்தத் தெருவே சாய்ந்து உயரமாக இருக்கிறது. கங்காநதியும் வாட்டமான சரிவில் ஓடுகிறபடியால், வேகமாக ஓடுகிறது. நதிக்கரையில் வரிசையாகப் பல கட்டிடங்கள் இருக்கின்றன. இதில் தேசாந்திரிகள் தங்கி கங்கா ஸ்நானம் செய்து போவார்கள். நாங்கள் இறங்கிய பெரிய சத்திரத்தில் இதே மாதிரி நாலா புறங்களிலும் அநேக அறைகளிற் பல யாத்திரிகர்கள் இறங்கியிருந்தனர். சென்னை வாசியான கிருஷ்ணமாசாரியார் என்பவரும் ஒரு அறையில் நிரந்தரமாகக் குடியிருந்தனர். அவர் தெற்கு தேசத்திலிருந்து வரும் யாத்திரிகர்களை அழைத்துக் கொள்வதால் கங்காபுத்திரர்களுக்கு மாமூலாகக் கிடைக்கும் வரும்படியும் இதர தட்சிணைகளும் குறைந்து போகிறது என்று அவரை அவ்வூர் பண்டாக்கள் மிகவும் கஷ்டப்படுத்தியதாகவும் அதனால் அவர் பயந்து ரயிலுக்கு வராமல் இருந்து விட்டதாகவும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் தெற்கேயிருந்து யாத்திரைக்காக வரும் ஜனங்கள் கங்கையில் ஸ்நானம் செய்வதற்குப்படும் பலவித கஷ்டங்களைப் பற்றிக் கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டியது அவசியம். கங்காநதி மகா புண்ணியமான நதி என்று நாம் எல்லாரும் கருதுகிறோம். பரம்பரையாக அந்த எண்ணம் நம் ரத்தத்தில் ஊறி வளர்ந்து வந்திருக்கிறது. இவற்றை யழகைப் பார்த்து ஆனந்திப்பதும் சரீர ஆரோக்கியத்திற்காகச் சந்தோஷமாக அமிழ்ந்து ஸ்நானம் செய்வதும் ஒரு புறம் இருக்க, இப்படி கங்கையில் ஸ்நானம் செய்வதால் மகா புண்ணியம் என்றும் நமது பாபங்கள் கங்கையில் ஸ்நானம் செய்வதால் அலம்பிவிடப்படுகின்றன என்றும் கருதுகிறோம். தமிழ்ப் புலவரான கம்பரும் ஸ்ரீராமன் கங்கையில் நீராடியபோது கங்காதேவி தன்னிடம் பல கோடி ஜனங்கள் ஸ்நானம்செய்து நீக்கிய பாபமூட்டை ராமன் நீராடியதால் நசித்து தான் சுத்தமாக விட்டதாகச் சொல்லியதாக வர்ணித்திருக்கிறார். ஆகவே கங்கா ஸ்நானம் செய்வது ஏதோ பூர்வ ஜன்ம புண்ணியத்தின் பலனாக இந்த ஜன்மத்தில் சிலருக்கு அதிருஷ்டமாகக் கிடைத்தது என்று பொதுவாக ஜனங்கள் ஆனந்திக்கிறார்கள். இவ்விதமான எண்ணங்களுடன் ஜனங்கள் கங்கையில் நீராடச் செல்வ



தால் அவ்வளவு விசேஷமான அதிருஷ்டத்திற்கு வேண்டிய விலை கொடுக்கவேண்டியது நியாயம் என்று சொல்லுகிறோம். அந்த விலைதான் பலவித தானங்களும் தட்சிணைகளும் செய்வது. கங்காபுத்திரர்கள் என்று சொல்லிக்கொண்டு ஒரு வகுப்பார் உளர். அவர்கள் கங்கையில் ஸ்நானம் செய்யும் ஒவ்வொருவரும் ஒருகங்காபுத்திரனுக்குக்குறைந்தது $1\frac{1}{4}$ ரூபாய் கொடுத்தால்தான் ஸ்நான பலன் கிடைக்குமாம். 'எனக்குப் பலன் வேண்டியதில்லை' என்று சொன்னால் ஒப்பமாட்டார்கள். 'இவ்வளவு செலவுசெய்து கங்கைக்கரைக்கு வந்த பிறகு $1\frac{1}{4}$ ரூபாய் ஒருவனுக்கு தட்சிணை கொடுப்பது ஒரு பெரிதல்ல. இதற்காகச் சண்டை எதற்கு' என்று அவர்கள் வாதாடுகிறார்கள். நம்முடன் வந்திருக்கும் மற்ற ஜனங்களும் மற்ற யாத்திரிகர்களும் இவ்வாறு மாமூலாகக் கொடுத்து விட்டு ஸ்நானம்செய்து வருவதால் ஒருவன் மாத்திரம் இதற்காக வம்பு பேசுவது நலம் அல்ல. மேலும் இவ்விதம் வழக்குப் பேசி கங்காபுத்திர தட்சிணை இல்லாமல் ஸ்நானம் செய்தோமானால், நமக்கு உதவியாக வந்த தமிழ் ஜனங்கள் அவ்விடமே இருப்பவர்களாதலால் அவர்களை உபத்திரவம் செய்ய ஆரம்பிக்கின்றனர். இதைப் பற்றி இன்னும் காசியில் விஸ்தரிப்போம்.

நாங்கள் காலை சத்திரத்தில் இறங்கியவுடன் அறையில் சாமான்களைப்போட்டுப் பூட்டிக்கொண்டு ஸ்நானம்செய்யச் சென்றோம். முக்கியமான தெருவின் இருபுறங்களிலும் கடைகள். வலதுகைப்புறமாக உள்ள வீடுகளின் புறக்கடையில் கங்காநதி ஓடுகிறது. நாலைந்து வீடுகளுக்கு ஒரு சந்தாக இருக்கும். அவ்வழியே கங்கைக்குச்சென்றோம். நதி தீரத்தில் விஸ்தாரமான படித்துறைகள் பல இருக்கின்றன. ஒரு புறம் அநேகர் ஸ்நானம் செய்திருந்தனர். அந்த இடம் விஷ்ணு பாதம். அங்கு ஸ்நானம் விசேஷமாகக் கருதுகிறார்கள். பெருங் கூட்டம் ஏற்படுவதால் ஜனநெருக்கடியில் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்தப் படித்துறைக்கு எதிராக நீண்ட வட்டமாக ஒரு திட்டுக் கட்டி அதற்கு ஒரு சிறு பாலமும் கட்டி இருக்கிறார்கள். இந்தத் திட்டில் சுற்றிலும் பலர் ஸ்நானம் செய்திருந்தனர். பாலத்தின் மீது நின்றுகொண்டு சிலர் கோதுமை மாவைப் பிசைந்து சிறு சிறு உண்டைகளாகச்செய்து ஜலத்தில் வீசி யெறிந்துகொண்டு நின்றனர். பெரிய பெரிய மீன்கள் கூட்டமாக வந்து ஒன்றையொன்று தள்ளிக்கொண்டு தாவி எழுந்து மாவைத் தின்றுகொண்டிருந்தன. இது மிகவும் வேடிக்கையாக இருந்தது.

எங்களுடன் வந்த கிருஷ்ணமாசாரியார் இன்னொரு தமிழ்ப் பிராமணரை இட்டு வந்தனர். அவர் எங்களுக்கு சங்கல்பம் முதலியன சொல்லி வைத்துப் பிறகு ஸ்நானம் செய்யச் சொன்னார். ஆகா! அந்த கங்கா ஸ்நானம் விசேஷமானதுதான். தெளிவான அந்த ஜில்லிப்பு ஜலத்தில் முழுகி விளையாடினோம். பக்கத்தில் மலைகள் காணப்படுகின்றன. பெரிய மரங்களும் பசுமையான செடிகளும் நாலா புறங்களிலும் உள. எதிர்க் கரையில் இரண்டொரு படகுகள் காணப்பட்டன. வடக்காக உயரத்தில் நதி சற்று குறுகியதாகத் தோன்றியது. அங்கு ஒரு பாலமும் இருக்கிறது. விரலைத் துண்டித்து விடும்போன்ற அந்த ஜில்லிப்பான ஜலத்தில் முதலில் அமிழ்ந்து ஸ்நானம் செய்வது கடினமாயிருந்த போதிலும், பிறகு ஜலத்தினின்றும் எழுந்து கரையேறிச் செல்ல வேண்டுமே என நினைத்தோம். கடைசியாக வயிற்றுப் பசி அதிகமாகி எங்களை நிர்ப்பந்தம் செய்யவே கரையேறி நடந்தோம். கடைத்தெரு போகும் வழிவரையில் அம்மம்ம! எங்களை மொய்த்துக்கொண்ட பிச்சைக்காரர்களு

க்கு கணக்கில்லை. காஷாயதாரிகளும், தாடிக்காரர்களும், ஆண், பெண், குழந்தைகளும் ஆக நூற்றுக்கணக்காக இருந்தனர். இவர்களிற் பெரும் பான்மையோர் பலாட்டியர். இந்தச் சோம்பேறிக் கூட்டத்தார் யாத்திரிகர்களிடம் யாசகம் பெற்று வெட்டிச் சோறு உண்டு யாதொரு கவலையுமின்றி ஜீவனம் செய்கின்றனர். பைராகிகள் கரையிலேயே சற்களை அடுப்பாக வைத்து மாவைப் பிசைந்து ரொட்டி தட்டிக்கொண்டிருந்தனர். சிலர் ஆனந்தமாக ஹூக்காக்குடித்துக்கொண்டு யோகநிஷ்டையில் அமர்ந்திருந்தனர். ஒரு புறம் பலர் க்ஷவரம்செய்து கொண்டிருந்தனர். முடி எடுத்துவிட்டு கங்கா ஸ்நானம் செய்வது அதி விசேஷமாம்.

வரும் வழியிலேயே கடைகளில் கறிகாய்களும், பால், தயிர் முதலியனவும் வாங்கி வந்தோம். பெரியஇரும்புச்சட்டிகளில் பால் காய்ச்சிப் பிறை குத்தித் தயிராக வைத்திருந்தார்கள். தயிர் கட்டியாக நன்றாக இருந்தது. அல்வாவை வெட்டி எடுப்பதுபோல எடுத்து விற்பனை செய்வது அழகாயிருந்தது. எங்கள் அறையைச் சேர்ந்து சமயல் வேலையைத் துவக்கினோம். முதலிற் கொஞ்சம் காப்பி தயார் செய்து பருகிவிட்டு நான் மாத்திரம் மறுபடியும் எங்கள் சத்திரத்தின் பின் கட்டிலேயே கங்கைக்கரையில் ஸ்நானம் செய்தேன். இரண்டு பிராமணர்களுக்கு தட்சிணை கொடுத்து சிரார்த்தம் செய்தேன். பிறகு கிருஷ்ணமாசாரியார் இஷ்டப்படி அங்குள்ள ஒரு கங்காபுத்திரனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தேன். கங்கா ஸ்நானம் செய்த பலன் கிடைத்து விட்டது. பகல் வேளை போஜனம் உண்டு சற்று இளைப்பாறி யிருந்தோம். எங்கள் பெரிய தாயார் முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு தரம்தான் ஹரித்துவாரம் வந்தபோது பார்த்ததற்கும் இப்போதுஉள்ள ஹரித்துவாரத்திற்கும் உள்ள வித்தியாச மாறுதல்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். கோடை காலமாதலின் வெய்யில் கடுமையாகவே இருந்தது. மாலை நாலு மணி சுமாருக்கு மறுபடியும் வெளியே சுற்றி வரக் கிளம்பினோம். ஊரில் நிலையாகக் குடியிருக்கும் ஜனங்கள் சொற்பந்தான் எனினும் தினமும் பிரதி ரயிலிலும் நூற்றுக்கணக்காக யாத்திரிகர்கள் வருவதும் திரும்பிச் செல்வதுமாக இருந்தனர். தபால் ஆபீசு சென்று விசாரித்துக்கொண்டு மறுபடியும் கடைத் தெருவைச் சுற்றினோம்.

ஹரித்துவாரத்திலிருந்து ரயில் பாதை இன்னும் உயரச் செல்கிறது. டேராடூன் என்னும் இடத்தில் போய்ச் சேரும். இங்கு காட்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் பயிலும் பெரிய கலாசாலை ஒன்று இருக்கிறது. ஹரித்துவாரத்திலிருந்து சில மைல்களுக்கப்பால் மலைச்சரிவில் ஹிந்து வாலிபர்கள்பயிலும் குருகுலம் ஒன்று. சில மாதங்களுக்கு முன் டில்லியில் கொலை செய்யப்பட்ட ஸ்வாமி சிரத்தானந்தர் ஸ்தாபித்தபாடசாலைஇது. ஹரித்துவாரத்திலிருந்து 14 மைல் உயரச் சென்றால் அங்கு ஹிருஷீகேசம் என்ற க்ஷேத்திரம். இங்கு கங்காநதி சிறிய அருவியாக ஓடுகிறது. இதைச் சுற்றிலும் சில ஜனங்கள் குடிசைகள் கட்டிக்கொண்டு ரிஷிகள் போல சுகமாக ஜீவித்திருக்கின்றனராம். ஹரித்துவாரத்திலிருந்து மோட்டார் பஸ் வண்டிகள் ஹிருஷீகேசம் போவதால் மறுநாள் அவ்விடம் போய்த் திரும்புவதாகத் தீர்மானித்தோம். இன்னும் வடக்கே மலைப்பாதை வழியாகவே என்பது அல்லது நூறு மைல் பிரயாணம் செய்து பதரி நாராயணமும் இன்னம் உப்கேதாரமும் போய்ச்சேரலாம். பதரிகாச்சிரமத்தில் வெகு அழகாக இருக்கும். பலஜோலிகளில் அகப்பட்டுக்கொண்டு மனிதர் குழாத்தில் தவித்து இருப்பதைவிட பதரிகாச்சிரமத்தில் கனி கிழங்குகள் தின்று கொண்டு கங்கையில் தின



மும் நீராடி சுகமாகஇருப்பது பாக்கியமென்று விரக்திகொண்டு சிலர்கருதலாம். அவ்வாறேசிலரும் வசித்து வருகிறார்களாம். இன்னும் உயர இருக்கும் கேதாரத்தில் உள்ள கோவில் மலைக்குகையில் இருக்கிறது. வருஷத்தில் பல மாதங்கள் பனிவிழுந்து பனிப்பாறைகள் மூடிப்போம். கோடை மாதங்களில்தான் யாத்திரிகர்கள் செல்ல முடியும். சித்திரா பௌர்ணமியன்றுதான் விசேஷம். இந்நாட்களில்தான் பூசை நடக்கும். மாரிகாலத்தில் ஜனங்கள் பனி இல்லாத கீழ் அடிவாரத்திற்கு வந்து விடுவார்கள். அடுத்த வருஷம் கோடை காலம் ஆரம்பமானவுடன் மறுபடியும் கோவிலுக்குச் சென்று பூசை செய்வார்கள். பனிப்பாறைகள் மூடிக்கொள்வதால், முன் ஸ்வாமியின் மீது சாத்திய புஷ்பங்கள் வாடிப்போகாமல் இருக்கும். சாதாரணமாக ஜனங்கள் மாரிகாலங்களில் தேவர்கள் பூசை செய்திருந்தார்கள் என்று சொல்வது வழக்கம்.

எங்கள் பெரிய தாயார் கேதாரம் செல்ல வேண்டுமென்ற உத்தேசத்துடன் இந்த யாத்திரையைத் தொடங்கினர். அவருடைய நண்பர் ஒருவர் சென்னையிலிருந்து புறப்பட்டு, கல்கத்தா—கயா மார்க்கமாக ஹரித்துவாரம் வருவதாகவும் இருவரும் சேர்ந்து ஹரித்துவாரத்திலிருந்து புறப்பட்டுக் கேதாரம் செல்வதாக ஏற்பாடு. கேதாரம் செல்வது சுலபமானதன்று. பலாட்டியர்கள் நடந்து செல்லலாம். அநேக யாத்திரிகள் இக்காலம் செல்வதால் அவர்களுடன் சேர்ந்து செல்லலாம். தினமும் காலை 10 அல்லது 15 மைல் நடந்து பிறகு ஓரிடத்தில் தங்கி போஜனம் தயார் செய்து உண்டு களைப்பாறி மறுபடியும் 10 மைல் நடந்து இராத் தங்குவதற்கு ஆங்காங்குஅமைந்துள்ள சாவடிகளுக்குப் போய்ச் சேரவேண்டும். உயரமாகப் பாதை செல்வதால் சீக்கிரம் களைத்துப் போம். ஆனாலும் மலைமீது இருபுறமும் உள்ளகாட்சிகளைப் பார்த்துக் கொண்டு நடக்கலாம். பெரும் மரங்களும், மலைச்சுனைகளும், சிறுகருவிகளும் ஆங்காங்கு உள: மலைமீது ஏற்றத்தில் நடப்பதற்கு உதவியாக யாத்திரிகர்கள் மூங்கில் தடிகளை ஊன்றிக்கொண்டு நடப்பார்கள். காட்டு ஜனங்கள் ஆங்காங்கு வேடிக்கை பார்க்க வருவார்கள். வழியில் துஷ்ட மிருகங்களும் தென்படும். மேட்டிலும் பள்ளத்திலும் பாதை செல்லும். பலருடன் சேர்ந்து போவதால் வேடிக்கையாகவே இருக்கும். நடக்க இயலாதவர்கள் டோலியிற் பிரயாணம் செய்யலாம். பதரிகாச்சிரமம் போய்த் திரும்பி வர டோலி ஆட்களுக்கு 150 ரூபாய் கொடுக்க வேண்டும். கேதாரம் போய்வர 250 ரூபாய் கேட்டார்கள். நாற்காலி மாத்திரம் உள்ள டோலி சிறியது. பல்லக்குப்போன்ற டோலி பெரியது. யாத்திரிகர்களை டோலிக்காரர்கள் நடு வழியில் உபத்திரவம் செய்வதும் வழக்கம். இதைக் குறைப்பதற்காக ஹரித்துவாரம் முனிசிபாலிடியில் டோலிக்காரர்களை ரிஜிஸ்டர்செய்து ஜாப்தா வைத்திருக்கிறார்கள். ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டோலிக்காரர்களைச் சற்று நம்பிப் பிரயாணம் செய்யலாம். தைரியக் குறைவானவர்கள் எனக் கருதி சாதாரணமாக ஸ்திரீகள் இவ்விதப் பிரயாணம் செய்வது இல்லை. வெகு சில ஸ்திரீகளே சென்றிருக்கிறார்களாம். ஆண் பிள்ளைகள் தமாஷாக இவ்விதம் செல்வது நன்றாக இருக்கும். இதில் தான் நம்மவர்க்கும் ஐரோப்பியருக்கும் வித்தியாசம்; ஆண் பிள்ளைகள் செய்யக் கூடிய எல்லாக் காரியங்களையும் ஏன் ஸ்திரீகளும் செய்யக் கூடாது என்று அவர்கள் வாதம்செய்து அவ்விதமே செய்வர். மேலும் இவ்வித துணிச்சலான செய்கைகள் செய்ய ஐரோப்பிய ஆண் மக்கள் தயாராக இருப்பர். ஆனால் நமது தேசத்திய ஆண் மக்களே பயம் நிரம்பியவர். சில வரு

ஷங்களுக்கு முன் இமயமலையின் உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்டு மீதுசென்று அதன் உச்சியில் பிரிட்டிஷ் கொடியை நாட்டவேண்டுமென்று சிலர் பிரயாணம் செய்தார்கள். எவ்வளவு தீரமான எண்ணம்! துணிவுகரமான செய்கை! நம்மில் அநேகர் 'இவர்களுக்குத் தின்றுவிட்டு சும்மா இருக்க முடியவில்லை. மலைச் சிகரத்தில் ஏறுவோமா, கடல் உள் குதித்து நீந்துவோமா என்று கொழுப்புப் பிடித்து அலைகிறார்கள்' என்று ஏளனமாகச் சொல்கிறார்கள். இவ்விதத் துணிச்சலும் தீரமும் கொண்டு சகல ஜனங்களும் இருப்பதால்தான் பிரிட்டிஷ்காரர்கள், கையகலமுள்ள தங்கள் நாட்டைவிட்டுப் பல்லாயிர மைல்களுக்கப்பால் உள்ள பெரிய தேசங்களைக் கட்டி ஆள்கின்றனர். நம்மவர்களோ, அம்மம்மா! 'இந்த அமாவாசை இருட்டில் நான் வெளியே செல்லமாட்டேன்' என்று சமயலறையிற் பதுங்குகிறார்கள். ஆண் மக்கள் கதி இவ்வாறாக இருக்க, பெண் மக்கள் நிலைமையைப் பற்றிப் பேசுவானேன். பேதமை என்பது மாதர்க் கணிகலம் என்று சொல்லிப் பெண் மக்களது தைரியத்தை இன்னும் பூஜ்யம்செய்து விடுகிறார்கள். ஒவ்வொரு ஸ்திரீயும் ஆண் மகன் துணையிருந்தாலன்றி வெளியே செல்வதோ, ரயில் பிரயாணம் செல்வதோ கஷ்டமாகிறது. அப்படி யாதேனும் ஒரு ஸ்திரீ தைரியமாக ரயில் பிரயாணம் செய்தாலோ நமது ஜனங்கள் சும்மா விடுவதில்லை. ஆச்சரியமாக பிரமித்துப் பேசுகின்றனர். சில வீரர்கள் அவளுக்கு ஏதேனும் இடைஞ்சல்செய்து வேடிக்கை பார்க்கின்றனர். பலர் சுட்டிக்காட்டி வம்பு பேசுகின்றனர். எவ்வளவு மனோ விருத்தியடைந்திருந்த போதிலும் ஆண் மக்கள் தத்தம் ஸ்திரீகள் தைரியமான செய்கைகள் செய்தால் ஒப்புக்கொள்வதில்லை. ஸ்திரீகள் விஷயம் வந்தால் அந்த உயர்ந்த பேச்சு எல்லாம் தூரக்கட்டி வைத்துவிடவேண்டும். ஜன சமூகத்துப் பிரமுகர்கள் தலைவர்கள் எனப் பிரசித்தி பெற்றவர்கள் கூட ரயில்வே பிளாட்பாரத்தில் ஒரு ஸ்திரீ தனியாகப் பிரயாணம் செய்தால் அவளை உற்று நோக்குவதும், எங்கு செல்கிறாள், எந்த ஊர், என்று அவளைப் பற்றி யறிய ஆவல்கொள்வதும் சகஜமாக இருக்கிறது. இந்த மனோபாவம் மாறி ஆண் பெண் இருபாலரும் பயம் என்னும் பேயை ஓட்டி, தைரியமும் துணிச்சலும் மிகுந்து வளரும் காலத்தில்தான் நம்மவர்களும் தலை நிமிர்ந்து உலகத்தினருடன் போட்டியாக எதிர் நின்று சமர் செய்ய முடியும்.

அன்றைய் தினம் எங்கள் பெரிய தாயார் மூன்று தடவை நீராடியதன் பலனாக அவருக்குத் தலை வலியும் ஜுரமும் உண்டாயது. மேலும் கேதாரம் செல்லும் தன் ஆசை பூர்த்தியாகவேண்டுமே யென்ற கவலை குடிகொண்டது. எங்களுடன் வந்த மற்றவர்களை அனுப்பிவிட்டு, நான் மாத்திரம் அவருடன் கேதாரம் செல்லவும் சௌகரியப்படவில்லை. அவர் மாத்திரம் செல்வதாகப் பிடிவாதமாக இருந்த போதிலும் அவரது தேக நிலைமையில் அவரை அனுப்ப நாங்கள் ஒருவரும் ஒப்பவில்லை. மறு நாள் அவர் எதிர்பார்த்திருந்த நண்பர் வந்து சேர்ந்தார். ஹரித்துவாரத்தில் ஒரு நாள் தங்கி, அந்த அம்மாளும் அவருடன் வந்த அவர் சகோதரியும் அவள் புருஷனும் பதரிகாச்சிரமம் புறப்பட்டார்கள். 150 ரூபாய்க்கு ஒரு டோலி பேசிக்கொண்டார்கள். அவர்களுடன் செல்ல வேண்டுமென்று வெகு ஆசை கொண்டிருந்த போதிலும், அந்த அம்மாளே எங்கள் பெரிய தாயாரை தைரியமாக அழைத்துச் செல்ல முன் வரவில்லை. உடம்பு அசௌக்கியமாகி விட்டால் என்ன செய்வது என்று கவலைகொண்டாள். 'அதற்கென்ன? என்னைப் பற்றி ஒருவரும் கவலைப்படமாட்டார்கள், நான் இறந்து



போனால் அப்படியே இழுத்துக் கங்கையில் எறிந்து விடு என்று தைரியமாக எங்கள் பெரிய தாயார் சொல்கிறார். ஆனால் அவள் ஒப்பவில்லை. கடைசியாக அவர்கள் மாத்திரம் புறப்பட்டுச் சென்றனர். ஐயோ பாபம்! சென்னைக் கலாசாலை சம்ஸ்கிருத பண்டிதையான அந்த அம்மாள் பதரிகா யாத்திரைசெய்து சென்னை திரும்பி வந்த சில நாட்களுக்கெல்லாம் இறந்து விட்டதாகப் பிறகு அறிந்தேன். பதரிகாச்சிரமத்திற்கு வழிவிட்டு அனுப்பியது தான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது.

(தொடரும்)

# மலையே நாடு.

(சுவாமி அற்புதானந்தர்)

இச்சிறந்த நாட்டைப் பிரிட்டிஷ் மலையாவெனவும், ஸ்டிரெயிட் ஸெட்டில்மெண்டு எனவும், பிடரேடெட் மலைய ஸ்டேட்ஸ் எனவும், மலைய ஸ்டேட்ஸ் எனவும் நான்கு பகுதிகளாகப் பிரிப்பர். மலைவளம், நிலவளம், நீர்வளம் இவைகளின் சிறப்புகளை எழுதமுற்படின் சிந்தாமணி இடந்தர அஞ்சுமெனவே சுருக்க வரையலானேம். இந்நாட்டின் பூர்வீகக் குடிகளை சாகேய் என்பர். இவர்கள் நீக்ரோ வகுப்பை யொத்த நாட்டினமாக இன்றும் உள்ளார்கள். சுமத்திரா தீவிலிருந்து பின்னர் குடியேறி, நாட்டின் வளங்களை யறிந்து தம்மை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவர்கள், தம்மை மலேயர் என ஏற்படுத்திக்கொண்டனர். இவர்களுடன் சீனர்களும் இந்தியர்களும் வியாபாரப்புழக்கங்களைக்கொண்டிருந்து, நாளாவட்டத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கியம் பெருகவே தம்மையும் ஸ்திரவாசிகளாக்கிக்கொண்டனர். இந்நாட்டில் ஐரோப்பியர்களில் முதன் முதலாகப் போர்த்துகீசியரே குடியேறினார்களெனவும், பின்னர் டச்சர்கள் குடியேறலாகினார்களெனவும், இவ்விரு இனங்களையும் தொடர்ந்து பிரிட்டிஷார் நிலைகொள்ளலாயினார்களெனவும் சரித்திரங்கள் கூறும். தமது யூக வழக்கம்போலவே, பிரிட்டிஷார் ஏனைய ஐரோப்பியர்களிடமிருந்து இந்நாட்டை மெள்ள மெள்ள யுக்தி பூர்வமாகக் கைப்பற்றினதை கவனிக்கின், கி. பி. 1786-ம் ஆண்டு முதல் 1909 வரை இப்பெரும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது பொன்னிடையாக விளங்கும். இவ்வமயம் இந்நாடு ஒரு கவர்னரின் அரசியல் தத்துவத்தில் ஜில்லா உத்தியோக அதிகார வர்க்கத்துடனும், சுதேச மன்னர்களின் மேற் பார்வைக்கு நான்கு ரெசிடெண்டுகளைக்கொண்டும், பிரிட்டிஷ் ஆட்சியில் பார்லிமெண்டிற்குக் கட்டுப்பட்டுமுள்ளது. சுதேச மன்னர்களின் ரெசிடெண்டுகள் மலைய கவர்ன்மெண்டின் சீப் செக்ரிடேரிக்கும், இவர் ஹை கமிஷனரின் கீழும் இவர் கவர்னருடன் ஒத்துழைப்பைக் கொண்டிருப்பர். இந்நாட்டின் விளைவு பொருள்களை ரப்பர், தகரம், பாக்கு, காப்பி, மிளகு, சர்க்கரை, மீன் வகையாவெனக் குறிப்பிடலாம். இவ்வமயம் இந்நாட்டின் மக்களாகக் காணப்படுபவர் மலையர்கள், சீனர்கள், இந்தியர்கள், சியாமியர்கள், ஜப்பானியர்கள், அரபியர்கள், சிங்காளியர்கள், அனாமியர்கள், பர்மீயர்கள், யூரேஷியர்கள், ஐரோப்பியர்களெனலாம். இந்நாட்டின் முக்கிய நகரங்களையும் பினாங்கு, டைபிங், ஈபோ, குவலாலம்பூர், சேரம்பான், மலாக்கா, ஸ்வெட்டன்ஹாம், சிங்கபூர் எனவும் சொல்லலாம். இந்நாட்டில் சுமார் மூவாயிரம் மைல் நீண்ட நல்ல ரோட்டுகளும், சுமார் ஆயி

ரம் மைல்களின் இருப்புப்பாதை வசதிகளுமுளவென்று சொல்வர். இந்நாட்டில் புழங்கும் நாணயம் டாலர். ஒரு டாலர் நூறு செம்புக் காசுக்குச் சமமானது. இவைக்கு வெள்ளியில் ஐந்து, பத்து, இருபது, ஐம்பது காசுக்குச் சமமான சிறு நாணயங்களுமுள. செம்புக் காசுகளில் கால் காசு, அரைக்காசு, ஒரு காசெனவும் உள்ளன. இக்காசுகளை செண்டுகளென்பர். இவைகள் நோட்டுகளினாலும் சிலாவணியாகின்றன. இவை பத்து செண்டு நோட்டாகவும் ஒரு டாலர், ஐந்து டாலர், பத்து டாலர், நூறு டாலர் நோட்டுகளாகவும் உள்ளன. டாலர்களை வெள்ளியெனவும், ஐம்பது தாம்பிரக் காசு வெள்ளி நாணயத்தை ஷிலிங்கெனவும் கூறுவர். இந்தியாவின் ரூ 155 இந்நாட்டின் 100 வெள்ளியெனப் பணமாற்றுதல் ஏற்படுகின்றது. சில சமயங்களில் இவை ஏற்றக்குறைவும் கொள்கின்றன. இந்தியாவிற்குப் பணம் அனுப்புவர்கள் ரூபாய்க்கு ஈடாக அவ்வவ்வமயம் ஏற்படும் டாலர் விகிதம் கொடுக்கல்வேண்டும். இவைபோலவே அங்கிருந்து பணம் அனுப்புவோர்கள் இவ்விதத்திற்கே ரூபாய்கள் கட்டல்வேண்டுமென்றும் சொல்வர். இந்நாட்டின் துறைமுகங்களாக பினாங்கு, ஸ்வெட்டன்ஹாம், மலாக்கா, சிங்கப்பூர் உள்ளன. இவை தவிர்த்துப் பல சிறு துறைமுகங்கள் நாட்டினர்களின் வசதிக்கு உள்ளனவெனவும் தெரிகின்றது. எனவே பல பாகங்களில் கப்பல் ஆபீசுகளும், பாங்கிகளும் பெருகிக்கிடக்கின்றன.

இம்மலைய நாட்டின் வான்துவிக மக்களை சாகெய் எனக் கூறினோம். இவர்கள் நீக்கிரோ வகுப்பைச் சார்ந்தவர். இவர்களின் உறவின் முறையார்கள் பிலிப்பினியரெனவும், அந்தமானீயரெனவும் சொல்லப்படுவர். எனினும் இவர்கள் நாகரிகமற்ற முறைகளிலேயே இன்னும் உள்ளாரென்பது ஒரு பெரும் ஆச்சரியம். தேன் கூண்டுகளை ஒத்த முறையில் பனையோலையினால் தம் விடுதிகளை ஏற்படுத்திக்கொண்டும், சிலர் இவ்விடுதிகளைப் பெரும் மரங்களின் கிளைகளில் கட்டிக்கொண்டும், இரவில் குளிரற்று நித்திரையைக் கொள்வதற்கு நெருப்புகளை மூட்டிக்கொண்டும், தமது உணவாகிய அரிசியைப் பெரும்மூங்கிற் கணுக்களில் தயாரித்துக்கொண்டும், வழக்க பழக்கங்களுக்குப் போதுமான பாண்டங்களைக் கொண்டில்லாமலும், அப்படி ஏற்படநேரிடினும் மலையா அல்லது சீனப் பாண்டங்களில் ஒன்றிரண்டை வாங்கியும், உடை வசதிகளைக் கொண்டில்லாமல் மரவுடைகளையே தரித்தவர்களாகவும், புஷ்பங்களையும், குரங்குப் பல்களையும் ஆபரணங்களாகப் பூட்டிக்கொண்டும், பெரும் ஈட்டிகளையும், வில்லம்புகளை ஏந்தினவர்களாகவும், கிணறு வெட்டித் தண்ணீர் அருந்துவது பூமாதேவியின் கோபத்திலீடுபடக் கூடிய துன்மார்க்க வாழ்வெனக் கருதுபவராயும், இறந்தவர்களெல்லாம் வனதேவதைகளாகி விருஷ்டி முதலியவைகளை அளிக்கும் காரணக் கருவிகளாகிவிடுகின்றனரென நினைப்பவராயும், இவர்களின் பாஷை விபரீதமான முறையிலேயே அவர்களினுள் பழக்கங்கள் கொண்டிருப்பதாகவும் காணப்படுவர். இந்நீக்கிரோக்களில் சிறப்புற்றவர்களாக இருப்பவரே சாகெய் எனப்படுவர். இவர்கள் நீக்கிரோக்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாகவும் இலங்கையின் வேடர்களையும் இந்துசைனாவின் காட்டினத்தையும் ஒத்தவர்களாகவும், வீடு அமைத்துக்கொள்வதில் சிறிது சிறப்புற்றும், உணவுப் பண்டங்களைத் தயாரிப்பவர்களாகவும், வேட்டையில் பிரியம்கொண்டவர்களாகவும், ஊதுகுழல்களினால் பட்சிவேட்டையாடுவர்களாகவும், மதக்கொள்கைகளில் நீக்குரோவர்களைப்போலவே உள்ளவராகவும் கூறப்படுவர். இவர்களுக்கிரண்டாவதாக ஜாகூன் என்ற ஒருவகுப்பினர்களுமுள்ளார். இவர்கள் நீர்வளங்களில் படகு முதலியவைகளைக்கொண்டு ஜீவிக்க முயலுபவர்களாகவும், இன்னும் ஏனைய நாகரிகங்களில் மிக்க பின்பட்ட வாழ்வையே கொண்டிருப்பதாகவும் கூறுவர். இம்முத்திறத்தினர்களைவிட நான்காம் வகுப்பினமாக சுமத்திராவிலிருந்து குடியேறின மலையர்கள் சுமார் கி.பி. 1250-ம் ஆண்டில் இந்நாட்டினுட் புகுந்ததாகவும், இவர்கள் தென் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்திருத்தல் வேண்டுமெனவும், நாளாவட்டத்தில் நாகரிக முறையைத் தழுவலுற்பட்டும், சூதாட்டம், சேவற் சண்டை, அபினி முதலியவைகளில் மிக்க ஊக்கம்கொண்டும், விவசாயம், பழவகை தயாரித்தல், தென்னை, கமுகு, வெற்றிலை, ஜாதிக்காய் முதலியவை பயிரிடுதல் என்பனவற்றில் சிறப்புற்றும், பலா, மா, வாழை, மங்குஸ்தான் முதலிய பழவகைகளை ஏராளமாக உண்டாக்கிப் பல பாகங்களுக்கு அனுப்புவதில் சிறந்தும், வீடு முதலியவைகளை நன்முறையில் அமர்த்தியும் உணவுப் பண்டம் தயாரிக்கும் பாண்ட வகைகளைச் செய்துகொண்டும், தமது மத மார்க்கமாக இல்லறத்தைத் தழுவியும் இருப்பாரென்றும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கட்டாயம் தொழல் வேண்டுமெனவும், அவ்வண்ணம் மூன்று வாரம் ஒருவன் செய்யத் தவறினால் அவனுக்கு அபாரதம் விதிப்பதெனவும், மசூதித் தொழுகைக்கு நகருக்களை அடித்து மக்களை அழைப்பதெனவும், தினப்பிரதி ஒவ்வொருவரும் தொழுகை நடத்துவதில் தம் இல்லங்களில் பின்படுவதில்லையெனவும், பெண்மக்கள் மசூதிவழிபாடு, தொழுகை முதலியவைகளிலிருப்பது இல்லையெனவும், இவர்களின் சுதேச மன்னர்கள் பலபாகங்களில் உள்ளார்களெனவும் குறிப்பிடப்படும். இவர்கள் மட்பாண்டங்கள், வெள்ளி வேலைகள், சரிகை வேலைகள் செய்வதில் மிகச் சிறந்துள்ளாரென்பதை இவ்வமயம் உலகம் அறியும். இந்நாட்டின் சுல்தான்களும் நவாப்புகளும் விலையுயர்ந்த உடைகளைத் தயாரிப்பதில் பயற்சி கொண்டிருந்த சமயம் குடிமக்கள் இவ்வுழைப்புகளில் பெருகி வேலைகளில் நுட்பங்களையும் சிறப்புகளையும் கொள்ளலாகினர். இவ்வமயம் சரிகைவேலைகள் கொண்ட உடைப் பித்து பலர் கொண்டில்லாதிருந்தும், மேல் நாட்டு அலங்காரங்களுக்கென ஏராளமான வேலைகள் ஏற்படுவதினால் இம்மக்களின் பிழைப்பு ஆண் பெண் என்ற இரு வகுப்பிற்கும் ஜரிகை வேலையிலும், வெள்ளி சாமான் வேலையிலும் திறம்பட்டு முன்னேறி வருகின்றது.



ஐந்தாம் குடியினமாக உள்ள சீனரைக் கவனிப்பின், இவர்கள் சீனாவிலிருந்தே குடியேறியிருத்தலவசியம். சென்ற நூறு வருட காலமாக இவர்களின் முன்னேற்றம், மெத்த சீரையும் சிறப்பையும் கொண்டுள்ளதென்பர். இவ்வமயம் இவர்கள் மலைய நாட்டில் பெரும் வியாபாரிகளாகவும் ஏனைய நாகரிகத் துறைகளில் முன்னேற்றமடைந்தும் உள்ளவராகக் காணப்படுகின்றனர். எனவே இவர்களில் பலர் மலையாவிலேயே பிறந்து வளர்ந்து மலைய சீனர்களாகி விட்டுள்ளனர். இவர்கள் குடிபுகும் சீனர்களெனவும், மலைய சீனர்களெனவும் இரு வகுப்பாகியுள்ளார் எனக் கூறப்படுகின்றனர். குடிபுகுபவர்கள் தென் சீனத்தினர் என்பர். இவர்கள் கைத் தொழிலாளிகளாகவும், சுரங்க வேலைக்காரர்களாகவும், வியாபாரிகளாகவுமுள்ளனர். விவசாயிகளாகவும், தகர வேலைக்காரர்களாகவும், கொடுக்கல் வாங்கல் அடமானம் ஏற்படுத்தல் முதலியனவைகளிலுள்ளவர்களை ஹாகாக்கள் என்கின்றனர். தோட்டத் தொழிலில் ஈடுபடுவர்கள், கடை வியாபாரிகள்

டியோசு எனப்படுகின்றனர். இவர்கள் சுவாதோவிலிருந்து வருபவர்களென்பர். அமாய், புசோ முதலிய பாகங்களிலிருந்து வருபவர்கள் வியாபாரிகளாகவும், காய் கறி தயாரிப்பவர்களாகவும், ரிக்ஷா வண்டி இழுப்பவர்களாகவும் இருப்பர். இவர்களை புகானியர்களென்கின்றனர். வீட்டு வேலைக்காரர்களாக அமருகின்றவர்களும், ஏனைய சில்லரை வேலைகளில் ஈடுபடுபவர்களும் ஹைலாம் அல்லது ஹாயனீயர்களெனப்படுகின்றனர். இவர்கள் எல்லாம் தத்தம் பிரிவினைப் பிரகாரம் பாஷையைக்கொண்டுள்ளனர். எனினும் வழக்க பழக்கத்தில் வித்தியாசமில்லாமல் பெருகிக் கிடக்கின்றனர். முன் நாட்களில் குடியேறினவர்கள் தம் பெண்டு பிள்ளைகளை இட்டுவருவதில் பின்பட்டிருந்தனர். இதில் ஹாயனீயர்கள் பெண்களை அழைத்து வரலாகாதென வரம்புகள்கொண்டிருந்தனர். எனினும் கால அளவில் இவைகள் எல்லாம் மாறுபடலாயின. இச்சீனர்களின் காரணத்தினாலேயே மலேய நாடு செழிப்புறலாகியதெனச் சரிதைகள் கூறுகின்றன. கூலிகளாக வந்த சீனர்கள் பலர் பெரும் செல்வந்தர்களாகி விட்டனர். தகரச் சுரங்களைத் தயாரிப்பது, ரப்பர் வியாபாரம் செய்வது, மிளகு முதலியவைகளை ஏற்றுமதி செய்வதில் மிகச் சிறந்துள்ளனர். இவர்களின் சிறந்த மாளிகைகளும், கோயில்களும் இவர்களின் செல்வத்திற்கு அறிகுறியாக உள்ளன. பொதுஜன ஊழியத்திற்கென தம் மக்களுக்குப் பெரும் பொருள்களை சீனர்கள் நன்கொடை யளிப்பதில் கீர்த்திவாய்ந்தவர்கள். மதப்பற்றுதலில் இவர்களின் ஊக்கமும் பக்தியும் ஏனைய மத உலகங்களைவிடச் சிறப்புறலாகி வருகின்றன. கல்விக்கெனப் பள்ளிகள், கலாசாலைகள் தயாரிப்பதிலும் பெரும் தன் முயற்சியைக் கொண்டுள்ளனர். இவர்கள் தம் வீடுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் ஊக்கம்கொண்டவர். விவாகம், சாக்காடு முதலிய சடங்குகளின் செலவுகளை வீண்செலவுகளாகவோட்டாமல் குறுக்கி மீதியை மக்களின் பொதுஜன வாழ்விற்கு உபயோகப்படுத்துவதில் இணையற்றவர். அரசியல், தத்துவ ஆபீஸுகளில் கிராணிகளாகவும், பாங்கிகளிலும், வியாபார ஆபீஸுகளிலும் இருப்புப்பாதை, துறை முக ஆபீசுகளிலும் இராயசக்காரர்களாகவும், டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், இன்ஜினீயர்களாகவும் முன்பட்டுள்ளனர். கிரிக்கெட்டு, புட்பால், டென்னிஸ், பில்லியர்ட்ஸ் முதலிய விளையாட்டுகளிலும் சீனர்கள் முற்பட்டுச் சிறப்புற்றிருப்பதுமன்னியில், சினிமா காட்சி முதலியனவைகளையும் தயாரிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். இவர்களைப்போல் குடியேறியுள்ள தமிழர், ஏனைய இந்தியர்கள் மலேய நாட்டில் இவ்விதம் சிறப்புறவில்லை யெனவே காணப்படுகின்றது. எனினும் இவர்களின் நிலைகளை இந்நாட்டின் நகரச் சிறப்புகளிலும் ஏனைய குறிப்புகளிலும் குறிப்பிடுவாம்.

(தொடரும்)

# கோடை விடுமுறை.

(சிறு கதை.)

“விடுமுறை நாட்களும் வந்துவிட்டனவே! இந்த வருஷமும் எங்கும் போவதாக எண்ணமில்லையோ?” என்று மங்களம் தன் கணவன் சீனிவாசய்யரிடம் கேட்டாள். அவர் மேஜையின் மீதிருந்த கண்களை எடுக்காமலே அவளுரைத்தது காதில் படவில்லைபோல் “என்ன” என்று கேட்டார். மங்களத்தின் முகத்திலிருந்த களை சிறிது குறைந்தது. “இல்லை. இந்த வருஷமாவது கோடை லீவுக்கு ஏதாவது குளிர் ஊருக்குப் போகலாமோ, சௌகரியப்படுமோ என்று கேட்கிறேன். இந்த வருஷம் ரொம்ப வெய்யில் அதிகமாயில்லையா? குழந்தைகள் சுருண்டுபோகிறதுகள். பிடி சாதம் சாப்பிடுகிறதில்லை. தாகம் தாகமென்று தீர்த்தத்தைக் குடித்துவிட்டு ஒரு பருக்கை வாயில் வைக்கிறதில்லை. உங்களுக்கும்தானாகட்டும், ஏதாவது ஊர்மாற்றல் இருந்தால் நல்லதுதானே. இந்த ஊரைவிட்டு நாம் எங்கே போகிறோம்” இவ்வளவு தூரம் மங்களம் சொன்ன பிறகும் சீனிவாசய்யர் பதில் ஒன்றும் கூறாமல் “இவ்வளவுதானா, இன்னுமுண்டோ” என்று கேட்பதுபோல் அவளை நோக்கிக்கொண்டிருந்தார். மங்களத்தின் முகம் இன்னும் வாட்டமடைந்தது. “ஏன்! போகிறதென்றால் பிடிக்கவில்லையோ? என்னமோ. ஒவ்வொரு அகத்துப் புருஷர்களும் தாங்களாகவே பெண்டாட்டி குழந்தைகளை யழைத்துக்கொண்டு ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும் போகிறார்கள். நமக்கும் குழந்தைகள் இருக்கிறதுகள். அதுவும் சாதாரணக் குழந்தைகளைப்போல் குண்டுகுண்டாக இருந்தால் சொல்லமாட்டேன். ரொம்ப பூஞ்சை சரீரமாக இருக்கிறதுகள். அதுகள் சௌக்கியத்திற்காகச் சொன்னால்கூட உங்களுக்குப் பிடிக்கிறதில்லை.” “யார் பிடிக்கவில்லை யென்று சொன்னார்கள்? எல்லாவற்றையும் நீயேசொல்லிக்கொண்டால் அப்புறம் நான் என்னசொல்ல இருக்கிறது?” “பின் என்ன? ஒரு நாளாவது ஒரு சமாசாரம் சொன்னால் காதில் வாங்கிக்கொள்கிறது, முடியும், முடியாது என்று சொல்வது கிடையாது. இப்படித்தான் ஆத்துக் காரியம் பாதியும் கெட்டுப்போகிறது. நான் என்ன ஒவ்வொரு பெண்டுகளைப்போல் அனாவசியமாகச் செலவழிக்கச் சொல்லுகிறேனா? விதவிதமாகப் பட்டும் பருத்தியுமாகவாங்கிக் குழந்தைகளுக்குத் தைத்துப்போட்டு கிழிக்கிறேனா? வேளைக்கொரு நகை வைரத்திலும், சிகப்பிலும் பண்ணிப்போட வேண்டுமென்கிறேனா? ஏதோ அதுகள் ஆரோக்கியத்திற்கும் சௌக்கியத்திற்குமாகச்சொல்லுகிறேன். நேற்றுபக்கத்தாத்து வெங்கடராமய்யர் பிள்ளை நடராஜனிடம் வந்து தாங்கள் கொடைக்கானலுக்குப் போகப்போகிறதற்காக சொல்லிக்கொண்டு போனான். இதுவும் குழந்தையாயிற்று, “நாங்கள்கூடக் கொடைக்கானலுக்குத்தான் வரப்போகிறோம்” என்று சொன்னது என் காதில் விழுந்தது. அதுகளுக்கும் ஆசையாக விருக்கிறது. நமக்கும் இதற்கெல்லாம் சக்தியில்லையா. ஏதோ ஈசுவரன் கொடுத்திருக்கிறார். நீங்களும் வேண்டியது தானதருமமாகச் செலவழிக்கவில்லையா? இந்த ஒரு விஷயம் அதுவும் குழந்தைகள் சௌக்கியத்திற்காகச்சொன்னால் காதில்வாங்கிக் கொள்ளக்கூடாதா?” “மாட்டேனென்று நான் சொல்லவில்லையே! நீ தடதடவென்று லெக்சர் பண்ணுகிறாயே! அனாவசியச் செலவென்று யார் சொன்னது? போவோம்.”



மங்களம் சிறிது கோபத்துடன் “போவோமென்று சாவதானமாகச் சொல்லுகிறீர்கள். எல்லாரும் லீவு விட ஒரு மாதமுன்னமேயே அங்கங்கு வீடமர்த்திக்கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு லீவுவிட்ட அன்று இரவே புறப்பட்டுப்போகிறார்கள்.”

“எல்லாரையும்போலவேதான் நாமுமிருக்க வேண்டுமோ? கொஞ்சம் பிசகினால்கூட பிசகு நானா.”

“ஆம். ‘ஊருடன் ஒக்க ஓடு’ என்று கேட்டதில்லையா? அது எப்படியாவது போகட்டும். இப்படியே காரியமாகாதபடி பேசினால் என்ன செய்வது? உங்களுக்குச் சம்மதமானால் போகலாம். இல்லை.யென்றால் இருக்கவே யிருக்கிறது. இரண்டுக்குள் ஒன்று முடிந்தால்தானே தேவலை.” இந்த சமயத்தில் சீனிவாசய்யர்

குழந்தை போன்று சிரங்கின் தொந்திரவால் அழுதுகொண்டு மங்களத்தினிடம் வந்தது. அவள் இவ்வளவு சொன்ன பிறகு சீனிவாசய்யரும் மங்களம் சொல்லும் காரணங்களை யோசித்துப்பார்த்து, போவதென்று தீர்மானித்தார். எந்த விடத்திற்குப் போவதென்று யோசனை வந்தது. மங்களம் கூறிய வரையில் அதிகச் சிலவு ஆகவேண்டாமென்று நினைத்து "ஊட்டி, கொடைக்கானலென்றால் ஏகமாகச் சட்டை, கம்பளி முதலியதுகள்வேண்டும். ஆள்படைகள் அதிகமாகவேண்டும். நம்மகத்து இன்னொரு சமயற்காரன் கூட ஊருக்குப் போகவேண்டுமென்று சொல்லி ஒற்றைக்காலில் நின்று ஊருக்குப்போய் விட்டான். ஆனதினால் பெங்களூர் போவது அதிக சிரமமில்லையென்று நினைக்கிறேன், இருக்கிற சமயற்காரனையும் கூட ஒரு சிறு பையனையும் அழைத்துக்கொண்டு போனால்போதும். கடைக்குப் போக, துணிமணிகள் தோய்க்க, மற்ற வேலைகளுக்கு சூத்திர ஆள் வேதாசலத்தையும் அழைத்துப் போவோம். வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் இருக்கும், மற்றவர்களுக்குச்சமைத்துப்போடவும், பூஜை வாத்தியாரையும் அவர் மனைவியையும் வைத்துவிட்டுப் போகலாம். இன்று மத்தியானம் சட்டைக்குக்கம்பளியும் மற்ற் அவசியமான சாமான்களையும் வாங்கி வரவேண்டும்."

அப்படியே தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நாளைக்கெல்லாம் வீடமர்த்தியாகிவிட்டதென்று சீனிவாசய்யர் நண்பரிடமிருந்து தந்தி வந்தது. ஒரு நாள் தாமசமானாலும் விருதாவாகிவிடுமென்று மங்களம் எண்ணியிருந்ததால் எல்லாம் தயாராகச் சேகரிக்கப்பட்டிருந்தன. தந்தி வந்த தினமே ஆட்களையும் சாமான்களையும் பெங்களூருக்கு அனுப்பி விட்டனர். மறுநாட் காலை மோடாரிலேயே பெங்களூர் போய்விட உத்தேசித்து, பத்து மணிக்கே போஜனம் முடித்துக்கொண்டு, குழந்தைகளுக்கு வேண்டிய சிற்றுண்டிகளையும் கையிலெடுத்துக்கொண்டு சீனிவாசய்யரும் மங்களமும் தங்கள் மூன்று குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு மோடாரில் புறப்பட்டார்கள். சாயங்காலம் நாலு மணி சுமாருக்கு பெங்களூர் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு இவர்கள் வரவைத் தந்தி மூலமாகத் தெரிந்து கொண்டிருந்த சீனிவாசய்யர் நண்பர் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார். ஒருபொழுதும் தான் விரும்பியவை நடக்காததே வழக்கமாகியிருந்த மங்களத்திற்குத் தன் கணவன் தான் சொன்னதற்கு சம்மதித்து அழைத்து வந்தது அளப்பரிய ஆனந்தத்தைக் கொடுத்தது. அங்கு போன பின்பு ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கு வெயிலினாலேற்பட்ட சிரமத்தையும், இளைப்பையும், இப்பொழுது நாளுக்கு நாள் தேறி வருவதையும் கூறுமலிருப்பதேயில்லை. சீனிவாசய்யரும் "வருகிற வருஷத்திற்கும் இப்பொழுதே அடிப்போடுகிறாயாக்கும்" என்று பரிகாசம் செய்வார். ஆனால் உண்மையில் அவருக்கும் வந்ததில்லையென்று சொல்ல முடியுமோ. கண்களுக்கினிய காட்சியும், ஆரோக்கியமும், எப்பொழுதாவது திருப்தியையளிக்கத் தவறுமோ ?

# பலமணிக் கோவை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

(576-வது பக்கத் தொடர்ச்சி)

## 27. ஸ்டாண்டர்டு டயம் என்பது என்ன?

25-ம் விடையிற் சொல்லியபடி எல்லோரும் ஒற்றுமைப்பட்டு ஒப்புக்கொண்ட டயம் ஸ்டாண்டர்டு டயம் எனப்படும். அதாவது நமது தேசத்தில் ரயில்வே டயம் ஸ்டாண்டர்டு டயத்திற்கு எட்டு நிமிஷம் அதிகமானது. எல்லா ஊரிலும் இந்த டயம் பிரகாரம் அனுசரிக்கப்படும். இந்த ரயில்வே டயம் சென்னைப்பட்டணத்தில் லோகல் டயமாக இருக்கிறது. அதாவது சென்னையில் லோகல் டயம் என்பது ஸ்டாண்டர்டு டயத்திற்கு எட்டு நிமிஷம் அதிகமாயிருக்கும். ஆகவே சென்னைப் பட்டணத்தின் லோகல் டயம் எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும் அனுசரிக்கப்படும். உதாரணமாக சென்னையிலிருந்து மங்களூர் பிரயாணம் செல்வோம். நமது கை கடியாரத்தைச் சென்னை சென்டிரல் ரயில்வே ஸ்டேஷனில் சரியானபடி திருத்திக்கொள்வோம். சுமார் இருபத்துநாலு மணி நேரம் பிரயாணம் செய்த பிறகு மங்களூர் சேர்ந்தவுடன், ரயில்வே ஸ்டேஷனில் உள்ள கடியாரமும் நமது கடியாரமும் ஒரே நேரம் காட்டும். ஆனால் ஊருக்குள் சென்ற பிறகு உள்ளூர் லோகல் டயம் நமது கடியார டயமாக இருக்கிறதில்லை. நமது கடியார டயத்திற்கு (அதாவது சென்னை லோகல் டயத்திற்கு) சுமார் 20 நிமிஷம் பிந்தியிருக்கிறது மங்களூர் லோகல் டயம். சென்னையிலிருந்து ரங்கூன் பிரயாணம் செல்வோம். அப்போது சென்னை லோகல் டயத்தைவிட ரங்கூன் லோகல் டயம் முந்தியிருக்கிறது. சுமார் 20 நிமிஷம் முன்னதாக இருக்கும். அதாவது சென்னையில் பகல் 12 மணியாயிருக்கும்போது, மங்களூரில் 11-40 ஆகவும், ரங்கூனில் 12-20 ஆகவும் இருக்கிறது. 24-ம் விடையில் சொல்லிய விதம் கிழக்கே பிரயாணம் செய்யச்செய்ய நாம் புறப்பட்ட ஊரின் லோகல் டயத்திற்கு அதிகமாகப்பார்க்கிறோம்; மேற்கே செல்லச்செல்லக் குறைவாகப் பார்க்கிறோம்.

இந்த லோகல் டயம் வித்தியாசம் இவ்விதம் இருப்பதால், பொது வியவகாரங்களில் கஷ்டமும் சந்தேகமும் ஏற்படாவண்ணம் ஸ்டாண்டர்டு டயம் என்று ஒரு நேரத்தை ஒப்புக்கொண்டு அதை அனுசரிக்கிறோம். ரயில்வண்டிகள் புறப்படும் நேரம் எப்போதும் சென்னைப் பட்டண லோகல் டயத்தில் சொல்வது. பஞ்சாங்கத்தில் சூரிய உதய அஸ்தமனம், நட்சத்திர உதயம் முதலிய ஸ்டாண்டர்டு டயத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக கும்பகோணமடத்து சிரௌதிகள் பஞ்சாங்கத்தில் ஸ்டாண்டர்டு டயத்தில் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது பார்க்கலாம். ஸ்வதேச டயம் (லோகல் டயம்) வேறு. ஸ்டாண்டர்டு டயம் வேறு.

## 28. தண்ணீர்ப் பானையைச் சுற்றிலும் துணி கட்டி வைப்பதால் ஜலம் ஜில்லென்று இருப்பது எவ்வாறு?

நாம் சட்டை போட்டுக்கொண்டிருப்பதால் நமது தேகத்து உஷ்ணம் எவ்விதம் வெளிச் செல்லாமலிருக்கிறதோ அது போலவே தண்ணீர்ப் பானை சட்டை போட்டுக்கொண்டிருப்பதால் அதன் ஜில்லிப்பு வெளிச் செல்லாமலி

ருக்கிறது. துணி சுற்றி வைப்பது ஒரு சுவர் போல என்று முன்னமேயே சொன்னோம். அதாவது வெளியே யிருந்து உஷ்ணம் உள்ளே வராது, உள்ளே யிருந்து உஷ்ணம் வெளியே போகாது. ஆகவே நமது உடல் உஷ்ணம் வெளியே போகாமல் சட்டை போட்டிருக்கிறோம். வெளியே யிருக்கும் உஷ்ணம் தண்ணீர்ப் பானையைத் தாக்கி உள்ளே செல்லாமல் பானைக்குத் துணிசுற்றி வைக்கிறோம். கம்பளி, பிளானல் முதலிய சட்டைகள் நாம் போட்டுக் கொண்டு நமது உஷ்ணத்தை வெளிவிடாமற் காப்பாற்றுகிறோம். அதே கம்பளி, பிளானலைக் கொண்டு பனிக் கட்டியைச் சுற்றி வைத்தால் அந்தப் பனிக்கட்டி உருகாமல் இருக்கும். நமது உஷ்ணத்தைக் காப்பாற்றுவதுபோல பனிக் கட்டியின் ஜில்லிப்பைக் காப்பாற்றுகிறது. அதாவது காற்றின் உஷ்ணத்தைக் காப்பாற்றுவதால் பனிக் கட்டி ஜில்லென்றே இருக்கிறது.

பொதுவாக பருத்தி ஆடையை விட கம்பளம் உஷ்ணத்தைக் காப்பாற்றும் என்று சொல்வோம். அதாவது பருத்தித் துணியை விட கம்பளி அல்லது பிளானல் கெட்டியான சுவர் என்று பொருள். பிளானல் வழியாக உஷ்ணம் வெளிச் செல்வது சற்று கஷ்டம்.

### 29. கல் அமிழ்வதேன், கட்டை மிதப்பதேன்?

பூமியின் மீது உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் கனம் உண்டு என்று முன்னமேயே சொன்னோம். அதாவது பூமி ஒவ்வொரு பொருளையும் தன்னை நோக்கி இழுப்பதால் அந்தப் பொருளுக்கு கனம் ஏற்படுகிறது. இவ்விதம் பூமி இழுக்கும் சக்திக்கு என்ன பெயர் ஞாபகம் இருக்கிறதா? ஆகர்ஷண சக்தி என்று பெயர். நமக்கும் கனம் உண்டு, காற்றுக்கும் கனம் உண்டு, ஜலத்திற்கும் கனம் உண்டு, கட்டைக்கும் கனம் உண்டு, கல்லுக்கும் கனம் உண்டு. ஆனால் ஜலத்தை விட கல் அதிக கனம். ஜலத்தை விட கட்டை குறைந்த கனம். குளத்தில் கல்லைப் போட்டால் கல் அமிழ்கிறது; ஆகவே குளத்து ஜலத்தைவிடக் கல் கனம் என்று உடனே சொல்லி விடலாமா? குளத்து ஜலம் எவ்வளவு, கல் எவ்வளவு! வாஸ்தவம் என்னவெனின், அந்தக் கல் அடைக்கும் இடத்தில் உள்ள ஜலம் குறைந்த கனம் என்று சொல்லவேண்டும். அதாவது சரிக்குச் சரி கல் கனம் கல் சரியாகக் கொள்ளும்படியான ஒரு தகர டப்பாசெய்து அதில் எவ்வளவு ஜலம் கொள்ளுமோ அந்த ஜலம் கல்லை விடக் கனம் குறைவு. ஆதலால் கல் பூமியை நோக்கி ஜலத்தினுள் கீழே போகிறது. ஆனால் கட்டை அவ்விதமில்லை. கெட்டி ஜலத்தை விட லேசானது. அந்த கெட்டியின் பருமனுக்குச் சரியாக ஜலம் எடுத்து நிறுத்தால் கெட்டியை விட ஜலம் கனம் அதிகம்.

ஒரு வீசை கெட்டியும் ஒரு வீசை ஜலமும் ஒரே கனமுள்ளது தான். ஒரு வீசை இரும்பு கனமா, ஒரு வீசை பஞ்சு கனமா என்று கேட்டால் என்ன சொல்வாய்? இரண்டும் ஒரே கனமுள்ளது. ஆனால் இரும்பு அதிக இடம் அடைக்காது, பஞ்சு அதிக இடம் அடைத்துக் கொள்ளும். அதிக இடம் அடைத்துக் கொள்வதைப் பார்த்து நாம் சந்தேகித்து மயங்கி விடுகிறோம்.

---

190380

## இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924௵ ஆகஸ்டு௴ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்பிரவரி௴ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செவிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செவிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாப்பூர், சென்னை.

---

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

---

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செங்கலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடனே புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுதித்துள்ள பெண் மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப்பெறும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

## தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார் :—

20—1—1926.

*சகோதரி வி. பாலம்மாளுக்கு,*

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸாகேத ராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்கிருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுமுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஜீவன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீரென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

### (ஒரு சகோதரர் எழுதுவது.)

*அம்மா .*

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

### (ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

*ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.*

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

### 4-8-26 ல் F. M. S. லிருந்து ஸ்ரீமதி சொர்னலக்ஷ்மி எழுதுவது :—

*சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.*

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.